பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 08 வியாழக்கிழமை (21.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 056

## தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதையும் தெளிவுபடுத்தாத

# இரு பிரதான வேட்பாளர்கள் இனியாவது தமது தீர்வுத் திட்டத்தை வெளியிட வேண்டும்

## புத்திஜீவிகள் கடிதம் மூலம் கோரிக்கை

கொழும்பு, ஜனவரி 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் தமது விஞ்ஞாபனத்தில் சிறுபான்மை சமூகங்களின் நீண்ட கால அரசியல் அபிலாஷைகள் குறித்த விடயம் சம்பந்தமாக எதனையும் தெரிவிக்காதமையைச் சுட்டிக் காட்டி அவர்களுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள நாட்டின் புத்திஜீவிகள் குழுவொன்று, தேசிய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த விடயத்திற்குத் தீர்வுகாணத் தவறுவது நாட்டின் எதிர்காலத்திற்குப் பாதகமாக அமையும் என்றும் எச்சரித்துள்ளது. (23 ஆம் பக்கம் பார்க்க )

## கண்காணிப்பாளர்களின் வருகை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 21

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஆசிய கண்காணிப்பு அதிகார சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை வந்துள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் தீவில் உள்ள 11 இலங்கையர் மீது வழக்கு

கொழும்பு, ஜன. 21

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளில் கிளர்ச்சி நடத்திய இலங்கையர்கள் 11 பேருக்கு எதிராக அந்நாட்டுப் பொலிஸார் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தானியர் மற்றும் இலங்கையர்களுக்கிடையில் கிறிஸ்மஸ் தீவுத் தடுப்பு முகாமில் மோதல் இடம்பெற்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவதால் மக்கள் வாக்களிக்க அஞ்சும் நிலை வரலாம்

### முன்னெச்சரிக்கை செய்கின்றன கண்காணிப்பு அமைப்புகள்

கொழும்பு, ஜன. 21

தேர்தல் வன்முறைகள் இதே வேகத்தில் தொடர்ந்தால் ஜனவரி 26 ஆம் திகதி மக்கள் வாக்களிப்பதற்காகச் செல்வதற்கு அஞ்சும் நிலை உருவாகலாம் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவலகத்தின் (ஐரின்) செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்துள்ள இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மேலும் (24ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைக்கல்ல, விசாரணைக்கு வேண்டி தமிழ்க் கைதி ஒருவர் உண்ணாவிரதம்

### புதிய மகஸின் சிறையில் வாடும் தேவதாசனின் நிலைப்பாடு

கொழும்பு, ஜன. 21

தமக்கு எதிரான வழக்கை வேண்டுமென்றே தாமதப்படுத்தி இழுத்தடிக்காமல் விரைந்து விசாரிக்குமாறு கோரி தமிழ்க் கைதி ஒருவர் கடந்த இரு வாரங்களாக கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் சாகும்வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு (24ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் ஐ.தே. கட்சிப் பிரமுகர்களின் தேர்தல் வாகனம் மீது தாக்குதல்; இருவர் காயம்!

யாழ்ப்பாணம்; ஜன. 21

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் முதலாவது தேர்தல் வன்முறை பற்றிய முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு கோரி கிளிநொச்சிக்குச் சென்ற ஐ.தே.கட்சி பிரமுகர்களின் வாகனம் மீது நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிக்கு கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனங்களில் சென்ற ஐ.தே.கட்சிப் பிரமுகர்கள் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுவரொட்டிகளை ஒட்டி, துண்டுப் பிரசுரங்களை வழங்கி (24ஆம் பக்கம் பார்க்க)

## நீதியும் சுதந்திரமுமான தேர்தலுக்கு வாய்ப்பு இல்லை என ஐ.தே.க. அச்சம்

### பொன்சேகா-சம்பந்தன் ஒப்பந்தம் எனக் கள்ள ஆவணமும் தயாரிப்பாம்

கொழும்பு, ஜன். 21

அரசின் செயற்பாடுகள் மற்றும் தேர்தல் வன்முறைகள் காரணமாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தாம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச அழுத்தங்கள் காரணமாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை முன்னெடுக்க (23 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு: கத்தோலிக்க ஆயர்களும் கவலை

கொழும்பு, ஜன. 21

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் இவ்வேளையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றமை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

வன்முறைகள் அதிகரித்து வருவதால் நீதியானதும், சுதந்திரமானதுமான ஒரு தேர்தலை முன்னெடுக்க முடியாமல் போகும் என மன்றம் (24ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் கைதிகளின் விடுதலை கோரி

## வெலிக்கடைச் சிறையின் முன் நாளை மறியல் போராட்டம்

கொழும்பு, ஜன. 21

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவசரகாலச் சட்ட நீக்கம் உட்பட முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை முன்பாக மறியல் போராட்டமொன்று நாளை நடைபெறவுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவல், விளக்கமறியலிலிருந்து நேற்றும் இன்றும் 102 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 21

தடுப்புக்காவலில் உள்ள 102 சந்தேக நபர்கள் நேற்றும், இன்றும் விடுதலை செய்யப்பட அல்லது புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்படவிருந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பூஸா, கொழும்பு விளக்கமறியல் சிறை மற்றும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களிலேயே ஒரு தொகுதியினர் இவ்வாறு விடுவிக்கப் (24ஆம் பக்கம் பார்க்க)




noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 100 கி.மீ. வீதியை புனரமைக்க உலக வங்கி நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜன. 21

வடக்கு மாகாணத்தில், யாழ்.மாவட்டத்தில் நூறு கிலோமீற்றர் வீதியைப் புனரமைக்க உலக வங்கி உதவி வழங்கவிருக்கின்றது.

இந்த உதவித்திட்டம் தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிதி, திட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் ரூபா 21 பில்லியன் ( 182 மில்லியன் அமெரிக்க டொலர்) மாகாண வீதித் திட்டம், வடக்கின் துரித மீட்சித்திட்டம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இணங்கியுள்ளது.

மாகாண வீதித்திட்டத்திற்காக வீதிகளைத் தரமுயர்த்தும் பொருட்டு ரூபா 12 பில்லியன் ( 105 மில்லியன் டொலர்) செலவிடப்படவுள்ளது. இதில் ஊவாமாகாணத்தில் 150 கி.மீ. நீளமான வீதியும், கிழக்கு மாகாண அம்பாறை மாவட்டத்தில் 100 கி.மீ. வீதியும், வடக்கு மாகாண யாழ்ப்பாண மாவட்டத்தில் 100 கி.மீ. வீதியும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஊவா, கிழக்கு மற்றும் வடமாகாணங்களில் வீதி அபிவிருத்தியின் மூலம் மக்களின் சமூகப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதை இலக்காக கொண்டுள்ளது. இதன் மூலம் விவசாயத்தை தமது பொருளாதார வளமாகக் கொண்ட இம்மக்கள் தமது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலையை பெறக் கூடியதாக இருக்கும்.

உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளான வடக்கு மாகாண மக்களின் மீள்குடியேற்ற, மீள் நிர்மாணம் சம்பந்தமான அரசின் வேலைத்திட்டத்திற்கு வடக்கின் துரித மீட்சித்திட்டம் துணை நிற்கின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் அவசரப் பண உதவியின் மூலம் அவர்கள் தமது அழிவுற்ற வீடுகளை திருத்தி அமைக்கவும், தொழிலினை சிறிய அளவில் தொடங்கவும், அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்தவும் பெரிதும் உதவியாக அமையும்.



உலக வங்கி வதிவிடப் பணிப்பாளர் நகோ இஸ்கியினால், நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜெயசுந்தர ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபோது எடுக்கப்பட்ட படம். (ஓ)

அரசினால் திட்டமிடப்பட்ட ஐந்து கட்டங்களில், கட்டம் 3 மற்றும் 4ல் உள்ள ஒருலட்சம் உள்ளக இடம்பெயர்வுக்கான மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. இதற்காக உலக வங்கி ரூபா 7.5 பில்லியன் (65 மில்லியன் டொலர்கள்) ஒதுக்கியுள்ளது.

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள மிகவும் நலிவடைந்த, பெண்களை தலைவர்களாக கொண்ட, அங்கவீனமுற்றவர்களை கொண்ட குடும்பங்களுக்கு மேலும் 1.4 ரூபா பில்லியன்களை (12மில்லியன்டொலர்) மேலதிகமாக வழங்குவதற்கு உதியளித்துள்ளது. இத்தொகையானது இடம்பெயர்ந்த வடக்கு மக்களின் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத வாழ்க்கைத் தரமுன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும், நீர்ப்பாசன புனரமைப்புக்கும் பெரிதும் உதவியாக அமையும்.

மேற்படி மூன்று திட்டங்களுக்கான நிதியீட்ட உடன்படிக்கை நிதி, திட்டமிடல் அமைச்சின் சார்பாக நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி ப.வி. ஜெயசுந்தரவும், உலக வங்கியின் சார்பில் உலக வங்கி வதிவிடப் பணிப்பாளர் ந.கோ இஸ்கியினாலும் கடந்த 11 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது - என்றுள்ளது. (ஓ-1)

# தேர்தல் கடமை அலுவலகர்களுக்கு கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜன, 21

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ள அலுவலகர்களுக்கான கடிதங்கள் யாழ் செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளன. முதல் கட்டமாக வாக்கெடுப்பு நிலையங் களில் கனிஷ்டதலைமைதாங்கும் அலுவலர், எழுதுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சிரேஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களுக்கான நியமனக் கடிதம் யாழ் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-207)

# தென்மராட்சிக்கு 'கேபிள்' தொலைபேசி

யாழ்ப்பாணம், ஜன, 21

தென்மராட்சி பிரதேசத்திற்கான 'கேபிள்' தொலைபேசி இணைப்புக்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

ரெலிகொம் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதி ஊடாக கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கான கம்பங்கள் சாவகச்சேரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (ஓ-207)

# தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக்கூட்டம் நல்லூர் திவ்வியஜீவன மண்டபம் முன்பாக

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ஏற்பாட்டிலான ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்துக்கு முன்பாக உள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவர். (1-111)

# கரவெட்டி விக்னேஸ்வராவில் அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன, 21

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் 'இசுறு' பாடசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பாடசாலை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கௌரவவிருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்வர். (ஓ-1)

# பொன்சேகாவின் கூட்டங்களில் குண்டு வைக்க எதிர்க் கட்சியினரே சதி என்கிறார் வீரவன்ஸ

## அனுதாப வாக்குகளைத் திரட்ட இப்படியும் எத்தனமாம்

கொழும்பு, ஜன. 21

மக்களின் அனுதாப வாக்குகளைப் பெறுவதற்காக சரத் பொன்சேகாவின் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் செய்தியாளர் மாநாடுகளில் குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்றுக் குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சிகள் தமது பிரசாரக் கூட்டத்திலும், ஊடகவியலாளர் மாநாடுகளிலும் குண்டுகளை வெடிக்கவைத்து அதன் மூலம் மக்களின் அனுதாப வாக்குகளைப் பெறுவதற்கான சதித்திட்டமொன்றைத் தீட்டியுள்ளன என அரசிற்குத் தகவல் கிடைத்துள்ளது.

குருநாகலில் நடைபெறவுள்ள சரத் பொன்சேகாவின் கூட்டத்திலும் குண்டை வெடிக்க வைப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

26 ஆம் திகதி வாக்காளர்களின் அடையாள அட்டைகளைத் திருடி விட்டு அதற்கான பழியை அரசு மீது போடுவதற்கும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினர் ஓய்வுபெற்ற இராணுவத்தினரையும் காடையர்களையும் பயன்படுத்துகின்றனர். மக்கள் இவற்றினால் அச்சமடையக்கூடாது.

வடபகுதித் தமிழர்கள் சரத் பொன்சேகா போன்ற இராணுவத் தலைவரை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அவருக்கு வாக்களிக்கவும் மாட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், அரசியலில் கண்மூடித்தனமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் நடந்துகொள்கிறார்.

சம்பந்தர் தம்மால் இயலுமானால், வடக்கு - கிழக்கு இணைப்பு, தமிழர் தாயகக் கோரிக்கை, உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படல் போன்றவற்றுக்குத் தாம் முழுமையாக எதிரானவர் என்பதைப் பகிரங்கமாகப் பறைசாற்ற முடியுமானால் அதைச் செய்து காட்டட்டும். - என்றார் விமல் வீரவன்ஸ. (அ-சி)

# சமய அறிவுப் போட்டிகளுக்கு விண்ணப்பம்

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் மாணவர்களுக்கு இடையிலான மாலை கட்டுதல், கோலம்போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளனர்.

மார்ச் 14 ஆம் திகதி நடைபெறும் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 3 ஆம் திகதி முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-207)


## வீடு வளவு விற்பனை

ஆனைப்பந்தி 4ஆம் ஒழுங்கையில் உள்ள (நிலபர.1 குளி 15) ஒருபரப்பும் பதினைந்து குளி பரப்பளவு உள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0777498271



## vacancy

**Pc House (Pvt) Ltd.**

Vacancy is available at PC House (Pvt) Ltd. For an accounts clerk (male age limit 21 - 35). Applicants should be present on Saturday 23 rd January 2010 at 10 a.m with all Cartificates to to the address. below: #01K, Stanley Road, Jaffna. 4920572, 222 4039,

**Qualifications: G.C.E. A/L, Work experience, Good knowledge for work with MS Office & Accounts packages (preferable).**


# தென்மராட்சியில் பிரசாரம் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜன, 21

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் முழு வீச்சில் இடம் பெற்று வருகிறது.

ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) கிராமம் கிராமமாகச் சென்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதேவேளை கைதடிப் பிரதேச மக்களுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமூக சேவைகள் சமூக நலத்தறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஓ-207)

# கரணவாய் ம.வியின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன, 21

கரணவாய் மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலைய அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணரும் கலந்து கொள்வர்.

பாடசாலை பற்சிகிச்சையாளர் திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார். (ஓ-1)


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர் சாதனப் பெட்டி விற்பனைக் குண்டு.

தொடர்பு: [illegible]

[illegible]


# அரசாங்க அறிவித்தல்

## தேர்தல் கடமைகளுக்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்

எதிர்வரும் 26.01.2010 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கடமையாற்றவுள்ள வலயத்தெரிவத்தாட்சி அலுவலர்களின் பாவனைக்கென இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் அல்லது பதின்நான்கு (14) இருக்கைகளுக்கு மேற்படாத வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளன. எனவே தங்களது வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கு விரும்பும் வாகன உரிமையாளர்கள் தமது விண்ணப்பங்களை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கமுடியும்.

நிபந்தனைகள்.

- ★ வாகன பதிவுச்சான்றிதழ் விண்ணப்பதாரியின் பெயரில் இருத்தல் வேண்டும்.
- ★ 2010 ஆம் ஆண்டுக்கான வாகனவரி அனுமதிப்பத்திரம்.
- ★ வலுவிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ்.
- ★ வாகனத்தை செலுத்துவதற்கான வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ வாகனம் பொறிமுறை ரீதியில் சிறந்த நிலையில் இருத்தல் வேண்டும்.
- ★ வாகனத்தின் இருக்கைகளும் அதன் தலைவிளக்குகளும் (Head Light) பயன்படுத்தக்கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்.
- ★ வாகனம் பயணம்செய்யும் துரத்தை கணிப்பிடக்கூடிய துரமாணி இயங்கு நிலையில் இருத்தல் வேண்டும். (Meter Reading)

ஒரு கிலோ மீற்றருக்கான கட்டண விவரம்

- ★ எட்டு (8) இருக்கைக்கு உட்பட்டது - பெற்றோல் வாகனம் - 40/=
- ★ எட்டு (8) இருக்கைக்கு உட்பட்டது - டீசல் வாகனம் - 34/=
- ★ தாமதமாகும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 15/= வீதம் கட்டணம் வழங்கப்படும்.
- ★ எட்டு (8) முதல் பதின்நான்கு (14) இருக்கைக்கு உட்பட்டது - பெற்றோல் வாகனம் - 46/=
- ★ எட்டு (8) முதல் பதின்நான்கு (14) இருக்கைக்கு உட்பட்டது - டீசல் வாகனம் - 39/=
- ★ தாமதமாகும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 25/= வீதம் கட்டணம் வழங்கப்படும்.

குறிப்பு: சேவைக்கு அமர்த்தப்பட்டு பயன்படுத்தப்படாது தரித்து நின்றால் அதற்காக ஆகக்குறைந்தது 50 கிலோமீற்றருக்கான கட்டணம் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 22.01.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னதாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) / உதவி ஆணையாளர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அவர்களிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

க.கணேஷ்,

தெரிவத்தாட்சி அலுவலர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வேட்பாளர்களின் தெளிவின்மையும் தமிழ் மக்களிடம் உள்ள தெளிவும்

கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டைப் பேரழிவுக்குள் ஆழ்த்தி நின்ற கொடூர யுத்தத்தில் இறுதியாக வென்று நாட்டில் அமைதியை நிலைநாட்டியதாக ஆளும் தரப்பு மார்தட்டிப் பெருமிதம் கொள்கின்றது.

அந்த வீர சாதனைக்காக - கீர்த்திக்காக - கைம்மாறாகத் தம்மை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்படியும் ஆளும் தரப்பு இந்தத் தேச மக்களிடம் பகிரங்கமாக இறைஞ்சுகின்றது.

ஆனால், முழு நாட்டையுமே இரத்தப் பிரளயத்துக்குள் ஆழ்த்தும் மிகக் கொடூரமான யுத்தம் இந்தத் தேசத்தில் வெடித்து மூளுவதற்குப் பிரதான காரணமாக - மூலமாக - அமைந்த தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் திசையில் ஓரடி கூட இந்தத் தேசத்தில் இந்த அரசினால் முன்னெடுத்து வைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

இந்த இலங்கைத் தீவை முற்றாகப் பற்றிப் பீடித்து நிற்கும் பிணியின் - நோயின் - மூலமே இனப்பிரச்சினைதான். அந்த நோயின் குணங்குறியாக வெளிப்பட்டவைதான் பல்வேறு வகையான போராட்டங்கள், இனக்கலவரங்கள், வன்முறைகள், அடக்குமுறை நடவடிக்கைகள், கொடூர யுத்தங்கள் போன்றவையெல்லாம். அந்த நோயின் ஒரு குணங்குறியான யுத்தம் என்ற பிரச்சினையையே தனது மிகக் கொடூரமான இராணுவ நடவடிக்கை என்ற கடுமையான - கொடுமையான - மருந்தின் மூலம் அடக்கியிருப்பதாகப் பெருமிதம் கொள்கின்றது தென்னிலங்கை அரசு. அதாவது, நோயின் மூலகாரணி அடக்கப்படவில்லை. நோயின் வெளிப்பாடான குணங்குறி ஒன்று மட்டுமே இராணுவ நடவடிக்கை என்ற மருந்தின் மூலம் அடக்கப்பட்டுள்ளது.

நோயின் மூலமான இனப்பிரச்சினைக்கு எந்த மருத்துவமும் செய்யப்படவில்லை. மாறாக நோயின் மூலமான இனப்பிரச்சினை இன்னும் மோசமடையக்கூடிய வகையில் இன அடக்கு முறை நடவடிக்கைகளைப் பரந்து, விரிந்து கட்டவிழ்த்து விடுகிறது ஆளும் தரப்பு.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் தேர்தல் போட்டா போட்டியில் சிக்குண்டு கிடக்கும் தென்னிலங்கைக்கு, இலங்கைத் தீவின் சிறுபான்மையினரான தமிழ்ப்பேசும் மக்களை வாட்டி, வதைத்து நிற்கும் தேசிய இனப்பிரச்சினையோ, அதனால் முழு இலங்கைத் தீவுமே எதிர்கொண்டு நிற்கும் அவல எதிர்காலமோ ஒரு பொருட்டாகத் தென்படுபவையாக இல்லை.

அதனால்தான் நாட்டின் அதி உயர் ஆட்சிப் பதவியான - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆசனத்துக்கு - ஒருவரைத் தெரிவு செய்யும் தேர்தல் போட்டா போட்டியின் போது கூட, நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முக்கிய விடயத்தை - அடிப்படை அம்சத்தை - முன்னிலைப்படுத்தாமல், சிறுபான்மையினரான தமிழர்கள் தரப்பை யுத்தம் மூலம் அடக்கி வென்ற பெரும்பான்மையினரின் புஜவலிமை பற்றிய விடயத்தை மட்டுமே தென்னிலங்கை தனது கருத்து மையமாக்கி நிற்கின்றது.

இதனையே நாட்டின் புத்திஜீவிகள் குழு ஒன்று இத் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களுக்கும் வேதனையோடும், பெரு விசனத்தோடும் கடிதம் மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

முழு நாட்டையுமே பற்றிப் பீடித்து இத்தேசத்தின் ஒரு பகுதியினரைப் பெரும் துன்ப, துயரத்தில் ஆழ்த்தி நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து இரு பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் விளக்கமாக - விரிவாக - திட்டவட்டமாக - தெளிவாக - உறுதியாக - ஏதும் குறிப்பிடப்படாமை குறித்து உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் பெரும் கவலையுடன் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. அதனையே புத்திஜீவிகள் குழுவின் தற்போதைய கடிதமும் வெளிப்படையாகப் பிரதிபலித்து நிற்கின்றது.

இரு பிரதான வேட்பாளர்களைப் பொறுத்தவரையிலும், நடந்து முடிந்த போரின் வெற்றிச் சாதனைக்கு - கீர்த்திக்கு - பெருமைக்கு - உரிமை கோருவதில் காட்டப்படும் போட்டி மனப்பாங்கில் வெளிப்படுகின்ற ஒத்த தன்மையே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது உத்தேச திட்டத்தை - தமது உள்ளக் கிடக்கையை - உள்நோக்கத்தை - வெளிப்படுத்தாமல் பின்னடிப்பதிலும் அவர்களால் காட்டப்படுவது கவனிக்கத்தக்கது.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவைப் பொறுத்தவரையிலாவது இந்தப் போக்குக்காகச் சற்று நியாயம் கூறமுடியும்.

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஆறு மாதத்தில் இல்லாதொழிக்கும் உறுதிமொழியை நிறைவேற்றும் தெளிவுடனேயே நான் களத்தில் குதித்துள்ளேன். நான் எந்தக் கட்சிக்கும் தலைவனோ, தனி ஒரு கட்சிப் பிரதிநிதியோ அல்லன். தனி ஒருவனாகத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வை நான் தர முடியாது. அதுபோல அந்தத் தீர்வு இதுதான் என்றும் என்னால் அறுதியிட்டுக் கூறமுடியாது. அடுத்த பொதுத் தேர்தலில் தெரிவாகும் புதிய நாடாளுமன்றமே அதனை முன்வைக்கமுடியும்' - என்று சரத் பொன்சேகா தரப்பில் வாதிடப்படலாம்.

ஆனால், மறுபுறத்தில், தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் நீடித்து, அடுத்த அரசையும் தாமே அமைக்கப் போகின்றார் என முழங்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது உள்ளக் கிடக்கையைத் தெளிவாக வெளிப்படுத்தாமல் மறைந்து விளையாடுகின்றாரே! அது மட்டுமல்ல, இனப்பிரச்சினைக் கான தமது தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கப் பின்னடிக்கும் அவர், மற்றப் பக்கத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிக விடயங்களை சிறுபான்மையினரான தமிழருக்கு விட்டுக் கொடுக்க உடன்பட்டு, எதிரணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா, தமிழர் தரப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் உடன்படிக்கை ஒன்றும் செய்துவிட்டார் என்று குற்றமும் அல்லவா சுமத்துகின்றார்.....?

இந்த இருவரில் யாருக்கு இடமளிப்பது என்பதில் தமிழர்களிடையே குழப்பம் இல்லாமல் இருப்பதற்கு இந்த விடயம்தான் அடிப்படையான கரணமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு இதுதான் என்பதில் இரு பிரதான வேட்பாளர்களிடமும் தெளிவான கருத்து இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களில் யார் பதவிக்கு வருவது - அல்லது நீடிப்பது - தமக்குச் சாதகமானது என்பதில் தமிழர்களிடம் தெளிவான கருத்து நிலைப்பாடு உள்ளது. அவர்கள் தெளிவுடன் அதைத் தீர்மானித்து விட்டார்கள் என்பது நிச்சயம்.

# கொள்கலன்களில் கழிவுகளைச் சேகரித்து சேதனப் பசளை தயாரிக்கத் திட்டம்

## குடாநாட்டில் இதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.21

கழிவுப் பொருள்களைச் சேகரித்து சேதனப் பசளை தயாரிக்கும் நடவடிக்கையை யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 'பிலிசறு' திட்டத்தின் கீழ் சேதனப் பசளைத் தயாரிப்பதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட 'பிளாஸ்ரிக்' கொள்கலன்கள் மூலம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பாடசாலைகள், பொது நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், நெருக்கமான குடியிருப்புக்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட குடியிருப்புக்கள் ஆகிய இடங்களுக்கு இந்தக் கொள்கலன்கள் வழங்கப்படும்.

இதற்காக 1,200 கொள்கலன்கள் தயார் நிலையில் எமது அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கொள்கலன்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் மூன்று மாதங்களில் சேதனப் பசளையாக உருமாற்றம் அடைந்துவிடும்

இதன்மூலம் இரசாயனப் பசளைகளின் பாவனையைக் குறைத்துக் கொள்ள முடிவதுடன், உரிய முறையில் கழிவுப் பொருள்களை மீள்சுழற்சி முறையில் முகாமைத்துவம் செய்யக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படக் கூடியதாகவும் இருக்கும் -என்றார். (ஒ-14)

## 'அறிவுக்கு சவால்' பொது அறிவுப் போட்டி

வண்ணை, ஜன. 21

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகத்தினால் 11-15 வயதுக்கு உட்பட்ட மாணவர்களிடையே நடத்தப் படவுள்ள 'அறிவுக்குச் சவால்' பொது அறிவுப் போட்டியின் முதற்சுற்று பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகுமென நிகழ்ச்சி திட்டப் பொறுப்பாளர் செல்வி சோபனா யோகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கு விண்ணப்பித்துள்ள மாணவர் களின் பிரதேசங்களிலேயே இந்த போட்டிகளை நடத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நிகழ்ச்சியில் மாற்றங்கள் செய்யப்படின் அவர்களுக்கு அது சம்பந்தமாகத் தெரிவிக்கப்படு மெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-160)

## குடாநாட்டு அரச அலுவலகங்களில் பொது மக்களுக்கான பணிகள் மந்தம்

### தேர்தல் நடவடிக்கைகளால் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜன.21

குடாநாட்டில் பெரும்பாலான அரச திணைக்களங்களின் அதிகாரிகள், ஊழியர்கள் ஜனாதிபதி தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருப்பதால் மக்கள் தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பெரும்பாலான திணைக்களங்களில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பணியில் இல்லாததால், மக்கள் அந்த அலுவலகங்களுக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்புகின்றனர் எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இத்தகைய நிலையால், மக்களின் அவசியமான, அவசரமான வேலைகள் கூட செய்ய முடியாது மக்கள் அலுவலகங்களுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

அவசரமான பணிகள் மேற்கொள்ள வசதி செய்ய வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (ஒ-1-9)

## தென்மராட்சியில் 7 பேருக்கு ரூ. 10 ஆயிரம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன.21

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு தற்செயல் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்தவர்களில் ஏழு பேருக்கு நிவாரணக் கொடுப்பனவான தலா 10 ஆயிரம் ரூபா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பயனாளிகள் தமது தேசிய அ.அ., குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் முதலாம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த பொ.மரியதாஸ், சி.சேதுப்பிள்ளை, ச.சரஸ்வதி, பூ. பாக்கியலட்சுமி மற்றும் சரசாலை வடக்கைச் சேர்ந்த வை.சின்னப்பு, ச.பரிமளம், கைதடி நுணாவிலைச் சேர்ந்த சி.கனகம்மா ஆகியோரே அந்த ஏழு பேரும் ஆவார். (ஒ-207)

## கைதடியில் விபத்து; இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.21

மோட்டார் சைக்கிளில் வந்தவரை வேகமாக வந்த வாகனம் மோதித்தள்ளி விட்டு தப்பியோடியது.

கைதடி ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ம.கமலநாதன் (வயது- 27) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். யாழ்ப்பாணத்தில் இருந்து தென் பகுதி நோக்கிச் சென்ற வாகனமே மோதித் தள்ளியதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 09 | 22.01.2010 |
| | | வெள்ளிக்கிழமை |
| திதி: | | ஷப்தமி |
| | | மு.இ. 11.59 வரை |
| நட்சத்திரம்: | | ரேவதி |
| | | மு.இ. 07.11 வரை |
| [illegible] | | [illegible] |
| [illegible] | | 11.05 - 12.35 வரை |

## டெங்குநோய்த் தொற்றுக்குள்ளாகி குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன.21

டெங்கு நோய்தாக்கத்திற்குள்ளாகி நேற்று முன்தினமும் சுண்டுக்குளிப் பகுதியில் குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணத்துடன் குடாநாட்டில் டெங்கு நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

கச்சேரி- நல்லூர் வீதியைச் சேர்ந்த ஜே.சுலோசனா (வயது41) என்ற பெண்மணியே உயிரிழந்தவராவார்.

குடாநாட்டில் டெங்கு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி கடந்த ஒக்ரோபர் மாதம் ஒருவரும், கடந்த டிசெம்பர் மாதம் 5 பேரும், இம்மாதத்தில் நேற்று 20ஆம் திகதி வரை 12பேரும்என இதுவரை 18பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு நோய் மரணம் அதிகரித்து வருவதுடன் அதன் தாக்கத்துக்குள்ளாகி வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகத் தொடர்ந்து எச்சரிக்கப்பட்டு வருகின்றது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்று 20ஆம் திகதி வரை காய்ச்சல் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 560 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-9-224)

## கணிதப் புதிர்ப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.21

மாகாண மட்ட கணிதப் புதிர்ப் போட்டி முடிவுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி போட்டி முடிவுகள் வருமாறு:

**ஆங்கில மொழி மூலம்:**

* தரம் - 6: முதலாம் இடம்: எ.வர்சனா (மன்னார், சித்திவிநாயகர் இ.க.), இரண்டாம் இடம்: ஜெ.ஜெயதாரணி (சாவகச்சேரி இந்து), மூன்றாமிடம்: திலக்ஷன் (ஹாட்லிக் கல்லூரி).
* தரம் - 7 முதலாம் இடம்: ப. மேசிகன் (யாழ்.இந்து), இரண்டாமிடம்: பி.ஹரணி (யாழ்.வேம்படி), மூன்றாமிடம்: ம.துஷிதா (நெல்லியடி ம.ம.வி.)
* தரம் - 8 முதலாம் இடம்: சி.சர்வகன் (யாழ்.இந்து), இரண்டாமிடம்: வி.விதுர்ஷா (நெல்லியடி ம.ம.வி.), மூன்றாமிடம்: ம.மகிந்தன் (ஹாட்லிக் கல்லூரி).
* தரம் - 9 முதலாம் இடம்: த.கோகுலன் (ஹாட்லி கல்லூரி), இரண்டாமிடம்: பி.தர்சிகா (மெதடிஸ்த பெண்கள் உ.பா., வடமராட்சி), மூன்றாமிடம்: பி.குணவரன் (யாழ்.இந்து).
* தரம் - 10 முதலாம் இடம்: ஆர். பிரணவன் (யாழ்.இந்து), இரண்டாமிடம்: க.கிருஷ்யாஜினி (வடமராட்சி இந்து மகளிர்), மூன்றாமிடம்: க.குருபரன் (யாழ்.இந்து).
* தரம் - 11 முதலாம் இடம்: [illegible] (ஹாட்லி கல்லூரி), இரண்டாமிடம்: ப.ஜனார்த்தனசர்மா (யாழ்.இந்து), மூன்றாமிடம்: ப.அருண்குமார் (வவுனியா, தமிழ் ம.வி.).

**தமிழ் மொழி மூலம்:**

* தரம் - 6: முதலாம் இடம்: ஆர். விகனி (சாவகச்சேரி இந்து), இரண்டாம் இடம்: வி.சாளினி (கரணவாய் ம.வி.), மூன்றாமிடம்: ம.கவியரசன் (விக்னேஸ்வரா, வரமராட்சி).
* தரம் - 7 முதலாம் இடம்: பி.அமிர்தீசசர்மா (வவுனியா தமிழ் ம.வி.), இரண்டாமிடம்: எஸ்.சிவதுர்க்கா (வவுனியா இறம்பைக்குளம் ம.வி.), மூன்றாமிடம்: சி.தனுசன் (வவுனியா, நெளுக்குளம் கலைமகள் வித்தி).
* தரம் - 8 முதலாம் இடம்: ம.கலாமணி (நெல்லியடி ம.ம.வி.), இரண்டாமிடம்: எஸ்.தனுசன் (கொக்குவில் இந்து), மூன்றாமிடம்: எஸ்.அருள்சீபா லெம்பேற் (மன்னார் சென்.சேவியர் மகளிர்).
* தரம் - 9 முதலாம் இடம்: கே. கௌசிகன் (மகாஜன), இரண்டாமிடம்: த.செந்தாளன் (சாவகச்சேரி இந்து), மூன்றாமிடம்: பா.கௌசல்யா (வேம்படி மகளிர்).
* தரம் - 10 முதலாம் இடம்: ராம்ராஜ் (யாழ்.இந்து), இரண்டாமிடம்: ந.பிருந்தா (யாழ்.வேம்படி), மூன்றாமிடம்: த.திவாரகன் (வவுனியா, தமிழ் ம .வி.).
* தரம் - 11 முதலாம் இடம்: எஸ். வேணுஜா (வவுனியா சைவப்பிரகாச மகளிர்), இரண்டாமிடம்: சி.கமலக்கண்ணன் (ஹாட்லி கல்லூரி), மூன்றாமிடம்: மி.மிதுரிகா (யாழ். வேம்படி). (ஒ-16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உபகரணம் கூறுவிலை கோரல்

எமது தேவைக்கு பின்வரும் பாடசாலை உபகரணங்கள் தேவைப்படுகின்றன.

| | |
|---|---|
| 03 கட்டு மொனிற்றர் கொப்பி | 24,000 |
| 04 கட்டு மொனிற்றர் கொப்பி | 20,000 |
| பேனை | 10,000 |

மேற்படி கூறுவிலை வழங்குவதற்கான இறுதித்திகதி 28.01.2010 ஆகும். விண்ணப்பம் எதிர்வரும் 28.01.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பொருள்களின் தரம், வகை என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பங்கள் அன்றைய தினமே திறக்கப்பட்டு ஆராயப்படும். அத்தருணம் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

விண்ணப்பதாரர் தமது கூறுவிலையை மூடிய கடிதவுறையில் அதன் இடதுபக்க மேல் மூலையில்'' கூறுவிலை'' எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 28.01.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

பொது முகாமையாளர்,
வடமாகாண பனை தென்னை வள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 5072

(சி/564241)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 ★ 07 ★ 1917



மறைவு 01 ★ 02 ★ 2009

## திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்

திதி- ஷஷ்டி

அன்பு மிகு மனைவியாய்
ஆசைமிகு தாயாய்
பண்புமிகு மாமியாய்
பாசமிகு பாட்டியாய்
கருணை மிகு பூட்டியாய்
கண்டிப்பான எஜமானியாய்
புன்முறுவல் தோழியாய்
பூவுலகின் புகழோடு வாழ்ந்து
விண்ணுலகம் சென்ற உம்மை என்றென்றும்
நினைவு கூருவதில் திருப்தியடைகிறோம்.

இராச வீதி,
கோப்பாய் மத்தி. (சி/564236) குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 18 ஆம் ஆண்டு நினைவு கூரல்



தோற்றம்: 25.02.1943
மறைவு: 09.02.1992

## அமரர் மு.இரத்தினவேலு (சந்தணம்)

திதி: 21.01.2010

ஆண்டுகள் பதினெட்டு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேச் லேன், கூளாவடி,
ஆனைக்கோட்டை.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள், பேர்த்தி, பேரன்

பிறேம் நகைமாடம்
பிறேம் பிளாசா, யாழ்.வீதி, மானிப்பாய். (94025)

# நேரக் கணிப்பாளர் இன்றி பஸ் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன. 21

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேரக் கணிப்பாளர் இல்லாததால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நேரக் கணிப்பாளராகக் கடமையாற்றியவர் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து இதுவரை வேறொருவர் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

# மட்டுவில் பகுதியிலும் டெங்கு அபாயம்

யாழ்ப்பாணம், ஜன. 21

மட்டுவில் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதால் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த இருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-207)

# மொழிப்பயிற்சி போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.21

மொழிப்பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்காக அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் நாடளாவிய மும்மொழிப் பயிற்சி நெறிக்காக யாழ்.மாவட்டத்தில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளுக்கான போதனாசிரியர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுய விவரத்தினையும் தகுதியையும் நிரூபிக்கும் சான்றிதழ்ப் பிரதிகளையும் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்குமார் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் பிரதேசங்களுக்கு ஏற்பவுமே போதனாசிரியர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அத்துடன் இவர்களுக்கான கொடுப்பனவுகள் மொழிப் பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(50-16)


## தவறிவிட்டது

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு என்னும் விலாசமுடைய மீனாட்சி சுந்தரம் கோவிந்தராஜன் என்பவரது மோட்டார் சைக்கிள் ( NPMV 5659) ஆவணங்கள், (வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம்) தாவடிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0217901111, 0772851140 தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## பூபதி காட்சியறையில்.....




## தேவை

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல் என்பன கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தாசன் பாம்,
158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

யாழ். பெரிய கோவிலுக்கு சமீபமாக இல. 10A, கதீற்றல் வீதியில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 222 5687

## தேவை

புடைவை வியாபாரம் பழக விரும்பும் அல்லது அனுபவமுள்ளவர்கள் தேவை.
உடன் நேரில் தொடர்பு கொள்க.
[illegible]
அபிராமி டெக்ஸ்ரைல்ஸ்
155,156 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை ஞானசேகரம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சு என அன்பாக அழைக்கப்படும் வேலுப்பிள்ளை ஞானசேகரம் நேற்று (20.01.2010) புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஜானகி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சின்னம்மா தம்ப தியினரின் அன்பு மருமகனும், வனராணியின் (பேபி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனுசியா மற்றும் ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான சீதாலட்சுமி, சரஸ்வதி, யோகரட்ணம், சின்னத்தம்பி, பாலச்சந்திரன் மற்றும் சுந்தரம் (கல்வயல்), ராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஸ்வரெட்ணம், செல்வராணி, கருணானந்தன், சந்திராணி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2010) வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16,புறாடி லேன், அரியாலை,
யாழ்ப்பாணம். (94028)
தகவல்: மனைவி
ஞா.வனராணி (பேபி).

## சிவசாமி மகாலட்சுமி

காளியானை, புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசாமி மகாலட்சுமி நேற்று (20.01.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவமலர், சித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனேசராசா, அறிவழகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆகாஷ், சுஜித், பவித்திரா, பாலசபேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2010) வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு, அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளியானை,
புத்தூர் கிழக்கு. (94033)
தகவல்:
சி.சிவசாமி (கணவர்).

## திருமதி வல்லிபுரம் பரமேஸ்வரி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாவும் நீர்வேலி தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பரமேஸ்வரி நேற்று (20.01.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் நாகம்மா, சுப்பிரமணியம், பாலகிட்ணன் மற்றும் சந்தரகணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி, (94035)
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
தகவல் :
கந்தையா சிதம்பரநாதன்.

## இராசதுரை பவளத்துரை

(ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர், கட்டடத்திணைக்களம், மட்டக்களப்பு)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தொடுவாய், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பவளத்துரை 16.01.2010 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - காசியம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் மதியழகன் (ஆசிரியர், மட்./ வாழைச்சேனை இந்துக் கல்லூரி), துவாரகன் (CHA, மட்டக்களப்பு), அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபிநாத்தின் (P.A, C.E.B, ஏறாவூர்) அன்பு மாமனாரும் திவ்ஷாத்தின் அம்மப்பாவும் தங்கத்துரையின் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர், யாழ். தொழில் நுட்பக்கல்லூரி) பாசமிகு தம்பியும் பவளராணி (மலேசியா), தங்கராணி, இராசராணி (பிரான்ஸ்), தேவராணி (ஆசிரியர், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), அருமைத்துரை, கைலாயதுரை (கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.01.2010 ஞாயிற்றுக்கிழமை மஞ்சத்தொடுவாய், மட்டக்களப்பு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறிமர லேன்,
சொர்ணவடலி,
கொக்குவில். (94034)
தகவல்:
சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவினை பாடசாலை அபிவிருத்திக்காக வழங்கியுள்ளனர். ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே. நிஷாந்தன் பாடசாலை அதிபரிடம் காசோலையை கையளிப்பதை முதற்படத்திலும், கிளை முகாமையாளர் மாணவர் மத்தியில் உறையாற்றுவதை இரண்டாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள் : தென்னவன் )

# சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் 4 வீதிகள் புனரமைப்பு

## ஆரம்ப வைபவம் நாளை துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம்.ஜன.21

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள நான்கு பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.நாகவிகாரை வண . ஹவிமலதேரர், யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, ஜும்மா பள்ளிவாசல் மௌலவி முகமது லெவ்வை ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் வரவேற்புரையினை வழங்குவார். யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சீனரயில் பொறியியல் நிறுவனப் பிரதிப்பொது முகாமையாளர் புகிங்ஸ்சோங்ஸ், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி, புத்தூர்-மீசாலை வீதி, யாழ்ப்பாணம் -காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் - பலாலி வீதி ஆகிய வீதிகளே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (50-14-09)

# பசுப்பால் விநியோகம் இரண்டு மாதமாக இல்லை

யாழ்ப்பாணம், ஜன.21

சமுர்த்தி முத்திரை பெறுவோரின் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பசுப்பால் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி முத்திரை பெறுவோர் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முன்னர் தினமும் காலையில் 200 மில்லிலீற்றர் பசுப்பால் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த பசுப்பால் விநியோகம் கடந்த இரண்டு மாத காலமாக நிறுத்தப்பட்டுள்ளது என சமுர்த்தி முத்திரை பெறுவோர் கவலை தெரிவித்தனர். (50-224)

# வடக்கின் வர்த்தக, பொருளாதார அபிவிருத்திக்கு டி.எப்.சி.சி. வங்கி தனது பங்களிப்பை வழங்கும்

## அதன் தலைவர் ராஜன் பிறிட்டோ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21



யுத்தத்திலிருந்து மீண்டு வடக்கின் வர்த்தக, பொருளாதார அபிவிருத்திக்கு எமது வங்கி தன்னாலான பங்களிப்பைச் செய்யத் தயாராக உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் டி.எப்.சி.சி வர்தன, டி.எப்.சி.சி. வங்கிகளின் தலைவர் ராஜன் பிறிட்டோ.

டி.எப்.சி.சி, டி.எப்.சி.சி வர்தன வங்கி ஆகியவற்றின் புதிய கிளைகள் நேற்று முன்தினம் காங்கேசன்துறை வீதியில் திறந்து வைக்கப்பட்டன.இதில் பிரதம விருந்தினராக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கலந்துகொண்டு நாடாவைவெட்டி வங்கிகளைத் திறந்து வைத்தார். இதில் மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ராணி ஜெயமாலா மற்றும் வங்கி அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே ராஜன் பிறிட்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

டி.எவ்.சி.சி வங்கியானது இலங்கை நாடாளுமன்ற கட்டளைச் சட்டத்தின் கீழ் சுமார் 55 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. எமது வங்கியின் பிரதான சேவை தனியார் துறையின்நீண்டகால நிதித் தேவைகளைப்பூர்த்தி செய்வதாகும். இலங்கையில் இளம் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதுடன் புதிய முதலீட்டுத் திட்டங்களுக்கும் உதவுகிறோம்.

கடந்த 5 தசாப்தங்களான எமது வங்கியானது இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக எம்மால் பெரியளவில் பங்களிப்பை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இன்று மலர்ந்திருக்கும் சமாதானத்தினால் வடக்கினை அபிவிருத்தி செய்வதற்கான பங்கு எமக்குக் கிட்டியுள்ளது.

டி.எப்.சி.சி. வங்கியின் நிதிசார் உதவிகள் பாதிக்கு மேல் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாம் குறிப்பிட்ட ஒரு மாகாணத்தில் அம் மாகாண மக்களிடம் இருந்து வைப்பாகப்பெறும் தொகையை விட அவர்களுக்குக் கடன் வழங்கும் தொகையே அதிகமானது.

இதற்காக நாம் உலக அபிவிருத்தி வங்கிகளிலிருந்து நீண்ட கால நிதி வசதிக ளைப் பெற்றுக் கொள்கிறோம். யாழ். நகர் வர்த்தகத்திற்குப் புகழ்பூத்த நகராகும். இங்கு வாழும் மக்கள் நேர்மையாகவும் விசுவாச மாகவும் தமது வர்த்தகத்தை மேற் கொள்கிறார்கள். எனினும் கடந்தகால யுத்த சூழ் நிலையானது இந்நகர மக்களின் வர்த்தகத்தில் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் மனதளவிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. டி.எப்.சி.சி குழுமம் யாழ்.நகரைக் கட்டிமீள் எழுப்பும் திட்டத்துடன் இணைந்து விவசாய, மீன்பிடி, வர்த்தகத்துறை, துறைசார் சேவை வழங்குநர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பாடுபடும் என்பதனை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார். (50-16)

யாழ்.மாவட்டத்தில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரத்திணைக்களத்தினர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் புகையூட்டி நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நகரின் வீதியொன்றில் சுகாதாரப் பணியாளர்கள் புகையூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.


(படங்கள்: நந்தன்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 61 ஆவது குடியரசு நாளை முன்னிட்டு
இந்திய கலாசார நிலையம்
வழங்கும்
ரஸோத்பனா - ரஸங்களின் உற்பத்தி
பரதநாட்டிய நிகழ்வு
புகழ்பூத்த நடன விற்பன்னர்கள்
ஸ்ரீதர் - அனுராதா தம்பதிகள் வழங்குகின்றார்கள்
காலம்: ஜனவரி 29 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை மாலை 6 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம்
12,காங்கேசன்துறை வீதி,யாழ்ப்பாணம்.
யாவரும் வரவேற்கப்படுகின்றனர். ஆசனங்களுக்கு முந்தி வருபவர்களுக்கு முன்னுரிமை.
மேலதிக விபரங்களுக்கு :
இந்திய கலாசார நிலையம், கொழும்பு.
தொ.பே: 0112500014, 2598674.
அனுசரணை:
⇨ யாழ்ப்பாணம் கலாசார மன்றம்
⇨ ICICI Bank இலங்கை
⇨ ஆயுள்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (லங்கா) லிமிட்டட்
⇨ இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி கொழும்புக் கிளை

## அரச ஊழியர்களுக்கான மும்மொழிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன.21

அரச ஊழியர்களுக்கான மும்மொழிப் பயிற்சிநெறி விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்காக அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத் தப்படும் இப்பயிற்சி நெறிக்கான விண் ணப்பங்களை குறித்த விண்ணப்பதாரி கள் தங்கள் திணைக்களத் தலைவரூடாக அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலு வலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பா ணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித் துள்ளார்.

இதில் ஒருவர் ஒரு பயிற்சி நெறிக்கு மட் டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தினையும் மேலதிக தகவல்களையும் www.languagesdept.gov.lk என்னும் இணையத்தள முகவரி யில் பெற்றுக்கொள்ள முடியும். (50-16)

## சிவில் வழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

மாவட்ட நீதிமன்றத்தில் 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த சிவில் வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு, அவை அடுத்த மாதம் முதலாம், இரண் டாம், மூன்றாம் திகதிகளில் நடைபெற வுள்ளன என மாவட்ட நீதிமன்றப் பதிவா ளர் மகாலிங்கம் அறிவித்துள்ளார். (50-14)

## காணிப் பதிவகப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.21

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தல் பணிகளை முன் னிட்டு மாவட்டகாணிப் பதிவகத்தின் பணி கள் அனைத்தும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் சகல பணிகளும் வழமை போல இடம்பெறும் என மேலதிக மாவட்டப் பதிவாளரும் காணிப்பதிவாள ருமான ப.பிரபாகர் அறிவித்துள்ளார். (50-201)

### மணமகன் தேவை

1976 இல் பிறந்த, மக நட்சத்திரம், 8 இல் செவ், சூரி, ராகு. செவ். பாவம் 8, மொத்தபாவம் 32. பட்டதாரி ஆசிரியைக்கு சைவ போசன மணமகன் தேவை :

தொடர்பு : 0777243430/ 0719489420

### தவறிவிட்டது

முறிப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவைச் சேர்ந்த முருகேஸ் பார்த்திபன் என்பவருடைய தே.அ.அ.(இல. 910523317v) 17.01.2010 அன்று பேருந்தில் (777) பயணம் செய்த வேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஊர்காவற்றுறை கிறிஸ்த்து இல்லத்தில் அல்லது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (94023)

NIIT Computer Education & Training center

B Sc. (Hons) Computing and its Practice Degree



NIIT Education Awards

| Program Title | Quarters | Professional Certifications |
|---|---|---|
| Advance Certificate in Information Technology | 2 | ICDL CompTIA(A+,Network+) |
| Associate Diploma in Information Technology | 3 | MCP (SQL server 2000) |
| Honors Diploma in Information Technology | 4 | Sun certificates (JDK) or MCP (SQL Server 2000 Admin Server) |
| Advance Diploma in Information Technology | 6 | XML Certification –IBM or MCP MS 2003 Server) |
| Professional Diploma in Information Technology/DNIIT | 8 | MCP(VB.NET,ASP.NET and ARDS or Java Certification - J2EE or MC 2003 Server Series) |
| DNIIT (Hons) | 10 | Software Project Management, Software Testing, Quality Assuran and quality Management, Understanding Developing and implementing eCommerce Soluti |

NIIT makes your imagination into Reality,
NIIT makes your skills into Professionalism,
NIIT makes your life Enjoyable & Entertaining,
NIIT makes your desire into IT Careers.

NIIT Computer Education & Training center
155,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 021-4920592

NIIT Be more ambitious

www.niit.com

## விண்ணக வாழ்வின் நினைவஞ்சலி

11 ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு



அமரர்
**சு. அருளானந்தம்**
மண்ணில் 12.10.1926 விண்ணில் 19.01.1999



திருமதி
**அ. மரியம்மா**
மண்ணில் 25.05.1929 விண்ணில் 21.01.2009

உன் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடை சூழ்ந்து வர
நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.
(தி.பா. 23 : 6)

குடும்பம் என்னும் சோலையில் நல் விருட்சமாய் நாம் வாழ நிழல் தந்து
கண்களுக்கு ஒளியூட்டி பாதைக்கு வழிகாட்டி தந்தை தாய் கடமையில் நிறைவு கண்டிட
எம் மழலைகள் மொழிபகிர்ந்து உறவுகளில் செழுமை பெற்று வாழ்ந்திடும் நாள்களில்
வாட்டிடும் பிணியினில் வையகம் விட்டேகிட கண்களில் நீர் சுமந்து நினைவுகளை மீட்டுகின்றோம்

ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று (21.01.2010) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

''டியூ மஹால்'',
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
[illegible]

## நினைவஞ்சலி

பத்தொன்பதாம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர்
**நல்லதம்பி பழனிச்சாமி**
மண்ணில் 30.11.1926 விண்ணில் 01.12.1991

திருமதி
**தங்கமணி பழனிச்சாமி**
மண்ணில் 21.04.1933 விண்ணில் 01.02.2009

ஆண்டு ஒன்று ஆனதம்மா ஆறவில்லை எம் துயரம்
நீண்ட உம் நிலைவலையால் நீள் தரையில் தவிக்கின்றோம்
ஆலம் விழுதாகி எமை அரவணைத்துக் காத்தீரே!
ஓய்வொழிச்சல் எதுவுமின்றி ஓயாது பாடுபட்டீர்
பூத்துக் குலுங்கும் புது வசந்தம் தேடி வைத்துவிட்டு
பூமடிந்து போனது போல் ஒரு நொடியில் போய் மடிந்தீர்
புகழ்பூத்த உம் வாழ்வு மண்ணுலகில் நீங்கினாலும்
நினைவென்றும் அகலாது
என்றென்றும் எம் நினைவில் நீங்கா இடம் பிடித்தீர்!

தங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இல: 115, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டி.எப்.சி.சி.வங்கி, டி.எப்.சி.சி.வர்தன வங்கி ஆகியவற்றின் புதியகிளைகள் ஒரே கூரையின் கீழ் நேற்று முன்தினம் காங்கேசன்துறை வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதற்படத்திலும், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். டி.எப்.சி.சி.வங்கி, டி.எப்.சி.சி.வர்தனவங்கி ஆகியவற்றின் தலைவர் ராஜன் பிறிட்டோ, மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் டி.எப்.சி.சி.வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகால் பொன்சேகா வங்கிச் சேவையை ஆரம்பித்து வைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

# வியாபார நிறுவனங்களின் நிறுத்தல் கருவிகளில் மோசடி; சம்பந்தப்பட்டோர் மீது விரைவில் உரிய நடவடிக்கை

## நிறுத்தல் அளவைப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிறுவனங்களில் உள்ள நிறுத்தல் அளவைக் கருவிகளில் காணப்படும் மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.செயலக நிறுத்தல் அளவைகள் பொறுப்பதிகாரி வி.கிருஷ்ணதாசன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச் சந்தைகளில் நிறுத்தல் அளவைக் கருவிகள் சரியாகப் பேணப்படுவதில்லை. அத்துடன் அவற்றிற்கு வருடா வருடம் 'சீல்' முத்திரையிடப்படுவதும் இல்லை.

இந்தக் குறைபாடுகளால் நுகர்வோரே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். தற்போது இவற்றைக் கண்டு பிடித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

இதே வேளை - குடாநாட்டில் சில வர்த்தக நிலையங்களில் 50 கிராம் நிறுத்தல் படிகளுக்குப் பதிலாக வேறு சில பொருள்கள் பாவிக்கப்படுகின்றன.

அதனைவிடக் கொட்டடி, திருநெல்வேலி, குருநகர், மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளில் வியாபாரிகள் சிலர் 250 கிராம் நிறுத்தல் படிகளுக்குப் பதிலாக சைக்கிள் நடு அச்சைப் பயன்படுத்தி வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இப்படிப்பட்ட நிறுத்தல் அளவைகளில் வெட்டுக்கள் இடம்பெறுவதால் நுகர்வோரே பெரிதும் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (50-224)

# குளோரின் இடப்பட்ட குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.21

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தற்போது குளோரின் இடப்பட்ட குடிதண்ணீரை விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் குழாய் மூலமும் பவுசர் வாகனங்கள் மூலமும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குடிதண்ணீர் குளோரின் இடப்பட்டு விநியோகிக்கப்படுவதாக சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50-224)

# குடாநாட்டு உணவகங்களின் தின்பண்டங்களின் விலைகள் ஓரிரு தினங்களில் குறைக்கப்படும்

## பாவனையாளர் அதிகாரசபை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.21

குடாநாட்டில் உள்ள உணவகங்களில் தின்பண்டங்களின் விலைகள் அடுத்த சில தினங்களில் குறைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டப் பாவனையாளர் அதிகார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்ட போதும் குடாநாட்டில் உள்ள உணவகங்களின் திண்பண்டங்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை தொடர்பாக யாழ். மாவட்டப் பாவனையாளர் அதிகார சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அந்த அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் கோதுமை மாவின் விலை அண்மைக் காலமாகக் குறைக்கப்பட்டுள்ள போதும் உணவகங்களின் திண்பண்டங்களின் விலைகள் குறைவடையவில்லை. இது தொடர்பாகப் பொதுமக்கள் எம்மிடம்முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்ட அரச அதிபர் தின்பண்டங்களின் விலை நிர்ணயம் குறித்து பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

இன்னும் சில தினங்களில் குடாநாட்டில் உள்ள உணவகங்களின் தின்பண்டங்களின் விலைகள் குறைக்கப்படும். அவற்றுக்கான விலைகள் நிர்ணயிக்கப்படவுள்ளன என்றார் அந்த அதிகாரி. (50-9)




# புல்லுக் குளத்தில் மண்டிக் கிடந்த சல்பீனியா அகற்றப்படுகிறது



யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.முனீஸ்வரர் வீதியில் உள்ள புல்லுக் குளத்தில் படர்ந்து, வளர்ந்திருக்கும் சல்பீனியாத் தாவரங்கள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபைத் தொழிலாளர்கள் 'சல்பீனியா' தாவரங்களை குளத்தில் இருந்து அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். பிளாஸ்ரிக் படகின் உதவியுடன் 'சல்பீனியா' தாவரங்கள் வேருடன் பிடுங்கி அகற்றப்பட்டு வருகின்றன. தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதால் சல்பீனியாத் தாவரங்களினால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படும் அறிகுறி காணப்படுவதை அடுத்தே இவற்றை அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. (04-224)

# கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகளுக்கு தினமும் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.21

கிளிநொச்சி, பூநகரி போன்ற பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பவுசர் வாகனங்கள் மூலம் தினமும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு பவுசர் வாகனங்கள் மூலம் தினமும் இந்தக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தினமும் காலையும் மாலையும் இப்பகுதிகளுக்குக் குடிதண்ணீர் விநியோகம் தடங்கல் இன்றி நடைபெறுவதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (50-224)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

19.01.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2199

வெற்றி எழுத்து: Y
வெற்றி எண்கள்: 4 7 0 2 4 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 4 | 7 | 0 | 2 | 4 | 2 | ரூபா.14,325,232/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 7 | 0 | 2 | 4 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 7 | 0 | 2 | 4 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 0 | 2 | 4 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 139 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 4 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1457 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 14401 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 143591 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு


| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 7 | 0 | 2 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 4 | 7 | 0 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 146 |
| 9 பரிசுகள் | | 4 | 7 | 0 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1432 |
| 10 பரிசுகள் | | 4 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14403 |
| 11 பரிசுகள் | Y | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 57191 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,942,090.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு
Rs. 14,747,107.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


# சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்காக வாக்களிப்போம்!

இலங்கை தேசிய சமாதான பேரவை



## தினசரி யாழ் - கொழும்பு வான் சேவை

தொலைபேசியூடாகவே பதிவுகளை மேற்கொள்ளலாம்.
ராஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி
தொ.பே.: 077 5250 996, 021 222 2867
077 6090926
(94095)



## VACANCY (பதவி வெற்றிடம்)

எமது நிறுவனத்திற்கு Computer, Accounts, Email Internet செய்யத் தெரிந்த பெண்பிள்ளை ஒருவர் உடன் தேவை. எலக்ரோனிக்ஸ் பொருள்கள் விற்பனை அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும்.

**SATS -TECH ENGINEER'S(Pvt) Ltd**
NO 300, K.K.S.ROAD
(விஸ்டா விஷன் கலர் லாப் எதிரில்) யாழ்ப்பாணம்,
(94009) T.P.: 0212228812/ 2224559/ 0217210228.



வசீகரத் தோற்றத்திற்கு!
## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களை பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

சந்தனாலேப

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்
(சி/555000)
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## இதய அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 18 |
| 01 | 01 |
| 1931 | 2010 |

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவராக, செயலாளராக, பரீட்சைச் செயலாளராக விளங்கிப் பல ஆண்டுகளாகச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய

**சைவப்புலவர் கலாநிதி வ.கந்தசாமி**

அவர்களின் மறைவு சைவ மக்களுக்கும் சிறப்பாகச் சங்கத்திற்கும் பேரிழப்பாகும். அமரரின் ஆத்மா ஆடவல்லான் திருவடிக் கீழ் இன்புற்றிருக்கவும் அவரின் குடும்பத்தினர் சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம்.

மு.திருஞானசம்பந்தபிள்ளை,
தலைவர்,
அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் சார்பாக.

153, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
(94008)

## தவறிவிட்டது

50/1 கூமாங்குளம் வீதி, உக்கிளாங்குளம், வவுனியாவைச் சேர்ந்த வேலாயுதம் விதுசன் என்பவருடைய தே.அ.அட்டை (இல 890612458V), சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன நாவலர் வீதிக்கும் பஸ் நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.
T.P:0778544906, 0779360070
(94006)

## காணி விற்பனைக்கு

காரைநகர், கசூரினா பீச்சுக்கு அண்மையில் உள்ள தென்னந்தோட்டக் காணி உடனடியாக விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:- 0779761373, 011-2364293
(94005)

## கூட்டங்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் இன்று வியாழக்கிழமை பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறும்.

விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10மணிக்கும் ஒருங்கிணைப்புக் கூட்டம் 11மணிக்கும் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.
(50-201-100)

## சேவை நலன் பாராட்டு

### திருமதி சந்திராதேவி யோகேஸ்வரன்



**பிறந்த திகதி: 1949.10.08**
**முதல் நியமனத் திகதி: 01.11.1976**

**சேவையாற்றிய பாடசாலைகள்:**

1. மட்டக்களப்பு/கிரான் மகா வித்தியாலயம்
   01.11.1976 - 31.12.1981 - ஆசிரியை
2. யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
   01.01.1982 - 31.01.2005 - ஆசிரியை
3. யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.
   01.02.2005 இன்று வரை (21.01.2010)

கல்வி உலகினுக்கோர்
கறைபடாக் கற்றூண்
உறுதியிலும் உயர்விலும்

சங்கானைச் சமூகத்திற்கோர்
சாலச்சிறந்த சந்திர(ா) ன்
சேவையிலும் வண்மையிலும்

சேவைகளின் பட்டியலில்
சேர்ந்திடுமே பற்பல...

ஆலயப்பணி பூர்த்தி - அதனொடு
அழகுமாடிக் கட்டடம்
நீர்த்தாங்கி நிறைமரம் - நிழலொடு
நேர்த்தியான சூழல்
பிரகாச வெளியீடு - தூண்களோடு
பெற்றோரின் வெளிப்பாடு
விளையாட்டு வெற்றி - தேசியத்தில்
வீறுசால் பெருமை
கல்வியில் உயர்பேறு - மாணவர்
காட்சியில் ஒழுக்கம் போன்றனவில்
மலர்ந்திடவே வாழ்த்தும்.....

**ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி., சங்கானை.**

(94007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.04.1987

* டிசெம்பர் 19 யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்குவதில் உள்ள நடைமுறைச் சிரமங்கள் குறித்து ஜனாதிபதி ஜே.ஆர் இந்தியப் பிரதமருக்குவிளக்கமளிப்பு.
* சர்வதேச நாணய சபையிடம் இலங்கை அரசு கோரியுள்ள கடனுதவி கிடைக்காவிட்டால் மீண்டும் நாட்டில் 'கியூ' முறைவரும் என நிதியமைச்சர் எச்சரிக்கை.
* தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக் கும் பூஸாமுகாமிற்கு விஜயம்செய்த பிரிட்டிஷ் உள்துறை பிரதியமைச்சர் தமிழ்க்கைதிகளின் பிரச்சினைகள் குறித்து விசாரித்தறிந்தார்.

17.04.1987

* அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இலங்கை முக்கூட்டு ஒப்பந்த மொன்றினைச் செய்திருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் சந்தேகம் தெரிவிப்பு.
* போராளிகளுடனான பேச்சுக்கள் வெற்றியளித் தால் புதுடில்லி சென்று உடன்பாடொன்றில் இந்தியாவுடன் கையெழுத்திட அரசு தயாரென அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்ததையடுத்து வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் புதுடில்லி செல்லத் தயார் நிலை.
* விசாரணை எதுமின்றி நீண்டகாலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்கவேண்டுமென நவ சம சமாஜக் கட்சி கோரிக்கை.

18.04.1987

* அரசு தான் அறிவித்த யுத்தநிறுத்தப் பிரகடனத்தை திடீரென ரத்துச் செய்தது, திருகோ ணமலை மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு.
* திருகோணமலை-ஹபரணை வீதியில் பஸ்களிலும் லொறிகளிலும் பயணம் செய்த 107பேர் இனம் தெரியாத கோஷ்டியொன்றினால் வழிமறிக்கப்பட்டு சுட்டுக்கொலை.
* அரச பாதுகாப்புப் படைகளில் தடை செய்யப் பட்ட ஜே.வி.பி தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாக அரச உயர்வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிப்பு.

19.04.1987

* திருமலை-ஹபரணை வீதியில் 122 பேரைப் பலிகொண்ட படுகொலைகளுடன் தமக்குத் தொடர்பில்லை என விடுதலைப் புலிகள் தெரிவிப்பு. ஏனைய போராளிகள் அமைப்புக் களும் தமக்கும் தொடர்பில்லை என அறிவிப்பு.
* அரசு நினைத்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள தீவிரவாதிகளை ஒரே நாளில் ஒழித்துக் கட்ட முடியமென ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு.
* திருகோணமலை- ஹபரணை படுகொலைச் சம்பவத்தின் பின்னணியில் ஜே.வி.பியினர் உள்ளனர் என்பதற்கான மேலதிக தகவல்கள் வெளிவந்துள்ளதாக பி.பி.ஸி வானொலி அறிவிப்பு.

20.04.1987

* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அடுத்து என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள் வது என்பது குறித்து ஜனாதிபதி ஜே.ஆர். தலைமையில் முக்கிய மாநாடு.
* டிசெம்பர் 19 யோசனைகள் குறித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையில் கிழக்கு இலங்கைத் தூதுக்குழு வொன்றினை புதுடில்லிக்கு அனுப்ப அரசு முடிவு.
* இலங்கையில் சண்டை நடைபெறும் இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து செல்லும் பொதுமக்களை அகதிகள் என அங்கீகரிப்பதா? என்பதை பிரிட்டன் இனித்தான் தீர்மானிக்கும் என பிரிட்டிஷ் உள்துறை இணை அமைச்சர் தெரிவிப்பு.

21.04.1987

* திருகோணமலை மாவட்டத்தில் ஒரு வாரத்துள் இரண்டாவது சம்பவமாக சிங்களக் கிராம மொன்றுள் புகுந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் 15 பொதுமக்கள் சுட்டுப்படுகொலை.
* ஒட்டிசுட்டான் இராணுவ பொலிஸ் கூட்டு முகாம்மீது ஈரோஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் மூன்று உயரதிகாரிகள் உட்பட பல படையினர் பலி.
* டிசெம்பர் 19 யோசனை பற்றி பரிசீலனை செய்ய வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ் . ஹமீது தலைமையில் முஸ்லிம் தலைவர்கள் மாநாடு.

22.04.1987

* புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தில் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் உடல் சிதறிப்பலி.
* கந்தளாய்ப் படுகொலைச் சம்பவம், இனப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணவேண்டிய அவசியத்தை வலியுறுத் துவதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் தெரிவிப்பு.
* தீவிரவாதிகளால் முருங்கன் ரயில்பாதை தகர்க்கப்பட்டதால் மன்னார் மாவட்டத்துக் கான உணவுப் பொருள் விநியோகம் தடைப் பட்டுள்ளதாக வெகுஜன தொடர்பு நிலையம் அறிவிப்பு.

23.04.1987

* வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆறு தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளால் அடித்துக் கொலை.
* வடமராட்சி, தென்மராட்சியில் பொம்பர்களின் குண்டுவீச்சுக்கு 11 பொதுமக்கள் பலி; பலர் காயம், பாடசாலை உட்பட பல வீடுகள் சேதம்.
* சிங்களப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடருமானால், விடுதலைப்புலிகள் மற்றும் ஈரோஸ் அமைப்பு என்பவற்றின் தளங்கள் மீதான விமானத் தாக்குதல்கள் தொடரும் என அரசு அறிவிப்பு

24.04.1987

* தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மற்றும் லோரன்ஸ் திலகர் இந்திய மத்திய அரசால் அவசரமாக புதுடில்லிக்கு அழைப்பு.
* கொழும்பு பஸ்நிலைய குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ரத்து.
* அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டதாகக் குற்றஞ் சாட்டி ஜனாதிபதி ஜே.ஆருக்கு எதிராகக் கொழும்பில் பிக்குமாரும் மாணவர்களும் ஆர்ப்பாட்டப் பேரணி.

25.04.1987

* தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படும் அரசின் விமானத் தாக்குதல்கள் குறித்து தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர், பிரதமர் ராஜீகாந்தியி டம் கவலை தெரிவிப்பு.
* கந்தளாய்ப் படுகொலை, கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னணியில் இஸ்ரவேலின் தொடர்பு இருப்பதாகச் சுதந்திரக்கட்சி வெளியிட்ட குற்றச்சாட்டால் நாடாளுமன்றத்தில் பெரும் கூச்சல், குழப்பம்.
* நாட்டின் ஒருமைப்பாடு, ஜனநாயகம் காப்பாற் றப்பட்ட பின்னரே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து அரசு சிந்திக்கும் எனப் பிரதமர் பிரேமதாச நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

26.04.1987

* தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவத் தாக்குதல் நிறுத்தப்படும்வரை இலங்கை அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என இந்திய அமைச்சர்களி டம் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு.
* பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் இரண்டாவது தடவையாகப் பேச்சு.
* இனப்பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காண்பதில் காட்டப்படும் தாமதம் மேலும் படுகொலைகளுக்கு வழிவகுக்கும் என கலவாண எம்.பி . டியூ குணசேகர நாடாளுமன்றத்தில் தெரி விப்பு.

27.04.1987

* கடந்த 10 தினங்களில் 122 படையினர் விடு தலைப் புலிகளின் தாக்குதல்களில் பலியானதாக அறிவிப்பு.
* இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியா வின் புதிய நிலைப்பாடு குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பு.
* நான் மனநோயாளி அல்ல. நான் பதவியை ராஜினாமா செய்யத்தேவையில்லை என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

28.04.1987

* இலங்கை அரசின் பொருளாதாரத் தடையால் சிரமமுறும் இலங்கைத் தமிழருக்கு உணவு, உடை, மருந்துகள் நிவாரண அமைப்புக்களூ டாக வழங்க தமிழக அரசு முடிவு.
* இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முயல்வது பெரும் விபரீதத்துக்கு வழிவகுக்கும் என தமிழக சட்டசபையில் உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவிப்பு.
* வன்னிப் பகுதி இராணுவ முகாம்களிலிருந்து 45 இராணுவத்தினர் ஆயுதங்களுடன் தலைமறைவு.

29.04.1987

* ஈழத் தமிழர்களுக்கென தமிழக அரசு பொருள் கள் அனுப்பினால் அவை பறிமுதல் செய்யப் படும் என இலங்கை அரசின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவிப்பு.
* தமிழர் பகுதிகள் மீதான விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுவிட்டதாக இலங்கை அரசின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவிப்பு.
* பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளோருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு எதுவும் வழங்கும் அதி காரம் தமக்குக் கிடையாது என மேல் நீதி மன்ற நீதிபதி தெரிவிப்பு.

30.04.1987

* விடுதலைப்புலிகள், தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் தனிப்பட்ட இராணுவம் எனவும், தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடையும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.
* கொழும்பு நீதிமன்றமொன்றில் குண்டொன்று வெடித்ததில் பலர் காயம்.
* அரசியல் தீர்வொன்று ஏற்பட்டு இலங்கையில் அமைதி திரும்பிய பின்னரேயே இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப இயலும் என இந்திய இணை அமைச்சர் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## நவரத்தினம் மதுரா

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

### கலைப்பிரிவு-3ஏ

எனது பெயர் நவரத்தினம் மதுரா. நான் தரம் ஒன்றுமுதல் ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை மகாஜனக் கல்லூரியில் கல்விகற்றேன். எனது தந்தையார் எனக்கு இரண்டு வயது இருக்கும்போது இறந்துவிட்டார். எனது தாயார் என்னையும் என் மூன்று சகோதரர்களையும் கஷ்டப்பட்டு வளர்த்தார். எங்கள் குடும்பத்திற்கு உதவி செய்தவர்கள் பெரியம்மா அவரது மகள், மகன், மாமாமார் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான் உயர்தர வகுப்பில் கலைத்துறையைத் தெரிவுசெய்தேன். நான் எடுத்த பாடங்கள் அளவையியலும் விஞ்ஞானமும், நாடகமும் அரங்கியலும், இந்துசமயம் ஆகிய மூன்று பாடங்களையும் சமபங்கு முக்கியம் கொடுத்துப் படித்தேன். அதனால் 3ஏ பெறுபேறு எடுத்தேன். மாவட்ட நிலையில் 93ஆவதாக வந்தேன். என்னைப் படிப்பதற்கு ஊக்குவித்தவர்கள் அக்காமார் இருவர், அண்ணா, அம்மா, அத்தான் இவர்களுக்கு எனது நன்றி. நான் பரீட்சைக்கு முன்னுள்ள நான்கு மாதங்கள் கவனமாக மூன்று பாடங்களையும் இரவு 6மணிமுதல் பன்னிரண்டு மணிவரை படித்தேன். பகலில் அளவையியல் பயிற்சிக் குறிப்பு எடுத்துவைத்துப் படித்தேன். எனது அக்கா பல்கலைக்கழகத்தில் படித்ததினால் எனக்கும் பல்கலைக்கழகம் செல்லும் ஆசை ஏற்பட்டது. நான் பல்கலைக்கழகம் செல்வதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எனது நன்றி. எனது எதிர்கால இலட்சியம் நல்லாசிரியையாகப் பணிபுரிந்து ஆசிரியர் சேவைக்குப் பெருமை சேர்ப்பிக்கவேண்டும்.



## அன்ரன் செல்வராசா டைசன் கமிலஸ்

### உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி

### கலைப்பிரிவு - 3ஏ

தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலேயே கல்விகற்றேன். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நான் சித்திபெறவில்லை. இருப்பினும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 5ஏ, 2பி, 2சி, எஸ் என்ற பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்திற்காக கலைப்பிரிவினை தெரிவுசெய்து தமிழ், இந்துநாகரிகம், அளவையியல், போன்ற பாடங்களை விரும்பிக் கற்றேன். இப்பாடத்துறை சார்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் கல்விகற்று மூன்று பாடங்களிலும் "ஏ" தரச்சித்தி பெற்றமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சந்திப்பு: சுந்தா**

இப்பெறுபேற்றுக்குக் காரணமாக இருந்த எனது கல்லூரி அதிபர், மற்றும் ஆசிரியர்கள், கல்லூரி ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக் கும், நிர்வாகிகளுக்கும் எனது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் எனக்கு வேண்டிய சகல வளங்களையும் வழங்கிய என் அப்பா மற்றும் அம்மா ஆகிய என் பெற்றோரை இவ் விடத்தில் நன்றிகூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் எனக்கு நிழலாய் நின்று எந்நேரமும் ஊக்கமும், அறிவுரைகளும் வழங்கிய என் சகோதர, சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றி களைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் என் நண்பர்களும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கவர் கள். மேலும் என் பெறுபேற்றுக்குப் பக்கபலமாக நின்று சகல வழிகளிலும் உதவிய சிறிநடராஜா ஆசிரியர் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். முயற்சி, இறைபக்தி, குருபக்தி என்பன இருந்தால் நிச்சயம் வெல்ல முடியும். மேலும் குறித்த இலக்குநோக்கி அயராது முயற்சி செய்ய வேண்டும் இது என் கல்வியில் நான் கண்ட உண்மை.



## சசிரேகா ஜெயந்திரன்

### உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி

### கலைப்பிரிவு - ஏ2பி

நான் எனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையிலும், உயர்தரக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியிலும் கற்றேன். கலைப் பிரிவில் எனது விருப்பத்திற்கமைய பாடங்களைத் தெரிவு செய்து இப்பெறுபேற்றினைப் பெற்றேன்.

நான் பல்கலைக்கழகம் செல்வதற்கு ஊக்கத்தினை அளித்த எனது அம்மாவிற்கும், அண்ணாவிற்கும் மற்றும் எனக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



## தங்கவடிவேல் பிறவுண்சன்

### உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி

### கலைப்பிரிவு - 2ஏபி

நான் தரம் 5 தொடக்கம் உயர்தரம் வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்றதையிட்டு முதற்கண் பெருமையடைகின்றேன்.

கலைப்பிரிவில் 2ஏபி சித்தியினை அடைவதற்கு எனது பாடசாலை, ஆலயமாக இருக்க அதில் தெய்வங்களாக இருந்து அருள் ஆசிகளைத் தந்த அர்ப்பணிப்பினை செய்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கூறுகிறேன்.

எனது சிறுவயதிலேயே தாயாரை இழந்திருந்தமையினால் அக்கவலை என் மனதை வருத்தியதுடன் பல இன்னல்களுக்கும் உள்ளாக வேண்டியநிலை ஏற்பட்டது. எனினும் தாயாரின் விருப்பப்படி இப் பெறுபேற்றினைப் பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் உயர்தரத்தில் கலைப்பிரிவினை தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு கூறிக் கொள்வது என்னவெனில் முதலில் பாடத்தெரிவு சிறந்ததாக தெரிவு செய்வதுடன் மட்டுமல்லாது எழுத்துக்களில் அதிக கவனம் செலுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் எழுத்துக்கள் தெளிவு இல்லாத காரணத்தினால் சற்று பின் தள்ளப்பட்டுவிட்டேன் என்ற காரணத்தினால் ஆகும்.

அத்துடன், இப்பெறுபேற்றை அடைவதற்கு தூண்டுகோலாக இருந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் என்னைக் கல்வியில் தளரவிடாது வழி நடத்திய அன்புத் தந்தைக்கும், சகோதரர்களுக்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1957 • 08 • 17



மறைவு
2009 • 02 • 01

## அமரர் திருமதி. கலாநந்தி சந்திரமோகன்

**Managing Director**
**SPANCKAA GENERAL MERCHANTS AND ENGINEERING CONSULTANTS (PVT) LTD.**

**திதி : வளர்பிறை சஷ்டி திதி (2010.01.21)**

" நிஜங்கள் எல்லாம் உங்கள் நினைவால் காணல் ஆவதன்றோ, சுகங்கள் எல்லாம் உங்கள் சுவாசத்தால் சுரக்கின்றதன்றோ, எம் வாழ்க்கையை வளமாக்கி வசந்தத்தின் வழியில் வலம் வர வழிவகுத்தாய் எம் தாயே! "

" பண்பென்ற உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்து எம்மை வாழ்வென்னும் அண்டத்தில் விட்டுச் சென்றாயே தாயே! பிரிவென்னும் பெருந்துயரால் பரிதவிக்க விட்டாய் - ஓராண்டென்ன ஓராயிரம் யுகங்களே கடந்தாலும் - மறையாது, மாதாவே உங்கள் நினைவலைகள் "

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய், எம் வாழ்வின் ஒளியாய், எமக்கெல்லாம் சுமை தாங்கியாய் நின்று, எம் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய எம் குடும்ப குலவிளக்கு எம்மை விட்டுப் பிரிந்த துயர்தனை சுமந்த வண்ணம் இன்றைய தினம் உங்கள் ஓராம் ஆண்டு தனை நினைவு கூறுகின்றோம்.

உங்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள கலாநந்தி அறக்கட்டளை **(Kalananthi Trust For Cancer Care)** சார்பில் முதலாம் கட்டமாக மகரகம புற்றுநோய் தேசிய வைத்தியசாலையில் உள்ள பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சத்துணவும் மருந்துப் பொருட்களும் உங்கள் நினைவாக வழங்கப்படும். இது உங்களுக்கு எமது சமர்ப்பணம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
கணவன் : நா. சந்திரமோகன்
பிள்ளைகள் : ஐஸ்வரியா, ஐஸ்வரன்
தாய், தந்தை

**No. 60, Peterson Lane,**
**Wellawatta, Colombo - 06.**
**0094 11 3181182 / 0094 77 3698798**
**Email : aisvaran93@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வனாந்தரத்துக்குள் தமிழ் மக்களைத் தள்ளிவிட எத்தனிக்கும் சிவாஜிலிங்கம்



ஈழத் தமிழ் மக்களின் பெரும்பான்மை விருப்பத்திற்கமைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த கூட்டுத் தீர்மானத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் தனி வழியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிவாஜிலிங்கத்தின் நிலைப்பாடானது பலவகையிலும் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிரானது என்ற கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் நிலைப்பாடு தொடர்பான இறுதிமுடிவெடுத்தலில் பங்கெடுத்து விட்டு இன்னும் தேர்தலில் இருந்து விலகாமல் இருப்பது அவரைப் பற்றிய பல ஐயப்பாடுகளை உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கைத்தீவின் அரசியலில் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலானது அழிக்கப்பட்ட தமிழினத்தின் அவலத்தை வெளிப்படுத்தவும், அரசியல் உரிமைக்கான கோரிக்கைகளை நிலைநிறுத்தவும், ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தவும் வேண்டிய காலத்தின் கட்டாயமாக கட்டவிழ்த்திருக்கின்றது. அப்படியிருந்தும் சிவாஜிலிங்கம் தமிழ்மக்களின் பொது விருப்பத்திற்கெதிராகத் தனித்து செயற்படுவதன் பின்னணி என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழர்களின் ஒரே சக்தி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இன்றுவரை தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமையை விட்டுக்கொடுக்கா மல் அதை வலியுறுத்தி வரும் ஒரேயொரு தமிழர் சக்தி.



விடுதலைப்புலிகளின் பின்னடைவிற்கு பின்னர் கூட்டமைப்புப்பின் தலைமைகள் நினைத்திருந்தால் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பையேற்று பதவிகளைப்பெற்று சுகபோக அரசியலை செய்திருக்கலாம்.

தமிழ்த் தேசியத்தின்பால் தொடர்ந்து குரல் கொடுக்கும் ஒரே ஒரு சக்தியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே தமிழர்களின் அரசியல் அபிலாசை என்ற நேர்கோட்டில் இன்றும் உறுதியுடன் பயணிக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் பின்னடைவிற்கு பிற்பட்ட தற்போதைய நிலையில் யார் தடம் மாறிப் போனாலும் அதன் தலைவரான இரா.சம்பந்தனும் அவரோடு இருக்கும் கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தலைவர்களும் அந்த துடுப்பைத் தெளிவாகவும், உறுதியாகவும் பிடித்து தமிழினத்தைக் கரைசேர்ப்பார்கள் என தமிழ் மக்கள் நம்புகின்றார் கள். அரசியலில் இருப்பவர்களிற்கு கொள்கைப் பற்றும், துணிவும், விலைபோகாத் தன்மையும், பதவிக்கும், சுகபோக வாழ்விற்காகவும், சுயநலத்திற்காகவும், தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் சோரம் போகாத்தன்மையுமே அடிப்படையாக இருக்க வேண்டும். அதுவும் அரசியல் உரிமைகளுக்காக நீண்ட போராட்டங்களை நடத்தி பல்லாயிரக்கணக்கான இளைஞர்களையும், அப்பாவிப் பொதுமக்களையும் பலகோடிக்கணக்கான சொத்துக்களையும் இழந்து நிற்கும் தமிழ் மக்களின் அரசியலைப்பற்றி பேசுபவர்கள், தற்போது சிந்திக்க வேண்டியது எதைப் பெற்றுக் கொடுக்கவேண்டும், அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதே. அதுவே முக்கியமானது. அதைவிடுத்து அவலவாழ்வை வாழும் மக்களைப் பயன்படுத்தி அவர்களிற்கு ஆசை வார்த்தைகளைக் கூறித் தற்போது பொருத்தமில்லாத திசையில் போக்குக்காட்டியும், உணர்ச்சி வசப்படுத்தும் வார்த்தைகளை தெரிவித்தும் கொண்டிருக்கும் - தமிழ்த் தேசியத்தின்பால் அறியப்பட்ட - சில தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் தேசியப் பற்றுறுதியுடன் செயற்படுபவர் களைப்பற்றி பொய் வதந்திகளைக் கூறித் தமது சுகபோக வாழ்க்கைக்கும், சுயநோக்கத்திற்காகவும் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்.

### தமிழ்க் கூட்டமைப்பின் மாறாத நிலைப்பாடுகள்

எப்போதும் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடான தாயகம், தேசியம், சுயநிர்ணய கோட்பாடுகளை வலியுறுத்தி நிற்கின்றது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. அண்மையில் நடந்த தமிழரசுக்கட்சியின் அறுபதாவது ஆண்டு நிறைவு நாள் உரையிலும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதே தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வு என வலியுறுத்தி தமிழரசுக் கட்சியின் தலை வரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றகுழுத் தலைவருமான இரா.சம்பந்தன் உரையாற்றியிருந்தார் என்பது யாவரும் அறிந்த விடயம்.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக ஜனாதிபதி ராஜபக்ஷவுடனான பேச்சின் போது மஹிந்த ராஜபக்ஷவிடம், தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இரா.சம்பந்தன் வலியுறுத்தினார் எனவும் இக் கோரிக்கையினூடாகத் தமிழர்கள் தமக்கான சுயராச்சியத்தை கோருகிறார்கள், எனவே இது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தமையினூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் கொள்கை வழுவாத உறுதியான முடிவைத் தெரிந்து கொள்ள முடியும்.

### அரசியல் வனாந்தரத்தில் தமிழரைத் தள்ளிவிடும் வேலை

ஆனால், வடக்கு - கிழக்கை மூன்றாகப் பிரித்து அதில் ஒருபகுதியைத் தமிழ் மக்களிற்கு வழங்குவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்க்கட்சிப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா இணக்கம் கண்டிருக்கிறார் எனத் தவறான கருத்துருவாக்கத்தைச் செய்யும் தனி ஜனாதிபதி வேட்பாளரான சிவாஜிலிங்கத்தின் செயற்பாடு அரைவேக்காட்டுத்தனமானதும், கண்டிக்கத்தக்கதுமானதாகும். அது மட்டுமல்ல, தமிழ் மக்களின் தேசியத்தை நோக்கி சரியாகச் செயற்படக்கூடிய தலைமைகளைப் பிழையாக விமர்சிப்பதனூடாக தமிழ் மக்களைத் தேசியத்துடன் இணைத்து வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பலவீனப்படுத்தி தமிழ் மக்களை திக்கற்ற அரசியல் வனாந்திரத்திற்குள் தள்ளிவிடும் செயலாகவே சிவாஜிலிங்கத்தின் போக்கைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தனது வெற்றிக்காக தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெறுவதற்கும் தனக்கு எதிராக இருக்கக்கூடிய தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதைப்பதற்குரிய அணுகுமுறைகளை கையாளுகின்றார். வாக்குகளைப் பெறுவதற்காகத் தற்காலிக சலுகைகளை வழங்கி அதைப் பிரசாரப்படுத்தத் தமிழ் விரோத சக்திகளைப் பயன்படுத்தும் அதேவேளை, தமிழ்த் தேசியம் நோக்கி செயற்பட்டவர்களாக அறியப்பட்டவர்களைக் கொண்டு, குறிப்பிட்ட தமிழ் மக்களின் வாக்குகளைத் தனக்கு (ராஜபக்ஷவுக்கு) எதிராக திரும்பாமல் செய்வதற்கான அவரின் பொறிமுறையின் வடிவமே தனி ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக நாட்டை விட்டு தப்பிச் சென்ற சிவாஜிலிங்கம் மீண்டும் வந்து கொழும்பில் சிறிது காலம் தங்கிவிட்டு, பின்னர் இந்தியா சென்று தமிழ் மக்கள் சார்பாகத் தனி ஜனாதிபதி வேட்பளாராகத் தாம் போட்டியிடுவார் எனச் சென்னையில் வைத்து அறிவித்திருந்தார். இலங்கையின் இறையாண்மைக்கு எதிராகப் பேசியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் மஹிந்த அரசால் சிவாஜிலிங்கம் மீது சுமத்தப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இலங்கையில் மஹிந்த அரசால் எந்தவொரு இடைஞ்சலுமில்லாமல் அவர் செயற்படுகின்றமை பலத்த சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது.

அதேவேளை கட்சியின் நிலைப்பாட்டிற்கு முரணாக சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடத் தீர்மானித்தமை தொடர்பில் அவர் மீது ரெலோக் கட்சியின் தலைமை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சிவாஜிலிங்கத்திற்கு ஆதரவு வழங்கியமை காரணமாக சிறிகாந்தாவும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது, ஒரு சங்கடமான நிகழ்வானாலும் தவிர்க்கமுடியாத நிலைமையை கட்சித்தலைமைக்கு அவர்கள் ஏற்படுத்தியமையே இம்முடிவிற்கு காரணமாகும். கூட்டமைப்பு என்னும் அடையாளத்திற்குள் இருந்துகொண்டு ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்த நினைத்த இவர்களை வெளியில்விட்டது சிறந்த முடிவாகும்.

### இருப்பரசியலை உறுதிப்படுத்த நியாயம் பிளக்கும் எம்.பிக்கள்

மற்றும் கிஷோர் போன்று இன்னும் சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களின் இருப்பரசியலை தக்கவைக்கவும், பதவிக் கதிரைகளை குறிவைத்தும் ராஜபக்ஷவை நியாயப்படுத்தியும், மீண்டும் ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களிற்கு நன்மை பயக்கும் என்பதுடன் அபிவிருத்திகளை செய்வார், எனவே அவருக்கு வாக்களிக்கும்படியும் தெரிவிக்கின்றனர். யார் ஆட்சிக்கு வந்தாலும் அபிவிருத்தி செய்ய முடியும். அது வேறு விடயம். ஆட்சி மாற்றத்தை செய்வதனூடாக வரக்கூடிய மிகப்பெரிய வாய்ப்பை அபிவிருத்தி என்ற சிறு சிந்தனைக்குள் முடக்க முயலும் செயற்பாட்டுக்கு ஆதரவு கொடுப்பது தமிழ் மக்களிற்குப் பயனைத் தராது, அது பொருத்தமானதுமல்ல.

அதுமட்டுமல்லாமல் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் விடுதலை செய்யப்பட்டு வவுனியாவில் உள்ள வடமாகாண ஆளுனரின் வளாகத்தில் உள்ள விடுதியில் தங்கியிருந்து ராஜபக்ஷவிற்கு ஆதரவாக மௌனமாகச் செயற்படுகின்றார். முக்கியமாக, இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திக்காமல் அவர் செயற்படுவதானது மஹிந்தவின் நிர்ப்[illegible]ள்ளிருந்து அவரால் இன்னும் விடுபட முடியவில்லை என்பதைக் காட்டுகின்றது.



### தமிழ்த் தேசியத்தை சிதைப்பவர் வெல்லலாமா?

அத்துடன் ஆட்சியாளர்கள் இலங்கையின் சட்டதிட்டங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தேவையானபோது தமிழ் அரசியல்வாதிகளைக் கைது செய்து தடுத்து வைக்கின்றனர். தனது அரசியல் நோக்கத்திற்கு தேவையெனில் குற்றச்சாட்டுக்களைச் சாட்டாக வைத்து அச்சுறுத்தியும், ஆசைகாட்டியும் தமிழர்களை பணிய வைத்து செயற்படவைக்கும் இச்சர்வாதிகார சிந்தனையுள்ள ராஜபக்ஷவின் வெற்றியானது தமிழ் மக்களிற்கு எந்தவகையில் நன்மை பயக்காது. ஏற்கனவே தன்னுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் கட்சிகளை தனது கட்சிக்குள் மிரட்டிப்பணிய வைத்ததைப்போல மீதமுள்ள தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மிரட்டிப் பணியவைத்தல், அல்லது சலுகைகளினூடாக விலை பேசுதல் போன்றவற்றை அரசியல் நகர்வாக கொள்ளும் நடைமுறையிலுள்ள இவரை ஆட்சியில் வைத்திருக்கலாமா? அச்சுறுத்தலினூடாக தமிழ்த் தேசியத்தை இவர் சிதைத்து விடமாட்டாரா? என்ற கேள்விகளுக்கான விடையை தமிழ் மக்கள் சுயமாகச் சிந்தித்துப் பெறவேண்டும்.



தமிழ்மக்களில் அரசியலில் ஈடுபட விரும்புபவர்கள் அரசியலுக்கு வரமுன் அடிப்படையான அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டும். முக்கியமாக தென்ஆபிரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலா தனது இனத்தின் விடுதலைக்காக பல உயரிய அர்ப்பணிப்புக்க ளைச் செய்தும், சோரம் போகாது 27 வருடம் தனது கொள்கையில் வழுவாது சிறையிலிருந்து செய்த அர்ப்பணிப் புகளை உள்ளடக்கிய நெல்சன் மண்டேலாவின் 'சுதந்திரத்திற்கான நெடும் பயணம்' என்னும் வாழ்க்கை வரலாற்றையாவது படித்து அறிந்திருக்க வேண்டும். அத்துடன் தனக்கோ, தன் குடும்பத்திற்கோ என்ன ஆபத்து நேர்ந்தாலும் தமிழ் மக்களின் அரசியல் கொள்கைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாமலும், கொள்கையிலிருந்து வழுவாமலும் துணிந்து செயற்படக்கூடிய தைரியத்துடன் அரசியலுக்கு வந்திருக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் இவர்களைப் போன்று அரசியலில் சோரம் போய் எடுப்பார் கைப்பிள்ளைகளாகி, சுகபோக, இருப்பரசியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்ற - பேரழிவிற்கு காரணமான ராஜபக்ஷவின் வெற்றிக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்படுகின்ற - தமிழ் அரசியலவாதிகளின் சொத்தை வியாக்கியானங்களைப் புறக்கணித்து, தேர்தலை புறக்கணிக்காது, அதில் பங்குகொள்வதில் ஆர்வத்தை காட்டாமல் இருப்பதை விடுத்து, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களிப்பில் கலந்து கொண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

நன்றி: 'தமிழ்வின்' இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் இடாப்புகள் மக்கள் பார்வைக்கு

வலி.வடக்கு, ஜன.21

யாழ்.குடாநாட்டில் 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை மீளாய்வு செய்யும் பணிகள் யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்தாண்டு 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகள் நீண்ட காலத்தின் பின்னர் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டதுடன் பலருடைய பெயர்கள், மரணம், இடமாற்றம் மற்றும் காரணங்களினால் நீக்கப்பட்டும் உள்ளன.தற்போது விடுபட்ட பெயர்களை மீள சேர்த்துக்கொள்வதற்கும் நீக்கப்பட்ட வேண்டிய பெயர்களை நீக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிய வாக்காளர் இடாப்புகள் பிரதேச, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக கிராம அலுவலர்களுக்கு தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (1-86)


## சேவை நயப்பும் பிறந்த தின வாழ்த்தும்



**திரு. என்.சச்சிதானந்தம்**
(இலங்கை வங்கி, 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்)

இன்று எங்கள் வங்கியில் 35வருடங்களாக நற்பணியாற்றி இன்றைய பிறந்த நாளில் ஓய்வு பெற்றுக் செல்பவரை பல்லாண்டு காலம் சுகமே வாழ வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும், சக ஊழியர்களும்,
இலங்கை வங்கி 02ம் கிளை, யாழ்ப்பாணம். (94089)



**நல்லூர் பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்பு சபையின்**

## கருத்தரங்கு - 04

காலம் :- 22.01.2010 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- பி.ப 2.15மணி
இடம் :- நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி மண்டபம்.
விடயம் :- விஷப்பாம்புகளை இனங்காணல்

கருத்துரை வழங்குபவர் :-
Dr. Mrs. அன்புச்செல்வி ஸ்ரீதரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்தமருத்துவம், யாழ்.பல்கலைக்கழகம்.)

விடயம் :- விஷ. வைத்திய சிகிச்சை முறைகள்

கருத்துரை வழங்குபவர் :-
Dr.பு.நடராசா
விஷக்கடி வைத்தியர்.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்

(94084) - தலைவர் -



## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
1949
★
04
★
08



மறைவு
2008
★
01
★
21

**அமரர்**
**யோசேப்பு அன்ரனி**

பாசத் தடங்களிலே கால்பதித்து
எம்மைப் பக்குவமாய் வளர்த்தெடுத்து
பேசும் தெய்வமாய் எங்கள்
உயர்வுக்கு மூலமாய் நிறைந்து
எம்மை அரவணைத்த அன்பு அப்பாவே!
ஈராண்டு மறைந்த பின்னும்
எங்கள் இதயத்தில் உங்கள்
நினைவுகள் என்றும் உலாவரும்!

என்றும் உம் நினைவில்,
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்.**

165, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (94092)


# வலி.தென்மேற்கில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

சண்டிலிப்பாய், ஜன.21

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் டெங்கு நோய் பரம்பல் அதிகம் காணப்படுவதைத் தொடர்ந்து இந்த நோயைக் கட்டுப்படுதுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு உற்பத்தியாவதற்குரிய கழிவுப் பொருள்கள் இருக்கின்றனவா என்று பார்வையிடுவதுடன் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்கள்.

டெங்கு நோய்த் தாக்கம் வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள சாவல்கட்டு, சுதுமலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் அதிகம் இருப்பதாக இனம்காணப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கழிவுப் பொருள்களை அழிக்குமாறும் புல்,பூண்டு, குப்பைகளை வெட்டிப் புதைத்து சுத்தமாக வைத்திருக்குமாறும் ஆலோசனை கூறி வருவதுடன் இவ்வேலைகளை மேற்கொள்வதற்கு இரு நாள்கள் அவகாசமும் கொடுத்துள்ளனர். (1-115)

# ஓய்வூதியர்களுக்கு புதுவருட வாழ்த்து

நவாலி, ஜன.21

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சருடன் இவ்வாண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள் பொறிக்கப்பட்ட பிரசுரமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் புதுவருட வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜனவரி 7, பெப்ரவரி 10, மார்ச் 11, ஏப்ரல் 8, மே 6, ஜூன் 10, ஜூலை 9, ஓகஸ்ட் 12, செப்ரெம்பர் 9, ஒக்ரோபர் 7, நவம்பர் 11, டிசெம்பர் 9 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (1-100)

# நவாலிப் பகுதிக்கு குழாய் நீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் பொக்கணை - கந்தரோடை கட்டுடையூடாக குழாய் மூலம் நவாலி கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

வலி.தென் மேற்கு பிரதேச செயலர் ம.ஜெகூ இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கடந்த 100வருடங்களுக்கு மேலாக நவாலி மக்கள் நன்னீர் குடிதண்ணீர் வசதியின்றி அவதிப்பட்டனர்.

மேற்படி குடிதண்ணீர் தேவை தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ம.ஜெகூ, தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் வடக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் தி.பாரதிதாசனுக்கு நவாலி மக்கள் சார்பில் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வேலைத் திட்டங்களை நாளை வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் தி.பாரதிதாசன் நேரில் பார்வையிடவுள்ளார். (1-302)


உ
கந்தவன நாதர் துணை

## திருமண அழைப்பு







**சந்துரு** **தமயந்தி**

பொலிகண்டி, சல்லியம்பதி விநாயகரதும், கந்தவன நாதரதும் அருளாசியுடன் திருச்சி சுப்பிரமணிய நகர் அருள்மிகு முருகன் கோவில் மண்டபத்தில் இன்று (21.01.2010) திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும் சந்திரமோகன் - தமயந்தி தம்பதிகள் பழமும் சுவையும் போல் என்றும் வாழ்வில் சிறந்து விளங்கிட உளமார வாழ்த்துகின்றோம்.

சி.சிவலிங்கம் (GS),
ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி. (91030)

வாழ்த்துவோர்,
பெரியப்பா, பெரியம்மா, சகோதர
சகோதரிகள், அத்தான், மருமக்கள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மாணிக்கவாசகர்
நித்தியானந்தம் (நித்தி)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1957-09-15 | 2009-01-31 |

திதி: ஷஷ்டி

ஆண்டு ஒன்று சென்றது ஐயா
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன ஐயா
உங்கள் அன்பைப் போல் வருமா?
தன் பணிமுடியும் முன்னர் எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீரோ
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(94071)
பாண்டியன்தாழ்வு. திரு.திருமதி சாந்தன் தர்சிலி.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03
★
03
★
1953



உதிர்வு
01
★
02
★
2009

அமரர்
**சடையர் சுப்பிரமணியம்**
(உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)
திதி: ஷஷ்டி

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நினைவில் அகலவில்லை.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (94080) - குடும்பத்தினர் -



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்
1939
★
10
★
24



மறைவு
2008
★
02
★
12

**சின்னத்தம்பு சோமசுந்தரம்** (Rtd.MLT)
(பன்னாலை, தெல்லிப்பளை)

எங்கள் உயிரோடு கலந்துவிட்ட நீங்கா
நினைவலைகளில் உங்கள் ஆத்மா சாந்திக்கு
பிரார்த்திக்கின்றோம்.

(93995)
அவுஸ்திரேலியா.

மனைவி, மகள்மார்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிலைமை இந்த ஆண்டில் எப்படி?


மன்மோகன் சிங்

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியாவில் அமைதி என்பது மெல்லக் குறைந்து வருகிறது. பிரச்சினைகளும் விதவிதமாக மக்களைத் துரத்தி வருகின்றன. தீவிரவாதிகளின் ஊடுருவல் ஒரு பக்கம். கடல் வழியாக மும்பைக்குள் நுழைந்த தீவிரவாதிகள் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கொன்று குவித்தபோது இதனால் நாடே கலங்கியது.

வடமாநிலங்களில் நக்ஸல்பாரிகளும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும் பெருகி, பொதுமக்களின் வாழ்க்கைக்கு இடையூறுகளை விளைவித்து வந்திருக்கிறார்கள். அப்பாவிக் கிராம வாசிகளைச் சுட்டுக் கொல்வது, ரயில்களைக் கவிழ்ப்பது, காவல்துறை அதிகாரிகளைக் கடத்திச் செல்வது, ரயில் நிலையங்களுக்கு வெடிகுண்டுகளை வைப்பது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து வந்ததை எவரும் மறக்க முடியாது.

அஸ்ஸாமில் பொடோ தீவிரவாதிகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை அமைதியாக நடக்கவிடாமல் செய்து வருகிறார்கள்.

ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு ஆபத்தை விளைவித்து வருகின்றமை தொடர்ந்தது. காஷ்மீர் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடாக வேண்டும் என்று கேட்கும் கட்சிகள் போராட்டங்களை அவ்வப்போது நடத்தி வந்திருக்கின்றன.

பொதுமக்களுக்கும், அவர்கள் உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை பல மாநிலங்களில் இருந்து வருகிறது. அமைதிப் பூங்கா என்று கருதப்பட்ட தமிழகத்தில்கூட கொலைகள், கொள்ளைகள் பெருகிவருகின்றன.

விலைவாசி உயர்வால் பொதுமக்கள் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளார்கள். விலைவாசிகள் இருபது சதவிகிதம் வரையில் உயர்ந்துவிட்டன. பண வீக்கம் நாளுக்கு நாள் மீண் டும் பெருகிவருகிறது.

உலகப் பொருளாதார நெருக்கடி இந்தியாவையும் தாக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பெரிய அளவில் அது இந்தியாவைப் பாதிக்கவில்லை. இதற்கிடையே நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்தன.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை அசைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. மன்மோகன்சிங் மீண்டும் பிரதமரானார். இவர் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அரசில் பொதுமக்கள் வாழ்வில் அமைதியும், வளமும் பெருகுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.


பிரணாப் முகர்ஜி

இந்த நிலையில், 2010 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. புத்தாண்டில் நாட்டின் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய அளவிலான தேர்தல்கள் எதுவும் இல்லை என்றாலும், மாநில அளவிலான தேர்தல்கள் சில வரவிருக்கின்றன. இந்தத் தேர்தல்களால் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும், மாற்றங்கள் என்னவாக இருக்கும் என்பது கேள்வி.

இந்தப் புத்தாண்டில் புத்தொளி அளிக்கும் வகையில் அரசியல் சூழல் அமையும் என்பது அரசியல் விமர்சகர்களது நம்பிக்கை. இவர்கள் எதிர்பார்ப்பது போல நடக்குமா?

இந்தியாவின் மிகப்பெரிய கட்சியாக விளங்குவது காங்கிரஸ். 125 ஆண்டுகளாக இருக்கும் கட்சி. இதன் செல்வாக்கு சரியும் வகையில் பாரதீய ஜனதா கட்சி பெரிய சவாலாக விளங்கி வந்தது. அதன் விளைவாகவே வாஜ்பாய் தலைமையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி மத்திய ஆட்சியைப் பிடித்தது. அதன் ஐந்தாண்டு கால ஆட்சியில் ஊழலே இல்லை என்று மக்கள் நினைக்கும்படி இருந்தது.

அடுத்து 2004 இல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைத்தது. மன்மோகன்சிங் பிரதமரானார். பெரும்பான்மை பலம் இல்லாததால், மன்மோகன் அரசு கூட்டணியில் இருந்தவர்களின் தவறுகளைக் கூடத் தட்டிக் கேட்க முடியவில்லை.

2009 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்தது. மன்மோகன்சிங் மீண்டும் பிரதமரானார்.

காங்கிரஸின் இந்த வெற்றியால், பா.ஜ.கவுக்குப் பெரிய அளவில் சரிவு ஏற்பட்டது. பா.ஜ.க., மூத்த தலைவர்களிடையே பிளவு, வயதாகிவிட்ட அத்வானியும், அவரைச் சுற்றியுள்ள மூத்த தலைவர்களும் கட்சியின் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். நிர்ப்பந்தம் செய்யத் தொடங்கியது.

காங்கிரஸ் கட்சியை வீழ்த்த வேண்டுமானால், பா.ஜ.கவில் பல இளைஞர்கள் பெரிய பதவிகளை ஏற்க வேண்டும், அதிரடி மாற்றங்கள் தேவை என்றார் ஆர்.எஸ்.எஸ்., தலைவர் மோகன் பகவத்.

ஆர்.எஸ்.எஸ்., இயக்கத்திலிருந்து பிறந்தது பா.ஜ.க. என்பதால் மோகன் பகவத் சொன்ன மாற்றங்களை ஏற்க வேண்டியதாகிவிட்டது.

பா.ஜ.க.வின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்கியவர்கள் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள். இவர்கள் மிக ஆர்வமுடன் தேர்தலின் போது செயல்பட்டு வாக்களிப்பைச் சேகரித்தார்கள். அதிக அளவில் வாக்குகளைப் பெற முடிந்தது.

நரேந்திர மோடியின் தலைமையில் குஜராத் பா.ஜ.கவின் கோட்டையாக மாறியதைப் போல், அகில இந்திய ரீதியிலும் பா.ஜ.க. பெரிய அளவில் வளரவேண்டும் என்பது திட்டம். ஆகையால்தான் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த நிதின் கட்காரியை பா.ஜ.கவின் தலைவராக்க வேண்டும் என்றார் மோகன் பகவத்.

இதை அத்வானியும் கட்சியின் மூத்த தலைவர்களும் ஏற்றார்கள். வயதாகிவிட்டது என்ற காரணத்தினால் அத்வானி எதிர்க்கட்சித்தலைவர்கள் பொறுப்பிலிருந்து விலகினார். அவர் இடத்தை சுஷ்மா சுவராஜ் பிடித்திருக்கிறார்.

பா.ஜ.கவின் தலைவராக இருந்த ராஜ்நாத் சிங் விலகவும், உடனே நிதின் கட்காரி தலைமைப் பதவியை ஏற்றார்.

மிகவும் சக்தி வாய்ந்த பதவி கட்காரிக்கு. அவருக்கு 52 வயதே ஆகிறது. மகாராஷ்டிராவின் பா.ஜ.க. தலைவராக இருந்து வந்தவர். 2004 இல் நடந்த மாநிலத் தேர்தலுக்குப் பின், இவர் பொதுத்துறை மந்திரியாகப் பதவி ஏற்றார்.

மும்பை நகரின் போக்குவரத்து நெரிசலைப் போக்க அதிரடித் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார். இங்கு மேம்பாலங்கள், போக்குவரத்தைச் சுலபமாக்கும் பாலங்கள் அமைத்து சாதனை படைத்தவர். 'ப்ளை ஓவர்' மனிதர் என்று அழைக்கப்பட்டவர்.


மம்தா பானர்ஜி

ஆனால், 2009 இல் நடந்த மகாராஷ்டிர தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை அமைத்தது. பா.ஜ.கவுக்குப் பின்னடைவு. ஆனாலும், கட்காரியின் திறமையைக் குறைத்து மதிப்பிடவில்லை எவரும்.

இந்தியா முழுவதும் இவருக்குப் பெரிய அளவில் செல்வாக்கு இல்லை. ஆனாலும், அதிரடியாக எதையும் செய்யக்கூடியவர் என்பதால், பா.ஜ.கவின் தலைவராக ஒரு பெரிய புரட்சியைச் செய்து, எதிர்க்கட்சியாகக் காங்கிரஸை செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாக்பூரைச் சேர்ந்தவர் கட்காரி. நிர்வாகத்துறையில் வல்லவர் என்று கருதப்படுபவர். ஆனால், தேசிய அளவில் செயல்பட்ட அனுபவம் இல்லை என்பது முதல் குறை. பா.ஜ.கவின் தொண்டர்களுடன் நாடு முழுவதும் தொடர்பு கொள்வதில்லை என்பது இரண்டாவது குறை. இந்தியில் சரளமாகப் பேசிக் கூட்டங்களில் மக்களைக் கவர முடியுமா என்ற சந்தேகம் மூன்றாவது குறை. நாடாளுமன்றம் எப்படிச் செயல்படுகிறது என்பது இவருக்குத் தெரியாது என்பது நான்காவது குறை. இவர் மராட்டியர் என்பதால் மராத்தி மொழியில் மட்டுமே சரளமாகப் பேசி வந்தவர்.


கருணாநிதி

இளம் வயதுத் தலைவர், பெரிய பதவிக்குப் புதியவர் என்றாலும், இவரிடம் உள்ள குறைகளை வென்று பெரிய அளவில் செயல்பட முடியும் என்று பா.ஜ.கவினர் நம்புகிறார்கள்.

ஒக்டோபர் மாதம் நடக்கப் போகும் பீகார் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற வேண்டும் என்பது இலட்சியம். பீகாரில் ஐக்கிய ஜனதாதளம் சார்பில் ஆட்சியைப் பிடித்த நிதிஷ்குமார், பெரியளவில் மக்களைக் கவர்ந்துவிட்டவர். மிகவும் பின்தங்கிய பீகார் மாநிலத்தில் இவர் ஆட்சியில் பல திட்டங்களை நிறைவேற்றி அசைக்க முடியாத நிலையில் இருக்கிறார்.

இவர் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து பா.ஜ.க., போட்டியிடும் என்பது நிச்சயம். கடந்த தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலின்போது நிதிஷ்குமார் பா.ஜ.கவுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறார்.

பீகாரில் லாலுபிரசாத் யாதவ் மற்றும் ராம்விலாஸ் பஸ்வான் ஆகியோரின் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலின்போது செல்வாக்கை இழந்துவிட்டன. லாலுபிரசாத் யாதவ் ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தலைவர். பாஸ்வான் லோக்ஜன கட்சியின் தலைவர். காங்கிரஸ் எவருடனும் கூட்டுச் சேராமல் போட்டியிடாது.

நாடாளுமன்றத் தேர்தலின்போது நிதிஷ்குமார் கட்சி அபார வெற்றி கிடைத்தது. பா.ஜ.கவின் சார்பில் இங்கே ஒரு மோடி இருக்கிறார். சுஷில்மோடி என்பவர். இளைஞரான இவர் பிரசாரத்தால் மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். ஆகையால், பீகாரில் நரேந்திர மோடி பிரசாரம் செய்ய விரும்பியதை நிதிஷ்குமார் மறுத்துவிட்டாராம்.

பீகாரில் நடக்கவிருக்கும் தேர்தலின்போது பா.ஜ.க., ஒரு பெரிய சக்தியாகச் செயல்படும் என்று கருதப்படுகிறது. ஆகையால், இங்கே காங்கிரஸோ, லாலுவின் கட்சியோ, பஸ்வான் கட்சியோ ஆட்சியைப் பிடிக்க முடியாது. இந்த மாற்றத்தினால் பீகார் வளம் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜார்கண்ட் மாநிலத்தில் 2009 டிசம்பரில் நடந்து முடிந்த தேர்தலில், காங்கிரஸ் முழுப் பெரும்பான்மை பெற முடியவில்லை. பா.ஜ.கவும் பெரும்பான்மை பெற முடியவில்லை. ஆனாலும், காங்கிரஸுக்கு பா.ஜ.க., ஒரு சவாலாக அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

2011 இல் இரண்டு பெரிய மாநிலங்களிலும் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. முதலில் மேற்கு வங்காளம் மம்தா பானர்ஜியின் தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும். 1977 முதல் தொடர்ந்து மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி நடத்தி வந்திருக்கிறது. புத்ததேவ் பட்டாசார்யா பத்து ஆண்டுகளாக முதல்வராக இருக்கிறார்.

இவர் ஆட்சியில் கலவரங்கள் வெடித்தன. நந்திகிராம் மற்றும் சிங்கூர் ஆகிய இடங்களில் விவசாயிகளின் நிலங்களைப் பிடுங்கி தொழில் அதிபர்களுக்கு வழங்கியதால் ஏற்பட்ட கலவரங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத்திவிட்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் திரிணாமுல் கட்சியும், காங்கிரஸும் கூட்டணி அமைத்து அபார வெற்றி பெற்றதால், 2011 சட்டமன்றத் தேர்தலில் மம்தா பானர்ஜி ஆட்சியைப் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு வங்காளத்தில் பா.ஜ.கவுக்குச் செல்வாக்கு இல்லை. ஆனால், அகிய இந்திய ரீதியில் உள்ள ஒரு கட்சியாகச் செயல்படுகிறது. மம்தா பானாஜி ஆட்சியைப் பிடித்தால் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வெகுவாக மாறிவிடுவார்கள். அமைதி திரும்பும் என்கிற எதிர்பார்ப்பு!

தமிழகத்தில் கருணாநிதியின் ஆதரவாளர்கள் 2010 இல் அவருக்கு, பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

மேலும், பல ஆண்டுகளுக்கு முன்பே எம்.ஜி.ஆருக்கு ராஜீவ்காந்தி பாரத ரத்னா விருது வழங்கியதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது வழங்கினால் 2011 இல் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாகும் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

இதற்கிடையில் கருணாநிதி ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்திருப்பதால் அடுத்த முதல்வர் ஸ்டாலின்தான் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

ஆனால், இதில் ஒரு முட்டுக்கட்டை உண்டாகியிருக்கிறது. மத்திய அமைச்சர் பதவியை வகிக்கும் மு.க. அழகிரி, ஸ்டாலினுக்குப் போட்டியாக, மாநில முதல்வர் பதவி தனக்கு வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால் பிரச்சினை பெரிதாகும் என்பதால் கருணாநிதி அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதைத் தள்ளிப் போடக்கூடும்.

எப்படியும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவை அமோக வெற்றி பெற வைத்து கருணாநிதியின் குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார் ஜெயலலிதா! தமிழகத்தில் மாற்றத்தையும், புதிய திருப்பத்தையும் உண்டாக்கும் விஷயம்!

பிரச்சினைகளைச் சமாளிப்பதில் பிரதமர் மன்மோகன்சிங் வல்லவர் என்று கருதப்படுகின்றது. ஜம்மு - காஷ்மீர் விவகாரத்தில் மக்கள் மனதை மாற்ற எண்ணி அங்கிருந்து இராணுவத்தை வேகமாக விலக்கிக் கொண்டு வந்திருக்கிறார் அவர். இதனால், மக்கள் மனம் மாறும், பேச்சுவார்த்தை மூலம் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் அவர் கருதுகிறார்.


நிதிஷ்குமார்

தெலுங்கானா விஷயத்தைத் தள்ளிப்போட நினைத்திருப்பதால் தெலுங்கானா ஆதரவாளர்கள் போர்க்கொடியை உயர்த்திவிட்டார்கள். தெலுங்கானாவைச் சேர்ந்த எம்.பிக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒட்டு மொத்தமாகப் பதவிகளைத் தூக்கி எறிய முன்வந்துவிட்டமை மத்திய அரசுக்குப் பெரும் பின்னடைவு! தெலுங்கானா தனி மாநிலம் தருவதாகத் தேர்தலின்போது காங்கிரஸ் வாக்குறுதி அளித்துவிட்டு இப்போது பின்வாங்குவது பிரச்சினையைப் பெரிதாக்கும்!

நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி, பெப்ரவரி மாதம் தாக்கல் செய்யும் பட்ஜெட்டில் நல்ல பல அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸுக்கு வாக்களித்தவர்கள் பெரிய அளவில் பலனடையும் வகையில் பல சலுகைகள் அளிக்கப் போகிறார் என்பது செய்தி.

இந்தியாவில் பொருளாதார நெருக்கடி என்பதே இல்லை என்று சொல்லும் இவர், மத்திய அரசின் பற்றாக்குறையைச் சமாளிக்க பொது நிறுவனங்களின் பங்குகளை பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்கத் திட்டமிட்டு, மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்.

இதன் விளைவாக, 2010 அமைதியான ஆண்டாக இருக்கும் என்பது நிபுணர்கள் கணிப்பு. ஆனால், சந்திரசேகரராவ், நரேந்திரமோடி, லாலுபிரசாத் யாதவ் போன்ற தலைவர்களால் புதிய பிரச்சினைகள் கிளம்பினால் வியப்படையத் தேவையில்லை!

-நன்றி: 'தி வீக்' சஞ்சிகை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பள்ளிகளில்...



கொக்குவில் இந்து முன்பள்ளியில் வருடாந்தக் கலை விழாவும் புத்தாண்டில் பாடசாலைக்குச் செல்லவிருக்கும் மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முன்பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வினைப் படத்தில் காணலாம். (100)




பாலர் கல்விக் கழகத்தின்கீழ் இயங்கும் திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லத்தில் அண்மையில் சிறுவர்தின விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் சிறுவர்களின் ஆங்கிலக் குழுப்பாடல் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (125)



கைதடி கலைநகர் வெண்மதி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த கலை விழாவும் மாணவர் கௌரவிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் ப.செல்லத்துரை வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அருகில் கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் ஆர்.ரவீந்திரன், விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் ஆ.ஞானலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (288)



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் முன்பள்ளிச் சிறார்களிடையே நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறுமி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அருகில் நகரசபை விசே[illegible] ம.வசந்தகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம். (207)

# மாநகரசபைத் தீயணைப்புப் பிரிவுக்கு நவீனரக வாகனங்களை வழங்குங்கள்

## அமைச்சரிடம் யாழ்.மாநகரசபை முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கு நவீனரக வாகனங்களை வழங்குமாறு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவில் உள்ள தீயணைப்பு வாகனங்கள், தண்ணீர்த்தாங்கி வாகனங்கள் என்பன 1987ஆம் ஆண்டு கனேடியத் தூதரகத்தால் வழங்கப்பட்டவை.

அத்தகைய இயந்திரங்கள் சேவையில் ஈடுபடும்போது அடிக்கடி பழுதடைந்து பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் தீயணைப்புப் பிரிவின் ஊழியர்களும், மற்றும் பொதுமக்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மீள்குடியேற்றத்தில் ஈடுபட்டு வருவதால் தீயணைப்புச் சேவையையும் நவீன மயப்படுத்த வேண்டியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு தீயணைப்புப் பிரிவுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வாகனங்களை வழங்கி உதவுமாறு உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோனிடம் யாழ்.மாநகரசபை முதல்வர் கோரிக்கையினை விடுத்துள்ளார். (04-9)

# நாம் அனைவரும் தெய்வீக நெருப்பின் ஒரு பொறிதான்

தெய்வீகத்தை உள்உணர்வுகளால் சிந்தித்து அறிந்து கொள்ளுதல் அவசியம். இதைத்தான் வேதாந்தம் ''பிரம்ம வித் பிரம்மைவ பவதி'' என்று உரைக்கின்றது.

கொடிய கொள்ளைக்காரனாக இருந்த ரத்னாகரன் தெய்வீகத்தைப் பற்றி மகரிஷிகள் கூறியவற்றையெல்லாம் கேட்டு, சிறிது சிறிதாக மாறி நிரந்தரமாக ராம நாமம் ஸ்மரிக்க ஆரம்பித்தான். அதனால் ரத்னாகரனுடைய வடிவத்திலும் ஸ்ரீராமனின் திருவடிவச் சாயலும் தோன்ற ஆரம்பித்தது. அந்த வழிப்பறிக் கொள்ளைக்காரன் மகா முனிவன் வால்மீகி ஆனான்.

அதேபோல பிரஹலாதன் நிரந்தரமாக நாராயணனைப் பற்றிய நினைவிலேயே இருந்தான். அவனது முகத் தாமரையில் நாராயணனின் திருவடிவமும் ஜாஜ்வல்யமும் பதிவாகியது.

டார்வின் என்ற விஞ்ஞானி சிறு வயதாக இருந்த சமயம் அவரது குரு ஹென்ஸ்லோ என்பவர் மிகவும் சிறந்த தூய எண்ணம் கொண்டவர். ஒரு நாள் டார்வின் சிந்தித்தார். நானும்கூட என் குருவைப்போல உயர்ந்த நிலைக்கு உயரவேண்டும் என நினைத்தார். அந்த எண்ணம் தொடங்கியதும் தன் குருவைப் போலவே சிந்தித்து அவரைப் போலவே நடக்க ஆரம்பித்தார். யாரைப்பற்றி இடைவிடாது சிந்திக்கிறோமோ, யாரைப் பார்த்து செயல்படுகிறோமோ, அவ்வாறே மாறிவிடுகிறோம். அதனாலேயே நல்லதையே செய்து, நல்லதையே எண்ணி, நல்ல முறையிலே நடந்துகொள்ளும் போது உண்மையான மனிதன் என அழைக்கப்படத் தகுதியாகிறாய்.

''மனமவாம்ஸோ ஜீவலோக ஜீவபூத ஸனாதனஹ'' என்று வேதாந்தம் கூறும்போது மனிதா! நீ வெறும் ஐம்பூதங்களின் கூட்டு அல்ல. வெறும் மனித அம்சம் அல்ல. நீ எனது அம்சமே.

நீ எனது அம்சமாகிவிட்டபடியால் எனது பா(B) வங்களும் கூட உன்னிடம் திகழ வேண்டும். தெய்வீகமான உள்ளுணர்வுகள் உன்னிடம் வளரவேண்டும்.

எத்தனையோ சாதுக்களுக்கு இந்தச் சத்தியம் தெரியும். எனினும் கஷ்டங்களும் துயரங்களும் தாக்கும்போது தவிக்கிறார்கள். கஷ்டத்தை அனுபவிக்க முடியாமல் துவளுகிறார்கள்.

உனக்குக் கஷ்டம் வந்துவிட்டது என்று நீ நம்பத் தொடங்கினால் நீ தெய்வத்தின் அம்சமாகமாட்டாய்.

கடவுளுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. கடவுளுக்கு எந்த விசாரமும் இல்லை.

ஆகவே நீ கஷ்டம், துக்கம், விசாரம் என நினைக்கும்போது தெய்வத்தின் அம்சமாக இருக்க இயலாது. அப்படித் தெய்வ அம்சம் இல்லையெனில் நீ வேறு யார்?

மிருக இயல்போ, அரக்க ஸ்வபாவமோ, அலையும் மனநிலையோ கொண்டவனாக மாறி கஷ்ட நஷ்டங்களுக்கு ஆட்படுகிறாய்.



அனைவரும் தெய்வீகப் பெருநெருப்பின் சிறுபொறிகள் தான். ஆனால் எத்தனை பேர் இதை உணர்ந்திருக்கிறார்கள்? ஏதோ ஒரு சிலர்தான் இவ் வாறு புரிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் இது போதாது. ஒவ்வொரு மனிதனும் தான் தெய்வாம்சமே என்று தீவிரமாக நம்பவேண்டும். அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்பவன்தான் உண்மையான மனிதன்.

## சாயி சிந்தனை



முதலாவது ஆண்டு

திருமண பூர்த்தி தின வாழ்த்து

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திசைரூபன் சுபாசினி தம்பதியினர் இல்லறத்தில் இணைந்து முதலாவது ஆண்டு திருமணப்பூர்த்தி தினத்தை இன்று (21.01.2010) வியாழக்கிழமை கொண்டாடும் எங்கள் அன்புச் செல்வங்களை நாகபூஷணியம்மன் அருளைப் பெற்று இல்லறம் என்ற இன்பச் சோலையில் எழில்மிகு புதுமலர்களாய் இன்பமுடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்தும் அன்புள்ள அப்பா, அம்மா, அத்தான், அக்கா, மைத்துனர்கள்,தம்பிமார், தங்கைமார், மருமக்கள், தென்னவன், பஸ்மிதா, தெய்வீகா, உற்றார், உறவினர்.

தகவல்: சிவகுருநாதன் குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி: 95/1, குருநாகல். நிரந்தரமுகவரி: மண்டைதீவு-8

(94052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாம்புகள் பற்றிய தகவல்கள்

பாம்புகள் 13 கோடி வருடங்களாக உலகில் இருந்துவருகின்றன. மொத்தம் 3000இற்கு மேற்பட்ட பாம்பு வகைகளில் விஷமுள்ள பாம்பு வகைகள் 175தான். விஷப்பாம்பா இல்லையா என்று தெரிந்துகொள்ள அதன் வாயைத்திறந்து அதற்கு விஷப்பல் (Fangs) இருக்கின்றதா என்று பார்ப்பது ஒன்றுதான் வழி.

மலைப்பாம்பு வகைகள்தான் முதலில் தோன்றின. விஷப்பாம்புகள் பின்னர் தோன்றியவை. பாம்பைப்பற்றிப் பரப்பப்படும் விடயங்களில் 99 சதவீதம் உண்மை அற்றவையாகும். பாம்புக்குச் செவி இல்லை. தரையில் மிகமிக லேசான அதிர்வாக இருந்தாலும் தலையைத் தூக்கிப்பார்க்கும். பாம்புகள் விலங்குபட்சிணிகளாகும். இந்தியாவில் காணப்படும் மலைப்பாம்புகள்தான் நீளம் கூடியவை.

35 அடிவரை பிரமாண்டமான பாம்பு தென் அமரிக்க நாடுகளில் வசிக்கும். 'அனகொண்டா' எனும் மலைப் பாம்பு வகையாகும். கண்கொத்திப்பாம்பு என்று எதுவுமே இல்லை.

சியாமினி தேவராசா
41, கொண்டலடி வீதி, யாழ்ப்பாணம்

## அமைதியாக வாழப் பழகுவோம்

எம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே தொடர்ந்து அமைதியற்ற நிலையில் இருப்பதைக் காணும்போது அமைதி பற்றிப் பேசுவது பயனற்றதுபோல் காணப்படுகின்றது. இந்த நிலமைதான் எங்களது சொந்த அமைதியின் ஆதாரத்தைத் தேடியடைந்து வாழ வேண்டிய தேவையை எங்கள் மீது அழுத்தி நிற்கிறது. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் ஒரு மனிதன் தனக்குள்ளே அமைதியைக் காணாவிட்டால் இந்த உலகத்தில் அமைதியை காணமுடியுமா? அமைதியை தேடியடைவது கஷ்டமானது. ஏனெனில் அது ஊனக் கண்களிற்குப் புலப்படுவதில்லை. நம்பிக்கை அற்ற மனிதனிற்கு மனதில் அமைதி இருக்காது. மனதில் அமைதி அற்றவனுக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்க முடியும்? சாந்தமும் சகிப்புத் தன்மையும் ஒரு அறையின் குளிரூட்டி போல் செயற்படுகின்றன. அவை மனிதனின் செயல் திறனை அதிகரிக்கச் செய்கின்றன.

பூக்களைப் பாருங்கள். அவையும் இந்த அமைதியற்ற சூழலில் தான் வாழ்கின்றன. அவை கூட மாசடைதலையும் உலக இயற்கையின் அழிவினையும் பொறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனினும் அவை நெருக்கடியான வீதி ஓரங்களிலும் சதுப்பு நிலங்களிலும் பாலை வனங்களிலும் முட்களிற்கிடையிலும் சிலவேளைகளில் சாணக்குவியலிலும் கூட.. எங்கிருப்பினும் அவை என்றும் அழகுடன் மலர்வன. அத்துடன் நறுமணம் உடையவை. பூக்கள் அமைதியையும் சாந்தத்தையும் வெளிக்கொணர்பவை. அது அவற்றின் இயற்கை ஆகும்.

நாங்களும் பூக்களைப் போன்றவர்களே. நாங்கள் இறைவனின் தோட்டத்துப் பூக்கள். உலகம் எனும் இந்தத் தோட்டத்தில் பதட்டம், சந்தடிகளிற்கு இடையில் நாமும் களங்கத்திற்கும் அவமதிப்பிற்கும் அச்சுறுத்தப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றோம். நாங்களும் பூக்களைப் போல் எங்களின் இயற்கையான அமைதித் தன்மையுடன் நறுமணத்தை நம்மைச் சுற்றிப் பரப்பிக் கொண்டு வாழ வேண்டும்.

ஆத்மாவின் மூலாதாரமான தன்மை அமைதி என்பதை நாமும் உணரும்போது அமைதிக்கடலான இறைவனுடன் நாமும் இணையலாம். ஆகவே அமைதிசொரூபமாகி உயிருள்ள சிந்திக்கும் மலர்களாக வாழ்வோம்.

பி.அதினுகா,
நீர்வேலி தெற்கு.

## சிந்திக்கச் சில துளிகள்...

- ஒவ்வொரு மனிதனுக்கும் வாய்க்கும் அதிஷ்டத்திற்கு அவன் தான் சிற்பி
- எவனொருவன் எல்லா நல்ல காரியங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று காத்திருக்கின்றானோ அவன் ஒன்றுமே செய்ய மாட்டான்.
- பணம் அறிவாளிக்குத் தொண்டு புரிகிறது முட்டாளை ஆட்சி செய்கிறது.
- நல்லது ஒன்றே அறிவு தீயது ஒன்றே அறிவின்மை.
- கீழே விழாமல் இருப்பது மட்டும் பெருமை அல்ல கீழே விழுகின்ற ஒவ்வொரு தடவையும் உடனே எழுந்து நிற்பதிலேதான் பெருமை.
- நீ புகழை வெறுத்தால் அது உன்னைத் தேடி வரும்.
- நண்பர்களுக்கு எல்லாம் சிறந்த நண்பன் ஒரு நல்ல நூல்.

க.சுகிர்ணா,
கைதடி தெற்கு.

## என்ன மனிதர்கள்

நொந்து வலி சுமந்து
வந்துள்ளார் எம்
சந்ததிக்காய் சிலுவை சுமந்த
சகோதரர்
இருக்க ஒரு இடம்
படிக்க ஒரு பாடசாலை
கொடுக்க முடியா
நாமெல்லாம்
சோதரரா சொந்தங்களா
ஆறுதலாய் ஒரு வார்த்தை
அரவணைத்து ஒரு உதவி
ஏறெடுத்தும் பாராமல்
எம்பாட்டில் எம் இருப்பு
வீண் வார்த்தை
வீண் பார்வை
வந்தவனின் மனம்
வெந்து போனது
இதைவிட
அங்கேயே இறந்திருக்கலாம்
என்ன மனிதர்கள்
ஏன் இப்படி
புரியவில்லை.

-புலோலியூர்
வேல்நந்தன்

## சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| ஜனவரி 12 | - உலக இளைஞர் தினம் |
| பெப்ரவரி 14 | - உலக காதலர் தினம் |
| பெப்ரவரி 22 | - உலக சாரணர் தினம் |
| மார்ச் 8 | - உலக மகளிர் தினம் |
| மார்ச் 22 | - சர்வதேச குடிநீர் தினம் |
| ஏப்ரல் 1 | - சர்வதேச முட்டாள் தினம் |
| ஏப்ரல் 07 | - சர்வதேச சுகாதார தினம் |
| மே 01 | - சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே 14 | - சர்வதேச அன்னையர் தினம் |

பா. வேணுகா,
தரம்-7
யா/ தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..................................
முகவரி :-..................................
:-..................................
.................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## கேள்விக்கு என்ன பதில்?-58

கர்நாடக இசை மேதை திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களை நியுயோர்க்கிற்கு அழைத்து ஐ.நா.பேரவையில் பன்நாட்டு பிரதிநிதிகளின் முன் பாடச் செய்த ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பெயர் என்ன? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(சரியான விடையை 28.01.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

### கேள்விக்கு என்ன பதில்?-56 இன் சரியான விடை

சிலி என்ற நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர்




## கேள்விக்கு என்ன பதில்? 56 இல் பரிசு பெறுபவர்

01) செ.செந்தூரன்
41/1, பிரம்படி லேன், கொக்குவில்.

## வரலாற்றில் இந்த வாரம்

### ஜனவரி 15



லண்டன் புளும்பரி, மொண்டேஜ் இல்லத்தில் பிரிட்டிஷ் அரும்பெரும் காட்சியகம் 1759 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி திறக்கப்பட்டது.

### ஜனவரி 16

1982 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி - 400 ஆண்டுகளின் பின்னர் - பிரிட்டனுக்கும் வத்திக்கானுக்குமிடையில் மீண்டும் முழு அளவிலான ராஜதந்திர உறவு ஆரம்பித்தது.



### ஜனவரி 17



அந்தாட்டிக் துருவ வட்டத்தை கப்டன் குக்ஸ் என்பவர் முதன்முதலாக 'ரெஷலூஷன்' என்ற கப்பல் மூலம் 1773ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி கடந்து சென்றார்.

### ஜனவரி 18

'ஜங்கிள் புக்' என்ற புகழ் பெற்ற சிறுவர் நவீனத்தை எழுதிய ஆங்கில எழுத்தாளர் 'றுத்யார்ட் கிப்ளிங்' 1936 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி காலமானார்.



### ஜனவரி 19



இந்தியாவின் பிரதமராக 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இந்திராகாந்தி பதவியேற்றார்.

### ஜனவரி 20

'இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல திரைப்பட இயக்குநரான 'பெடறிக் பெலினி' என்பவர் 1920 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி காலமானார்.



### ஜனவரி 21



எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் ஆசிரியராகப் பணிபுரிந்த 'டெய்லி நியூஸ்' பத்திரிகை 1846 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி முதல் வெளிவர ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். சோர்வு, சோம்பலால் சில வேலைகளை வசதிக்கு ஏற்றால் போல செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். பணப் பற்றாக்குறையைச் சந்திக்கலாம்.

### இடபம்




நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். ஏதோ ஒரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் சிலரின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். வசதிகள் கூடும் நாள்.

### மிதுனம்



எந்த விடயத்திலும் தன்னம்பிக்கை, துணிச்சலுடன் செயற்படுவீர்கள். உடன் பிறப்புக்கள் உங்களின் முயற்சிகளுக்கு தடைபோடலாம். அரசியல்வாதிகள் ஓய்வின்றி கடுமையாக அலைய நேரிடலாம். வியாபாரிகள் இருப்புப் பொருள்களால் கூடுதல் ஆதாயம் பெறுவர். புதிய வாய்ப்புகள் தேடி வரும் நாள். நினைத்தது நடக்கும்.

### கடகம்



கவனக்குறைவான செயல்பாடுகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகளுக்கு நல்ல யோசனைகள் சொல்லி நல்வழிப்படுத்துவீர்கள். தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நட்பாக செயல்பட்ட சிலரே விரோதமாகச் செயல்படலாம்.

### சிங்கம்



ஓய்வாக உட்காரக் கூட நேரமில்லாமல் கடுமையாகப் பணியாற்றலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். உடன்பிறப்புக்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களால் உபத்திரவங்களைச் சந்திக்கலாம். திட்டமிட்ட பயணங்களில் திடீரென மாற்றங்கள் செய்யலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

### கன்னி



நண்பர்களிடம் உறவினர்களிடம் கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்பவரும். குடும்ப உறுப்பினர்களின் தேவையை, அயலாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். புதிய பொருள்கள் வாங்கலாம்.

### துலாம்



கனிவாகப் பேசி காரியங்கள் சாதிப்பீர்கள். பொருளாதார நிலைமையில் மேம்பாடு காணலாம். வெளியூர் பயணங்களால் செலவுகள் இருந்தாலும், விரும்பிய காரியங்கள் நிறைவேறும். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். புறம்பேசும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

### விருச்சிகம்



மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நடப்பது போல தோன்றிய காரியம் ஒன்று கடைசி நேரத்தில் நடக்காமல் போகலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சிலர் மீது தேவையில்லாமல் கோபம் கொள்ளலாம். வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

### தனுசு



சக ஊழியர்கள் அல்லது நண்பர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். தேக ஆரோக்கியம் பற்றிய கவலை உண்டாகலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். ஏதோ ஒருவழியில் சிறு பணவரவுகளைப் பெறலாம். தொழில் ரீதியான விடயம் ஒன்றில் முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம்.

### மகரம்



எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பால்ய நண்பர்கள் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் மீது கொண்டிருந்த கோபதாபங்கள் விலகும். பெண்கள் கடும் வேலைப்பளுவால் அவதிப்படலாம். சக ஊழியர்கள் அல்லது நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### கும்பம்



எதிலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். செய்த வேலை ஒன்றில் திடீரென மாற்றங்கள் செய்யலாம். நீங்கள் போட்டியாக நினைத்துச் செயற்பட்ட ஒருவர் நட்பாக நடந்து கொள்ளலாம். சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவீர்கள். பல முறை முயற்சித்தும் சில வேலைகள் முடியாமல் தடைப்படலாம்.

### மீனம்



குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காலை நேரத்தில் தொலைபேசி வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். பெண்கள் பெற்றோரின் உதவிகளைப் பெற்று பெருமை அடைவர். எந்த வேலையையும் நாளை என தள்ளிவைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். உறவுகள் வலுக்கும் நாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கும் நிதிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு அடிமையாகிவிட்டது

## குற்றஞ்சாட்டுகிறார் எஸ்.பி.திஸநாயக்க



கொழும்பு, ஜன.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச அழுத்தங்களுக்கும் நிதிக்கும் அடிமையாகி விட்டதனால்தான் இன்று அந்த அமைப்பு சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க வரிந்து கட்டிக்கொண்டு நின்கின்றது என முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க.வின் முன்னாள் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிதறிப்போய் விட்டது. இப்போது சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. புலி ஆதரவு சர்வதேச அமைப்புகள் சரத் பொன்சேகா மூலம் தமது கலைந்துபோன கனவுகளை நனவாக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்துகின்றன.

சுய ஆட்சி தொடர்பான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கவில்லை. புலிகளின் தோல்வியோடு அதனை தமிழ் மக்கள் மறந்துபோயிருந்தனர். எனினும் சரத் பொன்சேகாவின் அரசியல் பிரவேசத்தால் மீண்டும் ஒரு அச்சமான சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் எழுவர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். நால்வர் தேர்தலை விட்டும் ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளனர். சர்வதேச அழுத்தம் காரணமாகவே எண்மர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர் என்றும் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார்.

(50)

# ஜனாதிபதி 15 சதவீத வாக்குகளால் வெற்றி பெறுவது நிச்சயம்

## அமைச்சர் ராஜித கூறுகிறார்



கொழும்பு, ஜன.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 27 ஆம் திகதி 15 சதவீத மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது என பொறியியல் சேவைகள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

உள்நாட்டு, வெளிநாட்டு சில அமைப்புக்கள் நடத்திய கருத்துக் கணிப்பின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 12 லட்சம் வாக்குகளால் முன்னணியில் உள்ளார்.

நகர்ப்புறங்களையும் கிராமப் புறங்களையும் சேர்ந்த பெருந்தொகையானோர் ஜனாதிபதிக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளனர். சரத்பொன்சேகாவும், அவரை ஆதரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் எந்தவொரு குறிக்கோளும் இல்லாமல் நாளுக்கு நாள் குழப்பத்தில் மூழ்கியுள்ளன.

1977 இல் எட்டு இறாத்தல் தானியம் தருவதாக ஜே.ஆர். அன்று மக்களை ஏமாற்றினார். இன்றைய மக்கள் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்பவர்கள். எனவே அவ்வாறு இலகுவாக ஏமாற்ற முடியாது.

ஐ.தே.க, ஜே.வி.பியை நம்ப முடியாத நிலையிலுள்ள சரத் பொன்சேகா இராணுவத்தைச் சேர்ந்த தனது நண்பர்களை தேர்தல் தொகுதி இணைப்பாளர்களாக நியமித்துள்ளார். இது பொன்சேகாவுக்கும் ஜே.வி.பி, ஐ.தே.க உறவுகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது.

தேசியப் பிரச்சினைக்கும், பொருளாதாரத்திற்கும் உரிய தீர்வு முன்வைக்க முடியாத சரத் பொன்சேகாவினால் எதனையும் செய்ய முடியாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(50)




# மாதிரி வாக்குச்சீட்டு விநியோகம் மலையகப் பகுதிகளில் இல்லை

## போதிய விளக்கமின்றிப் பொதுமக்கள்

கொழும்பு, ஜன. 21

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தற்போது மலையகப் பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் வழமையாக வழங்கப்பட்டு வந்த மாதிரி வாக்குச்சீட்டுகள் இம்முறை விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஒவ்வொரு குடும்பத் தலைவருக்கும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், அவர்களின் சின்னங்கள் அடங்கிய "மாதிரி வாக்குச்சீட்டு" ஒன்று வழங்கப்பட்டு வந்தது.

அவ்வாறான வாக்குச்சீட்டு இம்முறை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக முன்கூட்டி மாதிரி வாக்குச்சீட்டு வழங்கியிருந்தால் மலையகப் பகுதியில் உள்ள முதியோர் மற்றும் விவரமறியாதோருக்கு தேர்தல்களில் வாக்களிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

தொண்டர் நிறுவனங்கள் வீடு வீடாகச் சென்று வாக்களிக்கும் முறையை மக்களுக்கு எடுத்து கூறவும் ஏதுவாக அமைந்திருக்கும்.

எனினும், மாதிரி வாக்குச்சீட்டு விநியோகிக்கப்படாமையால் வாக்களிக்கும் முறையை எடுத்து கூறமுடியாத நிலை தோன்றி உள்ளது என அம்பேகமுவ விழிப்புணர்ச்சி மன்றத்தின் செயலாளர் விசனம் தெரிவிக்கின்றார்.

மேலும், விநியோகிக்கப்பட்டுவரும் வாக்காளர் அட்டைகளில் பெரும் குளறுபடிகளும், எழுத்துப் பிழைகளும் கூட உள்ளன. இவ்வாறானவர்கள் வாக்களிப்பதற்கு ஆவன செய்யவேண்டியது பகுதிக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தரின் கடமையாகும் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

அத்துடன் இவ்விடயம் உடனடியாகத் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இதனை வேட்பாளர்களும் கவனத்தில்கொண்டு செயற்பட முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(சி)

# முஸ்லிம்களின் 90 வீத வாக்குகள் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கே

## அல்ஹாஜ் காதர் எம். பி.நம்பிக்கை

மாவனல்லை, ஜன. 21

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு முஸ்லிம் மக்களின் பொருளாதார நிலைமைகளை நாசமாக்கி, அந்த மக்களின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. அதனால் இம்முறைத் தேர்தலில் முஸ்லிம்களின் தொண்ணூறு வீத வாக்குகள் பொது வேட்பாளர் சரத்பொன்சேகாவுக்கே கிடைக்கும்"

இவ்வாறு கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் ஹாஜியார் நம்பிக்கை தெரிவித்தார்.

மாவனல்லை வீனஸ் மைதானத்தில் நடைபெற்ற கேகாலை மாவட்ட ஐ.தே. கட்சியின் முஸ்லிம் சம்மேளனக் கூட்டத்தில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவிதார்.

கபீர்ஹாஸிம் எம்.பி. தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் காதர் ஹாஜியார் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

முஸ்லிம்கள் அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை கொண்டுள்ளனர். அரசோ எந்த சக்திகளோ முஸ்லிம்களை எதுவும் செய்துவிட முடியாது. முஸ்லிம்களுக்கு இந்த அரசு செய்துவரும் அநியாயங்களுக்கு அல்லாஹ் உரிய தண்டனையை வழங்கத்தான் போகிறான்.

முஸ்லிம்கள் மட்டுமல்ல இந்தநாட்டில் வாழும் ஏனைய சமூகத்தவர்களும்கூட மஹிந்தவின் அரசினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் பலரும் கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகியுள்ளனர். இந்த நிலைமையில் இருந்து மீட்சி பெறுவதற்கே எமது சகல சமூகங்களும் ஒன்று சேர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதியன்று இந்த அரசை தோற்கடிக்க அணிதிரண்டுள்ளன.

எதிரும், புதிருமாக இருந்த ஜே.வி.பியும், ஐ.தே.காவும் இன்று ஒன்று சேர்ந்துள்ளன. அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய தமிழ்க்கட்சிகள் பலவும் இவ்வரசை வீழ்த்துவதற்காக ஒன்றிணைந்துள்ளன.

முஸ்லிம்களின் நண்பனான சரத்பொன்சேகாவின் வெற்றியை உறுதிப்படுத்தும் பொருட்டு முஸ்லிம் மக்கள் யாவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்- என்றார். (சி)

# வாக்காளர்களின் அடையாள அட்டைகளை பறிமுதல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டம்

## அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.21

எதிர்கட்சிகள் எதிர்வரும் 25ஆம் திகதி நள்ளிரவில் வாக்காளர்களின் அடையாள அட்டைகளை பலாத்காரமாகப் பறித்தெடுப்பதற்கு திட்டங்களைத் தீட்டி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதென கல்வி அமைச்சரும், ஐ.ம.சு.முன்னணியின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

இம்முறை தேர்தலின் போது தேசிய அடையாள அட்டைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் எமது கட்சி ஆதரவாளர்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் அடையாள அட்டைகளை கிராம மட்டத்தில் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யத் திட்டமிட்டுள்ளதாக எமது கட்சி ஆதரவாளர்கள் கடிதங்கள், பக்ஸ், தொலைபேசிகள் மூலம் தகவல்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(50)

# ஆளும் கட்சி வன்முறைகளின் மூலம் தேர்தலில் வெற்றியீட்ட முயற்சி

## கருஜயசூரிய தெரிவிக்கிறார்

கொழும்பு, ஜன.21

ஆளும் கட்சி வன்முறைகளின் மூலம் தேர்தலை வெற்றியீட்ட முயற்சி மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகளின் மூலம் தேர்தலை வெற்றிகொள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீவிரம் காட்டி வருவதாக அவர் அறிக்கையின்மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே வாரியப்பொல பிரதேசத்தில் தமது கட்சி ஆதரவாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மாற்று அரசியல் கொள்கையுடையவர்கள் உயிரைத் தியாகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(50)

# குடும்ப ஆதிக்கத்துக்குப் பிரியாவிடையளிக்க இந்த நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்

## கண்டியில் லக்ஸ்மன் கிரியெல்ல



கொழும்பு, ஜன.21

மக்களை ஏமாற்றிவரும் குடும்ப ஆதிக்கத்துக்குப் பிரியாவிடையளிக்க மக்கள் தயாராகிவிட்டனர் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் செங்கடகல ஐ.தே.க. அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் யார்? என்பதை இன்று நம் நாட்டு மக்கள் நன்றாக அறிந்துள்ளனர். இம்மாதம் 26ஆம் திகதி அவர்களுக்கான தண்டனையைத் தேர்தல் தீர்ப்பாக மக்கள் வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டிப் பிரதேசத்தில் நடைபெற்ற பொது ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறுகையில்:

தேர்தல் சட்டங்கள் முற்றாக மீறப்படுகின்றன. தேர்தல் ஆணையாளர் துச்சமாக மதிக்கப்படுகிறார்.

தோல்வி [illegible] மஹிந்த சிந்தனை [illegible] துடைத்தெறியப்படும்.

பொன்சேகாவின் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி, பொதுமக்கள் வெற்றி இன, மத, மொழி, பிரதேச ஐக்கியத்தினதும் சமத்துவத்திற்கானதும் வெற்றி, பொருளாதார, தேசிய சுபீட்ச வளத்திற்கான வெற்றி, பொருள்களின் விலையால் பெருமூச்சுவிடும் மக்களின் வெற்றி.

விவசாய அபிவிருத்தி தொடர்பாக மேடைகளில் மார்தட்டிக் கொள்பவர்கள், அரிசி, வெங்காயம், கிழங்கு உட்பட எல்லாவற்றையும் பெருந்தொகையாக இறக்குமதி செய்யும் அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைகின்றனர்.

உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பால் பசியாலும் பட்டினியாலும் வாடும் மக்களின் துன்பம் தீர, தோட்ட மக்களின் வறுமை நீங்க, ஊதியம் அதிகரிக்க ஜெனரல் பொன்சேகாவை ஆதரியுங்கள்.

அன்னப்பட்சி நிம்மதியான மாற்றத்தின் சின்னம் – என்றார்.

(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வலய ஆசிரியர்களுக்கான கணித பாடச் செயலமர்வு

யாழ்ப்பாணம்.ஜன.21

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான கணிதபாட ஆசிரியர்களுக்கான கணிதபாடச் செயலமர்வு பின்வரும் திகதிகளில் யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை நடை பெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நல்லூர்க் கோட்டம் நாளைமறுதினம் 23ஆம் திகதியும், கோப்பாய்க் கோட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதியும், யாழ்ப்பாணக்கோட்டம் 29ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. மேற்படி ஆசிரியர்கள் தரம் 6-10 வரை நிலையறி மதிப்பீட்டுப் பகுப்பாய்வுப் படிவங்கள், விடைத்தாள்கள், தரம் 6-11 வரையான பாடநூல்கள், தவணைப்புள்ளிப் பகுப்பாய்வு, கணிதமென் பொருள் பயிற்சி பெறாத ஆசிரியர் விவரம் என்பவற்றை எடுத்துவருமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (50-16)

# தேர்தல் வன்முறை எதுவும் நிகழாத யாழ்.மாவட்டம்

யாழ்ப்பாணம், ஜன.21

ஜனாதிபதித் தேர்தல் வன்முறை தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் இதுவரை எந்தவிதமான முறைப்பாடுகளும் செய்யப்படவில்லையென்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் தொடர்பான எந்தவிதமான முறைப்பாடுகளும் எமது யாழ்.தேர்தல் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வன்முறைகள் எதுவும் இதுவரை இடம்பெறாத தேர்தல் மாவட்டமாக யாழ்.தேர்தல் மாவட்டமே விளங்குகிறது என்று அவதானிகள் சிலர் தெரிவித்துள்ளனர். (04-9)


## கண்ணீர் அஞ்சலி



அமரர் சிவஸ்ரீ . வேதக்குட்டிக்குருக்கள்
தியாகராஜ சர்மா
(அச்சுவேலி தெற்கு, தோப்பு கருணைமிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயப் பிரதமகுரு)
(லோகேஸ்வரசர்மா (ரவி) அவர்களின் மாமனார்)

அன்பின் ஒளிவிளக்கே! பாசத்தின் உறைவிடமே!
குடும்பம் என்னும் கூட்டில், குதூகலமாய்
வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமானாய்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அருள்மிகு கந்தசுவாமி (வைரவர்) தேவஸ்தான திருப்பணிச் சபையினர்.

பிரிவால் துயருறும்: சிவஸ்ரீ வே. நடராஜக்குருக்கள் குடும்பம். ஆவரங்கால் சிவன் கோயில்.

(தி/564231)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை செல்வி
கந்தலீலா நடராசா அவர்களின் அன்புத் தந்தை
ஆறுமுகம் நடராசா

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்.
(94024)


### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன.21

''ஜெய்க்கா'' செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாண கல்வித்திணைக்களத்தால் வடமராட்சி, தென்மராட்சி, தீவகவலயங்களில் தெரிவு செய்யப்பட்ட தலா ஐந்து பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான துரித கணித செய்கை தொடர்பான செயலமர்வு யாழ். கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் வளவாளர்களாக நிபுணத்துவ ஆலோசகர் ஜனாம் அப்துல் வாகீட், மாகாண ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜசேகரன் கணித பாட ஆசிரிய ஆலோசகர் பா.இராஜசேகரன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தவுள்ளனர். (16)

## மீள் குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன.21

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்துவந்து கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை இருபதாயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

எனவே இந்தக் கொடுப்பனவைப் பெறாத அனைவரும் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (50-201)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.21

கொடிகாமம், கச்சாய் புங்கடி தான்தோன்றி கிழுவையடிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகளை கிரியா கலைமணி சிவஸ்ரீ க.வீரபத்திரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்கவுள்ளார். அருளாசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சைவப்புலவர் கா.கமலநாதன் ஆகியோர் வழங்குவர். (80-201)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.21

கசிப்பு வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 15ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன.

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த நபருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கினை நேற்றுமுன்தினம் விசாரித்த நீதிவான் 15ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு மாத கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (1-207)


## வாக்கு எமது சனநாயக உரிமை
## வாக்குரிமையைப் பாதுகாப்போம்

"ஒவ்வொருவருக்கும் தத்தமது நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கான உரிமையுண்டு...."

"மக்களின் விருப்பே அரசாங்கத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது, காலாகாலம் நடைபெறும் நேர்மையான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

● "உலக மனித உரிமைப் பிரகடனம் - உறுப்புரை -21"

தேர்தல்களானது மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு அல்லது நிறைவேற்றுத்துறைக்கு (சனாதிபதிக்கு) மக்களின் அதிகாரங்களை வழங்குவதற்கான சனநாயக முறைமையாகும்.

தேர்தல்களானது வாக்காளர்கள் தமது அரசியல் விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கும், அதனடிப்படையில் அவர்களின் வாக்குகள் மக்களின் விருப்பத்திற்கமைவாக ஆசனங்களாகவோ அல்லது நிறைவேற்று சனாதிபதிப் பதவிக்கான நபராகவோ மாறுகின்றது.

மக்களின் விருப்புகளை அரச கொள்கைகளாக மாற்றுவது சனநாயக நடைமுறையாகும். தேர்தல்களானது மக்களின் விருப்புகளை வெளிப்படுத்தும் ஒரு பொறிமுறையாகும். தேர்தல்கள் இச் செயற்பாட்டைப் பூர்த்தி செய்தல் வேண்டுமேயானால், அவை சுதந்திரமான, நியாயமான தேர்தல்களென்பதை உறுதி செய்தல் வேண்டும்.

ஒரு சனநாயக சமூகம் வேண்டுவது வெறும் தேர்தல்களை மட்டுமல்ல. தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்கள் முன்வைக்கும் மாறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் வாக்குறுதிகளில் நம்பகத்தன்மை கொண்ட, சிறந்த நிலைப்பாடுகளின் அடிப்படையில் வாக்காளர்களின் விருப்பத்திற்கமைவாக சுதந்திரமாக, எவ்விதப் பலவந்தங்களுமில்லாமல் வாக்களிக்கக்கூடிய சுதந்திரமான, நியாயமான தேர்தல்களே தேவையானதாகும்.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் பயம், பீதியில்லாத சூழலிலும், இன, மத, குல, பிரதேசம் போன்றவற்றினடிப்படையிலான குரோத மனப்பாங்கற்றதாகவும் பின்வரும் மனித உரிமைகள் உறுதி செய்யப்படும் சூழலிலும் நடத்தப்படல் வேண்டும்.

- எல்லோருக்கும் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு ஏதுவான சம வாய்ப்பிற்கும், சம அவகாசத்திற்குமான உரிமை.
- வேட்பாளர்கள் தத்தமது கருத்துக்களை பாதகங்களோ அல்லது தடைகளோ இன்றி வெளிப்படுத்துவதற்குத் தேவையான பேச்சு சுதந்திரத்திற்கும், அக்கருத்துக்கள் தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யக்கூடிய சுதந்திர ஊடக உரிமை:
- அரசியல் ஆர்வலர்கள் ஒன்று கூடுவதற்கும், வாக்காளர்களின் ஆதரவுகளை தடையின்றி அணிதிரட்டுவதற்குமான உரிமை: மற்றும்
- பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக பாதகங்கள், அநீதிகள் ஏற்படின் அவற்றுக்கான நிவாரணங்ளைப் பெறுவதற்கும், சட்டத்தின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படுவதற்கும் ஏதுவான வகையில் பக்கச் சார்பற்ற பொலிசுக்கும் சுதந்திரமான நீதித்துறைக்குமான உரிமை.

மேற்கூறப்பட்ட உரிமைகள் முழுமையாக உறுதிசெய்யப்படாமையினாலும், சுதந்திர ஊடக உரிமை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையினாலும், சனநாயக விரோதப் போக்கும், பொது வாழ்வின் ஒழுக்கப்பன்புகளை மீறும் வகையிலும் குரோதமனப்பாங்கான பிரச்சார நடவடிக்கைகளினாலும் வாக்காளர்களில் கணிசமானவர்கள் தேர்தல் நடைமுறை தொடர்பாக விரக்தியுற்றிருப்பதோடு தேர்தலில் வாக்காளிக்காதிருக்கும் நிலைமைகளும் தென்படுகின்றன.

வாக்களிப்பதைப் பகிஷ்கரிப்பது இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியாது. இது நாட்டின் சனநாயக நடைமுறைகளை மேலும் பலவீனப்படுத்தவே வழிவகுக்கும். எனவே எல்லா வாக்காளர்களும் வாக்களிக்க முன்வருவதோடு தாம் விரும்பிய அபேட்சகருக்கு வாக்குகளைப் போடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். வாக்களிப்பது என்பது அரசியல் கட்சிகளின் உரிமையல்ல. அது வாக்களார்களின் அடிப்படை உரிமை.

தேர்தலில் உங்களது வாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் தான் எமது வாக்குரிமையைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமேயன்றி வாக்களிப்பைப் பகிஷ்கரிப்பதன் மூலமல்ல.

சனாதிபதித் தேர்தலில் உங்களின் வாக்குகளை நீங்களே வாக்களிப்பதன் மூலம் உங்களது வாக்குரிமையைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

அரச யாப்பிற்கும், சமாதான சகவாழ்விற்குமான
பல்தரப்பினர் அரங்கம்.
● அம்பாறை ● மட்டக்களப்பு ● காலி ● ஹம்பாந்தோட்டை ● மாத்தறை ● திருகோணமலை.



## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதியில் கணக்கர் சந்திக்கு அண்மையில் 4½ பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய பெரியளவிலான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779231945 (தி/564225)



## கண்ணீர் அஞ்சலி



வண்/ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோயிலின் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) முன்னாள் மூத்த உறுப்பினரும், முன்னாள் செயலாளருமான கலாநிதி, சைவப்புலவர்
வ.கந்தசாமி

அவர்கள் நோர்வே நாட்டில் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண் /ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோயில்,
யாழ்ப்பாணம்.
தர்மகர்த்தா சபையினர்.
(90012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விரோதி வருடம் தை மாதம் 8 ஆம் நாள் (21.01.2010) வியாழக்கிழமை காலை 9.58 மணி முதல் முற்பகல் 10.47 மணி வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **வரதராசா** அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புதல்வி திருநிறைசெல்வி **பிரஸ்சாந்தி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள்துணைகொண்டு பொற்பதி வீதி, செம்பாட்டு லேன், கொக்குவில் கிழக்கில் திருமாங்கல்ய தாரணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்து பசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி சோமலிங்கம் கோமளம், .
4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு
தொ.பே:0779543394, 0773027455.

திரு.திருமதி.அற்புதலிங்கம்
பொற்பதி வீதி, செம்பாட்டு லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே: 021 3211063, 0778264723



**தை** பிறந்தால் வழி பிறக்கும்!
யாழ் மாணவர் உயர்கல்விக்கு...
**ESOFT** என்றும் வழிவகுக்கும்!

யாரும் இதுவரை வழங்காத சலுகை எம்மிடம் மட்டுமே.

**HND**
in Computing (General)
in Business (General)
in Business Management
in Business HRM
in Business IT
(18 Months)

எமது வழமையான கட்டணம் 181,440/=
But Now... 140,000/=

Special Offer For Our Diploma Students
130,000/=

இச்சலுகைகள் 31.01.2010 வரை மட்டுமே.

**ESOFT Computer Studies (Pvt) Ltd.**
No.114, Navalar Road, Jaffna. T.p: 021 222 4142


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.21

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு 'சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலத்தில் அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா மேற்படி விடயம் தொடர்பாகக் கருத்துரை வழங்குவார்.

(201)

## கீரிமலை கேணி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.21

கீரிமலை நகுலேஸ்வர தீர்த்தக் கேணியின் உடனடித் திருத்த வேலைகளுக்காக 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் முயற்சியின் பயனாகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-14)


## திருமண வாழ்த்துக்கள்

திரு. திருமதி S.P. சிவஞானம் (சட்டத்தரணி) அவர்களின் ஏக புத்திரி சிந்துஜா அவர்கள் இன்று 21.01.2010 வியாழக்கிழமை கொழும்பு கிறீன் பலஸ் திருமண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும் இந்நாளில்

திரு. திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் **சிவசங்கர்**

திரு. திருமதி சிவஞானம் தம்பதிகளின் ஏக புத்திரி **சிந்துஜா**

ஆகிய இருவரையும் சுன்னாகம் சிவபூதராயர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம். (94019)

வாழ்த்துவோர் : உறவினர், நண்பர்கள்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1158 நீலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் 18 22 36 55

19-01-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,912,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,289 | 20/- | 4,465,780/- |
| 2 இலக்கங்கள் | 20,558 | 40/- | 822,320/- |
| 1 இல. + லக்கினம் | 20,288 | 60/- | 1,217,280/- |
| 2 இல. + லக்கினம் | 1,839 | 200/- | 367,800/- |
| 3 இலக்கங்கள் | 564 | 1000/- | 564,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,912,925/- | - |
| மொத்தம் | | | 8,497,180/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 266,592 | | 8,997,180/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,411,650/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : பிரேமலால் மஹாராம வீரசிங்க மஹரகம

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டபிள்யூ.தயாவதி தொம்பே

2010 ஜனவரி 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 400893428-0-39 |
| நுவரெலியா | 400896038-0-02 |
| கேகாலை | 400897706-7-24 |
| மாத்தளை | 400898353-6-24 |
| கம்பஹா | 400896530-1-15 |



## மரண அறிவித்தல்

### பெரியதம்பி முத்தையா



புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினபுரி பிரபல வர்த்தகர் பெரியதம்பி முத்தையா அவர்கள் 17.01.2010 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி- கண்ணம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மா (நாகம்மா)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் உருத்திராதேவி, தண்மதி, புஸ்பராசா, காலஞ்சென்ற தவராசா மற்றும் நீதிராசா, தயாநிதி, மனோகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கெங்காதர்சினி, யுகேந்திரன், Dr.பாலச்சந்திரன், பேபி, பிறேமினி, ஆனந்தகௌரி, ஜெயராஜன், ரூபகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜித்ரா, குருபரன், நிபாசினி, துசேந்திரன், கோசேந்திரன், காலஞ்சென்ற கிசோக்குமார் மற்றும் கௌசிகி, துசித்ரா, கிருசாந்தி, பிரதீப், டிசானி, டினூசா, பிரசாந், கஜன், லோஜிதா, டினேஸ், திரிக்சா, கரூசன், அருண், யசானா, லோசனா, பிரிசனா, ஆர்த்தி, ஆரண்ணியன், அருண், பிரசன்னா, திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் சஜீவ் இன் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2010) வியாழக்கிழமை முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 மணிவரை HOLDERS HILL ROAD, MILL HILL இல் லண்டனில் அமைந்துள்ள HENDON CREMATORIUM இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
M.Pushpan (லண்டன்) 07949721781
J.Thaya (லண்டன்) 07957698248

(94015)


## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஜன.21

வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு 'பீக்கொன்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கச் செயலாளர் கே.ஜசீதன் அறிவித்துள்ளார்.

இதில் 800 பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பினை உறுதி செய்தல் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் பட்டம் பெற்றவர்கள் தங்களது விவரங்களையும், கிராமசேவகரது அத்தாட்சிப் பத்திரங்களையும் சமர்ப்பித்துத் தமக்கான வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(50-16)


### வீடு வாடகைக்கு

நீர்வேலி, கரந்தன், இராமுப்பிள்ளை வித்தியாலயத்திற்கு 200 மீற்றர் தூரத்தில் இராச வீதியில் 5 அறைகளுடன் கூடிய 1200 சதுர அடி விஸ்தீரணமுள்ள வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:-0213215710,0775537349

### தவறிவிட்டது

பொன்னையா மகேந்திரராசா என்பவரது தேசிய அ.அட்டை (581741896V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி/564230)

T.P. 0776678477

### வீடும் காணியும் உடன் விற்பனைக்கு

மருத்துவ பீடத்திற்கு அண்மையில், கொக்குவில் கோணாவளை வீதியில் (கருவப்புலம் வீதி) அமைந்துள்ள 12 பரப்புக் காணியும், கல் வீடும், உடனடியாக விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவர்களுக்கு வழங்கப்படும்.

தொடர்பு: பிரபா (கனடா) - 4165629745
பிரபா (சுன்னாகம்) - 0214591811
0213214954, 0776476864

(94016)



## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் .மாவட்ட கூட்டுறவுச்சபையின் அங்கத்துவ சங்கமாகிய காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர்

அமரர் **சுப்பிரமணியம் சிவஞானம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

(சி/564337)

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
12, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை.



## மரண அறிவித்தல்

### பிலிப் யோசப் பெனடிக்ற்

(இளைப்பாறிய புகையிரத தலைமைக் காப்பாளர்)



புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கண்டி வீதி, இல.236 ஐ வதிவிடமாகவும் கொண்ட பிலிப் யோசப் பெனடிக்ற் நேற்று (20.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அல்பிரெட் -யோசபின் தம்பதியினரின் அன்பு மருமகனும், றோஸ் ஜெயவதியின் அன்புக்கணவரும், ராஜன் (Sewalanka), செல்வா, சந்திரா (அவுஸ்திரேலியா), போல் (GTZ), ராஜி (நியூசிலாந்து), ஆகி யோரின் பாசமிகு தந்தையும், காலம்சென்ற திரேசா, மற்றும் மொறீன், செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், றொஷான், றஜீவ், நிரோஷன், மதுஷன், ரீனா, மிதுன், ஜீனா, கெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

236, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (94018)

தகவல்:
றோஸ் ஜெயவதி (மனைவி).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் இரு பிரிவினர் இடையே மோதல்
# 200 பேர் பலி; 800 பேர் காயம்; ஊரடங்கு அமுல்

## தெருக்களில் ஆங்காங்கே சடலங்கள்



சுனோ, ஜன. 21

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் மத்திய பிளாட்டூ மாகாணத்தின் தலைநகரான ஜோஸ் நகரில் இரு பிரிவினருக்கிடையே மூண்ட கடும் மோதலில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டனர். 800 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தெருக்களில் ஆங்காங்கே கிடந்தன. அவர்களின் சடலங்களை இரு பிரிவினரும் தத்தம் பகுதிக்கு எடுத்துச் சென்றனர்.

நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர படையினரும் பொலிஸாரும் தொடர்ந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். இருந்தும் கலவரத்தை அடக்க முடியவில்லை. இந்தக் கலவரம் புகுரு நகருக்கும், புறநகர்ப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

எனவே, இப்பகுதிகளில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். நகரப் பிராந்தியத்தில் 24 மணிநேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது என அதிகாரி கள் தெரிவித்தார்கள்.

ஜோஸ் நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த மோதல் ஆரம்பமாகியது. மறுதினமான திங்கட்கிழமையும் இது நீடித்தது. இதையடுத்து, பிரதி ஜனாதிபதி குட்லக் ஜொனாதன் ஊரடங்கு அமுலாக்கலைப் பிரகடனப்படுத்தினார்.

அதேவேளை, சட்டத்தையும், ஒழுங்கையும் மீள நிலைநாட்டுவதற்குப் பொலிஸாருக்கு உதவுமாறு அவர் துருப்புகளுக்கும் உத்தரவிட்டார் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நோய்வாய்ப்பட்டுள்ள நைஜீரிய ஜனாதிபதி உமறு யார்எடுவா, மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக நவம்பரில் சவூதி அரேபியாவுக்குச் சென்றார். அவர் இதுவரை சவூதி வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார். அதனால் பிரதி ஜனாதிபதி குட்லக் ஜொனாதன், நிறைவேற்று அதிகாரத்தை தாம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

ஜோஸ் நகரில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருப்பினும், புறநகர்ப் பகுதிகளுக்கு இம்மோதல் பரவியுள்ளது. துப்பாக்கிப் பிரயோகங்களும், தீ வைப்புச் சம்பவங்களும் நீடிக்கின்றன. உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் உள்ளூர் அதிகாரிகள் அச்சம் தெரிவித்தார்கள்.

ஜோஸ் நகர மத்திய மசூதி பிரதம தலைவர் பலாராபி தாவுத் குறிப்பிடுகையில், "ஞாயிற்றுக்கிழமை முதல் இதுவரை 192 சடலங்கள் எண்ணப்பட்டுள்ளன. பாரிய புதைகுழியில் சடலங்களை அடக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றார். மசூதி ஊழியர் முஹம்மது தாங்கோ சிட்டு இது குறித்து ரொய்ட்டருக்குத் தெரிவிக்கையில், தான் 149 சடலங்களைக் கணக்கிட்டுள்ளார் - என்றார்.

"19 சடலங்கள் ஞாயிற்றுக்கிழமையும், 52 சடலங்கள் செவ்வாய்க்கிழமையும் அடக்கம் செய்யப்பட்டன. அடக்கம் செய்வதற்கு இன்னும் 78 சடலங்கள் உள்ளன. அடக்கத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், கிறிஸ்தவர்களில் மரணித்தவர்களின் எண்ணிக்கை உடனடியாக வெளியாகவில்லை. ஜோஸ் அங்கிலிக்கன் பேராயர் பெஞ்சமின் காஷி பி.பி.ஸிக்குத் தகவல் தருகையில், "நகரில் பாதுகாப்புக் கடமையில் படைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதனால் நிலைமை சீரடைந்துள்ளது. எனினும், கலவரங்கள் புறநகரப் பகுதிகளுக்குப் பரவியுள்ளன" என்றார்.

நைஜீரிய ஜோஸ் நகரில் அடிக்கடி மதவாதச் சண்டைகள் தலைதூக்கிவிடும். வடக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். தென்பகுதியில் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழ்கிறார்கள்.

# தண்டனைக் காலம் முடிவடைந்தும் 47 வெளிநாட்டினர் பாக். சிறையில்!

லாகூர், ஜன. 21

தண்டனைக்காலம் முடிவடைந்த பின்னரும் 47 வெளிநாட்டினர் பாகிஸ்தான் சிறையில் அவதிப்படுகின்றனர். தண்டனைக்காலம் முடிவடைந்த கைதிகளை அவரவர் நாடுகளுக்கு அனுப்பவேண்டியது சர்வதேச விதிமுறையாகும். அதன்படி வெளிநாட்டைச் சேர்ந்த கைதிகளை அனுப்புவதற்கான நடைமுறைகள் எதையும் பாகிஸ்தான் அதிகாரிகள் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இதனால் பாகிஸ்தான் சிறையில் உள்ள 47 வெளிநாட்டவர்களின் தண்டனைக் காலத்தை மேலும் மூன்று மாத காலம் வரை நீடிப்பதற்கு பாகிஸ்தான் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருப்பினும், இவர்களை விரைவாக தத்தம் நாட்டிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அது அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கைதிகளில் 5 பெண்களும் அடங்குவர். இவர்களில் 36 பேர் இந்தியர்கள். ஏனையோர் நேபாளம், ஏமன், சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் வெவ்வேறு குற்ற நடவடிக்கைகளுக்காக தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டவர்களாவர்.

# நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த ஹெய்ட்டிக்கு மேலதிக துருப்புகள்

## ஐ.நா. பாதுகாப்புச் சபை அனுமதி

நியூயோர்க், ஜன. 21

பாதுகாப்புப் பணிகள், சீரான நிவாரணப் பொருள்கள் விநியோகம் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக 3 ஆயிரத்து 500 மேலதிக படையினரை பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஹெய்ட்டிக்கு அனுப்பி வைப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அனுமதி அளித்துள்ளது.

ஹெய்ட்டியில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் மத்தியில் உணவுப்பொட்டலங்கள், குடிநீர் போத்தல்கள், இதர அத்தியாவசியப் பண்டங்கள் ஆகியவற்றை ஆகாயத்திலிருந்தபடி வீசுவது குறித்து அமெரிக்க அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள்.

அப்படி ஹெலிக்கொப்டர்களிலிருந்து வீசினால், அவற்றை எடுக்க முயலும் மக்களுக்கிடையே மோதல்கள் மூளும் என்ற அச்சமும் எழுந்துள்ளது. வீதிவழியாக இந்நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதிலும் பாதுகாப்பு பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இந்தப் பணிகளை சீராக மேற்கொள்ளும் பொருட்டே மேலதிக படையினர் அனுப்பப்படவுள்ளனர். பாலங்கள் ஆங்காங்கு உடைந்துள்ளன. பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அதனால் தரைமார்க்கமான பயணங்களுக்கும் தடை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இழுவை படகிலிருந்து நிவாரணப் பொருள்கள் சரக்குக் கப்பலுக்கு ஏற்றப்படுகின்றன. இவை ஹெய்ட்டியின் முக்கிய துறைமுகம் வழியாக அனுப்பப்படும்.

பூகம்பத்தில் துறைமுகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் பெரிய கடற்கலங்கள் எவையும் இதுவரை நிலைகொள்ள அங்கு அனுமதிக்கப்படவில்லை.

# இந்தியர் மீதான தாக்குதல் இனவெறி நோக்கமுடையது

## ஆஸி. முன்னாள் இராணுவத் தளபதி உறுதி

கன்பெரா, ஜன. 21

ஆஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருவது இனவெறித் தாக்குதல்தான் என்று ஆஸ்திரேலிய முன்னாள் இராணுவத் தளபதி பீட்டர் காஸ்கிரோவ் தெரிவித்துள்ளார்.

இவை சாதாரண குற்றச்செயல்களே என்று ஆஸ்திரேலிய அரசு கூறி வருவதையும் அவர் கண்டித்துள்ளார். கடந்த 18 மாதங்களாக இந்திய மாணவர்கள் மீது ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

நூற்றுக்கும் அதிகமான இந்திய இளைஞர்கள் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளனர். இதுவரை, மூன்று பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு இனவெறி தான் காரணம் என இந்திய தரப்பில் கருதப்படுகிறது.



இதனால் இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான உறவு கசந்து வருகிறது. மேலும் ஆஸ்திரேலியாவுக்குப் படிக்கப் போகும் இந்திய மாணவர்களின் எண்ணிக் கையும் குறையத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், முன்னாள் இராணுவத் தளபதி பீட்டர் காஸ்கிரோவ் 'தி ஏஜ்' இதழுக்கு தாம் அளித்துள்ள பேட்டியில், "இது இனவெறித் தாக்குதல் இல்லை என்று யாராவது கூறினால் அவர்கள் சுத்தப் பைத்தியக்காரர்கள் என்றுதான் அர்த்தம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில்

# ஆஸ்திரேலிய தம்பதியினர் இந்திய சாரதி மீது தாக்குதல்

மெல்போர்ன், ஜன .21

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் மேலும் ஓர் இந்திய டாக்சி சாரதி தாக்கப்பட்டுள்ளார். இதில் அவருடைய முகத்தில் காயம் எற்பட்டுள்ளது.

அவரை ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து தாக்கியுள்ளனர். அவர்களின் முகங்கள் வீடியோவில் பதிவாகியுள்ளன. அதை ஆஸ்திரேலியப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

மெல்போர்ன் நகரின் வடக்குப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் இந்திய டாக்சி சாரதிகள் மீது நடத்தப்பட்ட ஐந்தாவது சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்கப்பட்ட இந்தியரின் வயது 25. தாக்குதல் குறித்து அவர் பொலிஸாரிடம் கூறுகையில், "சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. எனது டாக்சியில் பயணித்த ஒரு ஆஸி. ஜோடி என்னைத் தாக்கியது. இதில் எனது முகத்தில் காயம் ஏற்பட்டது. உடனடியாக நான் 'அம்புலன்ஸை' வரவழைத்து வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றேன்" என்றார்.

ரிசர்வாயா என்ற இடத்தில் உள்ள சம்மர்ஹில் ஹோட்டல் முன்பு இந்த இந்தியர் தனது டாக்சியுடன் நின்றுகொண்டிருந்தார். அப்போது ஐந்து பேர் அங்கு வந்து சவாரி போகவேண்டும் எனக் கேட்டுள்ளனர். சாலைப் போக்குவரத்து விதிமுறைப்படி அனைவரையும் ஏற்றிச் செல்லமுடியாது என்றும் 2 பேர் மட்டுமே பயணிக்கலாம் என்றும் இந்தியர் கூறியுள்ளார்.

இதையடுத்து ஓர் ஆணும், ஒரு பெண்ணும் மட்டும் ஏறியுள்ளனர். டாக்சி கிளம்பிய பின்னர் அந்தப் பெண் தங்களுடன் வந்த மற்றவர்களையும் ஏற்ற மறுத்தது குறித்து இந்தியருடன் சண்டை பிடித்துள்ளார். பிளன்டி சாலையில் போய்க்கொண்டிருந்தபோது டாக்சியில் பயணித்த ஆண், சாரதியின் முகத்தில் குத்தியுள்ளார். பின்னர் அந்தப் பெண்ணும் சேர்ந்து தாக்கியுள்ளார். இதையடுத்து, டாக்சியை நிறுத்திவிட்டு இருவரும் குதித்து ஓடிவிட்டார்.

# அமெரிக்கா மீது புதிய தாக்குதல் நடத்த ஏமனிலுள்ள தீவிரவாதிகள் திட்டம்

வாஷிங்டன், ஜன. 21

அமெரிக்கா மீது புதிய தாக்குதல்களை நடத்த பயங்கரவாதிகள் தயாராகி வருகின்றனர். ஏமனில் உள்ள பயங்கரவாதிகளால் அமெரிக்காவுக்கு அதிக ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியிட்டுள்ள செய்தியில், "கிறிஸ்மஸை ஒட்டி அமெரிக்க விமானத்தில் நடக்க விருந்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்து இம்மாத தொடக்கத்தில் ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகம் அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால், விரிவான ஆய்வில் அமெரிக்க நிர்வாகம் தெரிவித்ததை விட அல்-குவைதா பயங்கரவாதிகள் புதிய தாக்குதல்கள் நடத்தத் தயாராகி வருகிறார்கள் என்றும் அதிகளவில் ஆபத்து உண்டென்றும் தெரியவந்துள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் அமெரிக்க புலனாய்வுத் துறையினர் ஏமனிலுள்ள அல்-குவைதா இயக்கத்தினரின் தகவல்களை இடைமறித்து கேட்டுள்ளனர். ஒமர் பாரூக் என்ற பெயருடைய நபர்தான் புதிதாக நிகழவுள்ள தாக்குதல்களுக்குக் காரணமாக இருப்பார் என அதிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் அந்தச் செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவோ தலைவர் பிரசண்டா நம்பிக்கையற்ற ஒரு மனிதர்

## நேபாள பிரதமர் மாதவ் குமார் காட்டம்

"அண்டை நாட்டின் மீது குற்றஞ்சுமத்தக்கூடிய நம்பிக்கையற்ற மனிதராக மாவோயிஸ்ட் தலைவர் பிரசாண்டா உள்ளார்" என நேபாள பிரதமர் மாதவ் குமார் நேபாள் தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமரும், மாவோயிஸ்ட் அமைப்பின் தலைவருமான பிரசாண்டா, இந்தியா மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நேபாளத்தின் உள்நாட்டு விடயங்களில் இந்தியா தலையிடுகிறது. இந்தியாவின் உத்தரவுப்படி நேபாள தலைவர்கள் செயற்படுகிறார்கள் என அவர் கூறியுள்ளார். இதன் மூலம், அண்டை நாட்டின் மீது குற்றஞ்சுமத்தக்கூடிய நம்பிக்கையற்ற மனிதராக அவர் உள்ளார். அவரின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. தற்போது நான் பிரதமராக உள்ளேன்" என்றும் மாதவ் குமார் நேபாள் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கானா விவகாரம் மீண்டும் சூடு பிடிக்கிறது

## 24 மணி நேரத்தில் 2 மாணவர் உட்பட மூவர் தற்கொலை

ஐதராபாத்,ஜன.21

தனித்தெலுங்கானா விவகாரம் ஆந்திராவில் மீண்டும் பற்றி எரிய தொடங்கி விட்டது. கடந்த 24 மணி நேரத்தில் தெலுங்கானாவில் 2 மாணவர்கள் உட்பட 3 பேர் தற்கொலை செய்துள்ளனர். நேற்று முன்தினம் காலையில் உஸ்மானியா பல்கலை மாணவர் வேணுகோபால் தீக்குளித்தார்,

பின்னர் மாவட்ட நிர்வாக துறையில் பணியாற்றும் 40 வயதான சுரா நேரு நாயக் என்பவரும், இரவில் சுவர்னா என்ற கல்லூரி மாணவியும் தனித் தெலுங்கானா அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி கடிதம் எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

தற்கொலை சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இதற்கிடையில் தெலுங்கானாவில் மாணவர் செயற்பாட்டுக்குழு சார்பில் 48 மணி நேரம் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கடையடைப்புக்கு தெலுங்கானா கூட்டு நடவடிக்கை குழுவும் ஆதரவு தெரிவித்துள்ளது. இதன் படி காலையில் கடையடைப்புத் தொடங்கியது கல்வி நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள் , வங்கி ஏ.டி.எம்கள், பெற்றோல் நிலையங்கள் கூட மூடிக்கிடக்கின்றன. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும் தொடங்கியுள்ளன. நேற்று தீக்குளித்து இறந்த உஸ்மானியா பல்கலை மாணவர் வேணுகோபாலின் உடலை தர மறுக்கும் சக மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இறந்த மாணவர் குடும்பத்தாருக்கு 15 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. பலர் கல் வீச்சு சம்பவத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி பிரயோகம்நடத்தினர். இதில் பல மாணவர்கள் காயமடைந்தனர். பொலிஸார் கூட்டத்தை கலைக்க கண்ணீர் புகைக் குண்டுப் பிரயோகத்தையும் நடத்தினர். இதனால் மீண்டும் கலவரபூமியாக மாறியுள்ளது ஆந்திரா.

இதற்கிடையில் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்ளுமாறு சபாநாயகர் வீட்டின் முன் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி எம்.எல். ஏக்கள் குவிந்ததால் அங்கும் பதற்றமான சூழல் நிலவுகின்றது.

# சூர்யா, வடிவேலு,இயக்குநர் ரவிக்குமார் வீடுகளில் வருமான வரித்துறை பாய்ச்சல்





சென்னை,ஜன.21

நடிகர்கள் சூர்யா, வடிவேலு, திரைப்பட இயக்குநர்கள் கே.எஸ். ரவிக்குமார், முருகதாஸ் ஆகியோர் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் அதிரடி சோதனை நடத்தினர். இதனால் சினிமா வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தி.நகர், அடையாறு ஆகிய இடங்களிலுள்ள நடிகர் சூர்யாவின் வீடுகள், சாலிகிராமம், மதுரையில் உள்ள நடிகர் வடிவேலுவின் வீடுகள், சைதாப்பேட்டையிலுள்ள இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரின் வீடு, விருகம்பாக்கத்திலுள்ள இயக்குநர் முருகதாஸின் வீடுகளிலும் ஆகியவற்றில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் காலையில் சோதனை தொடங்கினர்.

நடிகர்கள், இயக்குநர்களின் அலுவலகங்கள் மற்றும் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புள்ள இடங்களிலும் சோதனை நடந்தது. மதுரை ஐராவதநல்லூரில் உள்ள நடிகர் வடிவேலுக்கு சொந்தமான வீட்டிலும் நேற்று முன்தினம் சோதனை நடத்தப்பட்டது. பொங்கல் பண்டிகைக்காக இந்த வீட்டிற்கு கடந்த 13 ஆம் திகதி வடிவேலு வந்து சென்றுள்ளார்.

பிரபலமான சில வர்த்தக நிறுவனங்கள், நகைக்கடைகள், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்ள சரக்கு பெட்டக வளாகம் என 25 இற்கும் மேற்பட்ட இடங்களில் நேற்று முன்தினம் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 250 இற்கும் அதிகமான வருமான வரி அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர். துப்பாக்கி ஏந்திய பொலிஸாரின் பாதுகாப்புடன் நடந்த சோதனை சில இடங்களில் இரவு வரை நீடித்தது.

சோதனை குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, அந்த அதிகாரிகள் கூறியவை வருமாறு:-

'சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சோதனையின் முடிவில் தான் முழுவிவரம் தெரியவரும். உடனடியாக எதுவும் தெரிவிக்க முடியாது. எங்களுக்கு கிடைத்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் சோதனைக்குப் பின்னர் சிலரை அலுவலகத்திற்கு நேரில் அழைத்து விளக்கம் கேட்போம். அவர்கள் அளிக்கும் விளக்கம் சரியாக இருந்தால் மேல் நடவடிக்கை இருக்காது. விளக்கம் சரியாக இல்லை என்றால் வருமானவரிச் சட்டப் படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

# இந்தியச் செய்திகள்

# சென்னை பல்கலை. குழு இலங்கைக்கு விஜயம்

சென்னை,ஜன.21

''இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களின் மேற்படிப்புக்காக, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் குழு, இலங்கை செல்லவிருக்கிறது,'' - என்று சென்னை பல்கலை துணைவேந்தர் திருவாசகம் தெரிவித்தார்.

மேலும் அவர் இது பற்றிக் கூறியவை வருமாறு:-

இலங்கை முகாம்களில் தங்கியுள்ள, இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு, நூறு சதவீதம் முழுமையான இலவச கல்வியை அளிக்கவுள்ளோம். அதற்கான ஆலோசனை கூட்டம், பல்கலை வளாகத்தில் நடந்தது. கனிமொழி எம்.பி., இலங்கை துணை தூதர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் பங்கேற்றனர்.

இலங்கையில் ஜி.சீ.ஈ.உயர்தரம் படித்து விட்டு, தமிழக முகாம்களில் தங்கியுள்ள தகுதி வாய்ந்த 4,000 இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர் சென்னைப் பல்கலைக்கழக உதவியுடன் மேற்படிப்பு படிக்க உள்ளனர். ஆங்கில அறிவு குறைவாக உள்ளவர்களுக்கு, மூன்று மாதம் பயிற்சியளித்து, அவர்களை மேற்படிப்புக்கு அனுப்பவுள்ளோம். இலங்கையில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களுக்கும் மேற்படிப்பு அளிக்க உள்ளோம். இதற்கு, இலங்கை அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கையில் தேர்தல் முடிந்த பின்பு, அதற்கான பணிகள் துவங்கும். சென்னை பல்கலையில் உள்ள ஆசிரியர் குழுவினர், இலங்கை செல்லவுள்ளனர். அக்குழுவினருடன் சேர்ந்து நானும் இலங்கை சென்று, தமிழர்களின் மேற்படிப்புக்கு உதவி செய்யவுள்ளேன் - என்றார்.

## இராணுவத் தளபதிக்கு காது கேட்காதாம்

புதுடில்லி,ஜன.21

இராணுவ தலைமை தளபதி தீபக் கபூருக்கு இடது காது சரியாக கேட்கவில்லை. இதனால் அவர் வருகிற மார்ச் மாதம் ஓய்வு பெறுகிறார்.

இராணுவ தலைமை தளபதி தீபக் கபூர் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்கா சென்றார். அங்கு தீவிரவாத எதிர்ப்பு ராணுவ போர் ஒத்திகையை பார்வையிட்டார். அதில் பயங்கர சத்தத்துடன் பீரங்கி, துப்பாக்கிகள் வெடித்தன. தீபக் கபூரும் சத்தம் எழுப்பும் சில ஆயுதங்களை இயக்கி பார்த்தார். அளவுக்கு அதிகமான சத்தத்தை கேட்டதால் அவரது இடது காது பழுதடைந்தது. சரியாக கேட்க வில்லை. கடந்த நவம்பர் மாதம் புதுடில்லியில் உள்ள இராணுவ வைத்திய சாலையில் அவர் உடல் பரிசோதனை செய்து கொண்டபோதுதான் அந்தக் கோளாறு கண்டு பிடிக்கப்பட்டது.

# வேலூர் கோட்டை மசூதியில் முஸ்லிம் மக்கள் தொழுகைக்கு அனுமதி கோரி ஆர்ப்பாட்டம்!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஏற்பாடு

வேலூர் கோட்டைக்குள் உள்ள மசூதியில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரி திருமாவளவன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டிருப்பதால் நகரில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வேலூர் கோட்டைக்குள் உள்ள மசூதி தற்போது இந்தியத் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இந்த மசூதியில் முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த அந்தக் கட்சி திட்டமிட்டிருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திலும் கோட்டையைச் சுற்றிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. வேலூர், கடலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் சுமார் ஆயிரத்து 800 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நகர் முழுவதும் பதற்றம் நிலவுகிறது.

# அரவாணிகளுக்கு அழகுராணிப் போட்டி இன்று சென்னையில் நடைபெறுகின்றது

சென்னை,ஜன.21

'இந்தியன் சூப்பர் குயின்' என்ற பெயரில் அரவாணிகளுக்கான அகில இந்திய அழகு போட்டியின் முதல் சுற்று, சென்னையில் இன்று நடக்கிறது.

'டுவல்வ் நூன் எண்டர்டெய்ன்மென்ட்' மற்றும் 'விகேர் இண்டர்நேஷனல்' ஆகிய நிறுவனங்கள் இணைந்து, அரவாணிகளுக்கான அழகு போட்டியை இந்தியன் சூப்பர் குயின் என்ற பெயரில் நடத்துகிறது. இந்த போட்டியின் முதல் சுற்று சென்னை, பெங்களூர், டில்லி, மும்பை, ஐதராபாத், போபால், புவனேஸ்வர், அகமதாபாத், ஜெய்ப்பூர், கொல்கத்தா ஆகிய 10 நகரங்களில் நடக்கிறது.

போட்டியாளரின் படைப்புத்திறன், சிறப்பு திறன்கள், தன்னம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் 3 பேர் தேர்வு செய்யப்பட்டு, அரையிறுதி சுற்றுக்கு அனுப்பப்படுவார்கள்.

சென்னையில் இந்த போட்டி, கோயம்பேடு ரவுண்டானா அருகில் உள்ள கேட்வே ஹோட்டலில் இன்று நடக்கிறது.

பெப்ரவரி 6 ஆம் திகதி, மும்பையில் அரையிறுதி போட்டி நடக்கிறது. இதில் தேர்வு செய்யப்படும் 12 பேருக்கு அழகு தொழில் துறை நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்படும். இவர்களில் மிகச்சிறந்த முறையில் திறமையை வெளிப்படுத்தும் திருநங்கைக்கு, பெப்ரவரி 21 ஆம் திகதி டில்லியில் நடக்கும் இறுதி போட்டியில் 'இந்தியன் சூப்பர் இளவரசி' என்ற பட்டம் அளிக்கப்படும்.

டுவல்வ் நூன் எண்டர்டெய்ன்மென்ட் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி லட்சுமிநாராயணன் திரிபாதி கூறுகையில், அரவாணிகளுக்கான அழகு போட்டியில், யார் மிகச்சிறந்தவர் அல்லது மிக அழகானவர் யார்? என்பது முக்கியமில்லை. அதைவிட எல்லோரையும் போல அவர்களும் மனிதர்கள் என்று உலகுக்கு காட்டவே இந்த போட்டியை நடத்துகிறோம் என்றார்.

# இந்து விரோதப் போக்கை கடைப் பிடிக்கிறது தி.மு.க.

## பா.ஜ.க. குற்றச்சாட்டு

''தி.மு.க. அரசு இந்து விரோத போக்கை கடைபிடிப்பதால் இந்துக்கள் மீதான தாக்குதல் தொடர்கின்றது''- என்று பாரதீய ஜனதாக் கட்சி மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம்,சின்னாளபட்டி அருகே, பெருமாள்கோயில்பட்டியில், பொங்கல் விழா தொடர்பாக எழுந்த பிரச்சினையில், இந்து வன்னியர் மீது தாக்குதல் நடந்ததில் ஆண்டி (வயது 45) என்பவர் இறந்தார்.

பெருமாள்கோயில்பட்டியில் பொலிஸ் பாதுகாப்பு தொடர்கிறது.பொன்.ராதாகிருஷ்ணன் பெருமாள்கோயில்பட்டி வந்தார். இச்சம்பவ இடம், சர்ச்சைக்குரிய கோயில் இடம் ஆகியவற்றை பார்வையிட்டு பின்னர் அவர் கூறியவை வருமாறு:-

பெருமாள்கோயில்பட்டியில் மதப்பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. இதனால், ஆண்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இறந்தவரின் குடும்பத்திற்கு முதல்வர் நிவாரண நிதியில் இருந்து 5 லட்சம் ரூபா வழங்க வேண்டும். தாக்குதல் நடத்தியவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுத்து, தண்டனை வழங்க வேண்டும். தி.மு.க. அரசு இந்து விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. இதனால், இந்துக்கள் மீதான தாக்குதல் தொடர்கிறது. இந்துக்கள் ஒற்றுமையாக, அணிசேர மாட்டார்கள். எனவே, இந்துக்களின் ஓட்டுக்களை விலைக்கு வாங்கி விடலாம், எனக் கருதி அரசு செயல்படுகிறது- என்றார்.



மறைந்த பாடகர் சீர்காழி கோவிந்தராஜனின் பவள விழா சென்னை யில் நடந்தது. இதன்போது விழாவிற்கான மலரை கருணாநிதியிடம் இருந்து அமைச்சர் வாசன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்கு 415!

சிட்டகாங், ஜன.119

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் தனது இன்னிங்ஸில் இந்தியாவை விட ஓர் ஓட்டம் குறைவாகப் (242) பெற்று ஆட்டமிழந்தது பங்களாதேஷ் அணி.

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷ்ிக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சிட்டகாங்கில் நடந்துவருகிறது.

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 243 ஓட்டங்களுக்குள் சுருண்டிருந்தது.

பின்னர் தனது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, இந்தியாவை விட ஓர் ஓட்டத்தால் (243) பின்னிலையுடன் ஆட்டமிழந்தது.

பின்னர் நேற்றுமுன்தினம் மாலை தனது இண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, 90 ஓட்டங்களைப் பெற்றவேளை ஷேவாக்கை (45) இழந்தது.

பின்னர் அன்றைய ஆட்ட நேர முடிவின்போது ஓர் விக்கெட் இழப்புக்கு 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கம்பீர் 47 ஓட்டங்களுடனும், மிஷ்ரா 24 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இறுதியாக இந்திய அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 413 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்தியாவின் துடுப்பாட்டத்தில் கம்பீர் சதமடித்து (116) அசத்தினார். இந்தச் சதத்தின் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 5 சதங்களை தொடர்ந்து எடுத்த 4ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

மிஷ்ராவும் (50) சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

ஏனைய வீரர்களான டிராவிட் (24), சச்சின் (16), யுவராஜ் சிங் (25), தினேஷ் கார்த்திக் (27), சஹீர்கான் (20) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

லக்ஷ்மன் 69 ஓட்டங்களுடனும் இஷாந்த் சர்மா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்துவீச்சில், சஹிப் உல் ஹசன், முகமுதுல்லா ஆகியோர் 2 விக்கெட்டுகளையும், இஸ்லாம், சாஹதட் குசைன், ருபேல் குசைன் ஆகியோர் தலாஒருவிக்கெட்டையும்கைப்பற்றினர்.

பின்னர் 415 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, இம்ருல் கயேஸ் (1), நவீஸ் (21) ஆகியோரை விரைவாகவே இழந்தது.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் தமிங் இக்பால் (23), மொஹமட் அஷ்ரப்புல் (16) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சஹீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாள் ஆகும்.

## வீனஸ் முதலாவது ஆட்டத்தில் வெற்றி!

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களின், முதல் சுற்று ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஜோகோவிச் மற்றும் பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்றுஆட்டங்களில், 6ஆம் தரநிலையில் உள்ள வீனஸ் வில்லியம்ஸ் 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் செக். வீராங்கனையான சபரோவாவை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

10ஆம் தரநிலையில் உள்ள போலாந்து வீராங்கனை ராத்வான்ஸ்கா ஜேர்மனி வீராங்கனை தாத்யானா மாலெக்கை 6-1, 6-0 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

டென்மார்க்கின் வளர்ந்து வரும் நட்சத்திரமான கரோலின் வோஸ்நியாக்கி, கனடாவின் வீராங்கனையை முறியடித்து 6- 4, 6- 2 என்ற செட்களில் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் இரண்டாம் நாள் ஆட்டத்தில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலிய வீரரான லெய்டன் ஹெவிட், செர்பிய நட்சத்திரம் நோவாக் ஜோகோவிச், பிரான்ஸ் வீரர் வில்ப்ரெட் சொங்கா ஆகியோர் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

## 2ஆவது சுற்றில் நடால்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் தொடரின் 3ஆம் நாளான நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடால் தனது 2ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்லோவேகியா வீரரான லூகாச் லாக்கோவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஏனைய ஆட்டங்களில் அமெரிக்க வீரரான ரொடிக், சிலி வீரரான கொன்சாலஸ், கஜகஸ் தான் வீரர் கொரொலெவ் ஆகியோர் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

## புலிகள் மூலம் ஜனாதிபதியைக் கொல்ல முயன்ற விடயத்தை முன்னிறுத்தி

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை அச்சுறுத்தியே தன் பக்கம் சாயவைத்தது அரசு எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 21

விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவரைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்ய முயன்றாராம். இது பற்றிய விடயங்கள் அம்பலமானமையை அடுத்து, அதைப் பயன்படுத்தி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை மிரட்டி அடக்கி, அச்சுறுத்தித் தன்பக்கம் வரவைத்தது அரசு.

- இவ்வாறு விடயத்தைப் போட்டுடைத்திருக்கின்றன எதிர்க்கட்சிகள்.

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சிகள் நடத்திய மாநாட்டில் இதுபற்றிய விடயங்களைப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மங்கள சமரவீரவும், அனுரகுமார திஸநாயக்கவும் வெளிப்படுத்தினர்.

இதற்கான சி.டி. ஆதாரப் பதிவுகளையும் அவர்கள் வெளியிட்டனர்.

அண்மைக்காலம் வரை ஐ.தே.கட்சியின் முக்கிய எம்.பியாகச் செயற்பட்டு வந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடந்த மாதமே ஆளும் கட்சிப் பக்கம் தாவி அமைச்சரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்விடயம் தொடர்பாக மங்கள சமரவீரவும், அனுரகுமார திஸநாயக்காவும் நேற்று மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் மிரட்டலைத் தொடர்ந்தே ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூவருடன் தொடர்பு கொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டினார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ என்று கூறப்படுகின்றது.

எனினும், தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதால் அவரது திட்டம் தோல்வியடைந்தது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்களுடனும் நடத்திய உரையாடல்களின் பதிவுகள் எங்களிடமுள்ளன.

இவற்றின் நகல் வடிவங்களை உங்களுக்கு வழங்குகிறோம்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுபற்றிய தடயங்களை அரசிடம் சமர்ப்பித்த பின்னரே மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்குமாறு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது அழுத்தங்கள் கொடுக்கப்படுவது ஆரம்பமாகியது.

இந்த விடயத்தில் தொடர்புபட்ட மூன்று விடுதலைப் புலிகளும் இன்னமும் தடுப்புக் காவலிலேயே உள்ளனர். தங்களை விடுதலை செய்ய வேண்டாம் என அவர்கள் கோரியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

- என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## இரு பிரதான வேட்பாளர்களும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலம் கடந்த நிலையிலாவது அரசியல் யோசனைகளின் வடிவத்தை முன்வைக்குமாறும் இக்குழு இரு பிரதான வேட்பாளர்களையும் கோரியுள்ளது.

இலங்கையின் மூத்த இராஜதந்திரியான ஜயந்த தனபால, மதத்தலைவர்களான பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ், ஆயர் டி. சிக்கேரா, வண.பெலன்வில விமலரட்ண தேரர் மற்றும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஸி.வி.விக்னேஸ்வரன், கலாநிதி தேவநேசன் நேசையா, சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன, ஜயம்பதி விக்கிரமரட்ண என பல முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய 'வெள்ளிக்கிழமை மன்றம்' என்ற குழுவே இந்தக் கடிதத்தை இரு வேட்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இரு வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பில் பாரிய வெற்றிடம் காணப்படுவது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இரு தேர்தல் விஞ்ஞாபனங்களும் இலங்கையில் வாழும் பல சமூகங்களின் அடிப்படை உரிமை குறித்துப் போதியளவு அக்கறை செலுத்தவில்லை. குறிப்பாகத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் பற்றி எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை.

அவர்களுடைய நீண்ட காலத் துயரங்களுக்கும், அபிலாஷைகளுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

அனைத்து மக்களும் தேசிய வாழ்வில் சமமாகவும், நீதியாகவும் கலந்துகொள்ளலாம் எனக் கருதும் நிலையை உருவாக்குவதற்காக எமது நாட்டை மீள வடிவமைப்பது, பன்முக சமுதாயமொன்றை உருவாக்குவதற்காக எமது அரசமைப்பை மீள எழுதுவது ஆகியவை தொடர்பில் நம்பகத்தன்மை மிக்க திட்டமொன்றை நீங்கள் முன்வைக்கவில்லை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - தேசிய ரீதியில் முக்கியமான - இந்த விடயத்திற்குத் தீர்வு காண்பதற்குத் தவறுவது எமது நாட்டின் எதிர்காலத்திற்கு சிறந்ததாக அமையாது.

நேர்மையான - அர்த்தபுஷ்டிமிக்க - அரசியல் வாக்குறுதிகள் இந்தத் தருணத்தில் மேற்கொள்ளப்படாவிட்டால் பல வருடங்களுக்கு சமூகப் பதற்றமும், பிளவும் நிலவும் மோசமான நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

ஆகவே, மிகவும் காலங்கடந்த இந்தத் தருணத்திலாவது அரசியல் யோசனைகள் குறித்த உங்களது கட்டமைப்புத் திட்டத்தை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் இருவரும் நாடு எதிர்கொள்ளும் இந்த முக்கியமான பிரச்சினை குறித்துத் தீவிர கவனம் செலுத்துவீர்கள் எனக் கருதுகிறோம்.

எமது அரசமைப்பு தொடர்பாக இடம்பெற்ற பல விவாதங்கள், பல யோசனைகள் உங்களுக்கு உங்களின் அரசியல் திட்டத்தை மக்களின் கவனத்திற்கு முன்வைப்பதற்கு உதவியாக அமையும். நாங்கள் இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை இழக்கக்கூடாது.

மேலும் இது சிறுபான்மைக் குழுக்கள் சார்பில் விடுக்கப்படும் வெறும் மன்றாட்டம் அல்ல என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம். பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த நாங்கள், எமது சுய கௌரவத்திற்காகவும், சுய பெறுமதிக்காகவும் அனைத்து இலங்கையர்களுக்கும் நீதியான, சமமான சமூகமொன்றில் வாழ்வதற்கான விருப்பம் மற்றும் தேவைக்காகவும் இக்கருத்துக்களைத் தங்களிடம் சமர்ப்பிக்கிறோம். - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''வெள்ளி மன்றம்'' புத்திஜீவிகள் குழுவில் பின்வருவோரும் அங்கம் வகிக்கின்றனர்.

ஜெசிமா இஸ்மாயில், சாவித்ரி குணசேகரா, கே.நீலகண்டன், பேராசிரியர் டபிள்யு.டி.லக்ஷ்மன், ரஞ்சித் பெர்னாண்டோ, சித்தி திருச்செல்வம், டாக்டர் ஏ.ஸி. விஸ்வலிங்கம், மனோரி முத்தெட்டுவேகம, நாமல் வீரமுனி, பேராசிரியர் கணநாத் ஒபயசேகரா, பேராசிரியர் அர்ஜுனா அலுவிகார, டாக்டர் அனுரா ஏக்கநாயக்கா, மகேன் தயானந்தா, டாக்டர் தீபிகா உடகம, சூரியா விக்கிரமசிங்கா, சுரேஷ் டி மெல், பிரஷன் டி வைசர், அகிலன் கதிர்காமர், டாக்டர் என்.செல்வி திருச்சந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி ஆர் சுரேந்திரன், வி. ஜெயரத்ன.

(அ-சி)

## நீதியும் சுதந்திரமுமான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நிலையில் தேர்தல் ஆணையாளர் உள்ளார் என இக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அரச அழுத்தங்கள் காரணமாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை முன்னெடுக்க முடியாத நிலையில் தேர்தல் ஆணையாளர் உள்ளார்.

இதனால் அவரின் முயற்சிகள் பயனற்றதாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இடம்பெற்றுவரும் தேர்தல் வன்முறைகள் மற்றும் அரசின் செயற்பாடுகளால் சுதந்திரமான, நீதியான தேர்தலுக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் எதிர்க்கட்சி வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**வடக்கில் பணிபுரியும் இராணுவத்தினரை வெளிநாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு**

தேர்தல் நடவடிக்கைகள் முடிவடையும் வரை அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளின் இடமாற்றங்களை நிறுத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளபோதிலும், வடக்கில் சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களை உடனடியாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு கட்டாய விடுமுறைகள் வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் கொடுத்து சமுர்த்திப் பயனாளிகளின் வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் முறையான அதிகாரிகளின் ஆலோசனையைப் பெறாமல் அரச ஊடகங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளர் தலையிட வேண்டும்.

பொலிஸார் தற்போது வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதால் இதற்காக இராணுவத்தினரின் உதவியையும் பெற்றுக்கொள்ளவேண்டும். - என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**போலி ஒப்பந்தம் பத்திரம்**

இதேவேளை -

எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிற்கும் இடையில் இரகசிய உடன்படிக்கையொன்று கைச்சாத்தாகியுள்ளது எனப் பொய்ப் பிரசாரமொன்றைச் சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுப்பதற்காக அரசு போலி ஒப்பந்தப் பத்திரமொன்றைத் தயாரித்துள்ளது என திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கைப் பிரித்துத் தருவார் என சரத் பொன்சேகா ஒப்புக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ள இந்த ஆவணம் ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் அச்சிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர்களான சோமவன்ஸ அமரசிங்க, ரில்வின் சில்வா ஆகியோரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர் என்ற பிரசாரத்தை முன்னெடுக்கும் வகையில் இந்தப் போலி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ள உடன்படிக்கையில் சம்பந்தன் எவ்வாறு கையொப்பமிடுவார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொரளை கட்டடத் தொகுதி ஒன்றின் 52ஆவது கட்டடத்திலேயே இத்தகைய போலி ஆவணம் அச்சிடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கையானது சிங்கள, பௌத்த மக்களிடத்திலே சந்தேகம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே முன்னெடுக்கப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைக்கல்ல, விசாரணைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றார்.

கனகசபை தேவதாசன் என்ற இந்தக் கைதி கடந்த 19ஆம் திகதி முதல் தண்ணீரும் அருந்தாமல் உண்ணாவிரதத்தைத் தொடர்வதால் அவரது உடல் நிலை மோசமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக 'நிலை விளக்கம்' என்ற தலைப்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சட்ட நடவடிக்கையின்றிச் சிறை வாழும் நானுமோர் ஊடகவியலாளன் என்பது தாங்கள் அறிந்ததே. பத்திரிகைத்துறை மற்றும் சினிமாத் துறையுடன் நெருக்கம் கொண்டிருந்தவன். அடைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மீறப்பட்டுவரும் எனது அடிப்படை உரிமையை அடைவதற்காக அறவழியில் போராடுகின்றேன்.

**என்மீது சட்ட நடவடிக்கையா? வழக்கை தமிழில் விசாரிக்க வேண்டும்**

எனது கோரிக்கை சட்டத்துக்குப் புறம்பானதோ, நடைமுறைச் சாத்தியமற்றதோ அல்லது கற்பனை வாதமோ அல்ல. என்னை விடுதலை செய்யுமாறோ, பிணையில் விடுவிக்குமாறோ ஸ்ரீலங்கா நீதித்துறையிடம் நான் கோரவில்லை. எனக்குரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அந்த வழக்கை தமிழ் மொழிமூலம் விசாரிக்கவேண்டும் என்பதே எனது இந்நிலைப்பாடாகும்.

யுத்தத்தின் பெயரால் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பாடசாலை மாணவர்கள் உட்பட அப்பாவி மக்கள் சிலரின் படுகொலைக்குத் தெரிந்தோ தெரியாமலோ நானும் காரணமாகி விட்டேன். இக்கோணத்தில், 01.01.2010 முதல் நான் மேற்கொண்டுவரும் சாகும் வரை உண்ணாவிரதம் எனக்கான எனது சுய தண்டனையும் கூட.

அதிகாரத்திலிருக்கும் அல்லது அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் பேரினவாதிகளாலும் அவர்களது புகழ்பாடிகளாலும் என் போன்றவர்களை ஒருபொழுதும் மதிப்பிட முடியாது. சிங்களப் பேரினவாத அகராதிப்படி தன்னுரிமை கோரும் தமிழ்த் தேசியத்தின் சுதந்திர உணர்வுக்குப் 'பயங்கரவாதம்' அல்லது 'பிரிவினைவாதம்' என்று பொருள்.

**தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் பழிவாங்கல்**

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று காரணங்காட்டி என்னையும் என் போன்றவர்களையும் சட்டத்துக்குப் புறம்பாகப் பழிவாங்கும் நோக்குடன் - அதாவது சட்ட நடவடிக்கை ஏதுமின்றி - நீண்ட காலம் அடைத்து வைத்திருக்க ஸ்ரீலங்கா அரசு விரும்புகிறது. பொருந்தாப் பொய் வாக்குறுதி மற்றும் போலிப் பிரசாரம் என்பவற்றைக் கைக்கொண்டு அரசு தடையின்றித் தொடர்கின்றது. நிதான சிந்தனையுள்ளோருக்கு இது நன்கு புரியும்.

இத்தகைய மக்கள் விரேத அரசியலுக்கு ஆட்படுவதைவிட மரணித்துப் போவது மேல் என்பதே எனது எண்ணம். எனது இம்முடிவு ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் நல்ல பாடமாக அமையட்டும்.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்களுக்குத் தங்கள் செய்தி ஊடகம் வாயிலாக ஏதேனும் சொல்வீர்களாயின் அது காலத்தால் செய்த பேருதவியாக அமையும் - என்றுள்ளது. (சி)

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்கள் சுதந்திரமாகக் கருத்துகளை வெளியிடுவதற்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் வாக்குகளை உரிய முறையில் பயன்படுத்த முடியாத சந்தர்ப்பம் ஏற்படுவதாகவும் மன்றம் கவலை தெரிவித்துள்ளது.

இதனால் நீதியானதும், சுதந்திரமானதுமான ஒரு தேர்தலுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் சகல தரப்பினரிடமும் வேண்டுகோள்விடுத்துள்ளது.(அ-சி)

## முறிகண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுடன் அவர்கள் கலந்துரையாடி, கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

அதன்பின்னர் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலில் வழிபாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த ஐ.தே.கட்சிப் பிரமுகர்களின் வாகனம் மீது, முறிகண்டிக் கோயிலுக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வீதியில் நின்ற வாகனம் ஒன்றில் இருந்த மூவர் இத்தாக்குதலை நடத்தினர் என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட முகவருமான ஜயலத் ஜெயவர்த்தன தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸிலும் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வன்முறை தொடர்பாக யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் எந்தவித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லையென்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார். (அ-சி)

## தடுப்புக் காவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றனர் அல்லது புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இரண்டு மலையக இளைஞர்கள் உட்பட இருபத்தினான்கு பேர் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர் எனவும், 28 பேர் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

மேலும் ஐம்பது பேர் இன்று விடுவிக்கப்படுவர் அல்லது புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வெலிக்கடைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இணைப்புக் குழு ஏற்பாடு செய்துள்ள இந்த மறியல் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வெலிக்கடைச் சிறைச்சாலை முன்பாக இடம்பெறவுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுவிப்பது, அவசரகாலச் சட்டத்தை நீக்குவது மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது போன்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த நிலையில் முன்னெடுப்பதற்காகத் தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகிய தரப்புகள் இணைந்து அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இணைப்புக் குழுவை ஏற்படுத்தியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்புத்துறையில் கும்பாபிஷேக தின நிகழ்வு

கொழும்புத்துறை, ஜன. 21

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயம், தண்டாயுதபாணி ஆலயம் போன்வற்றின் கும்பாபிஷேக தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து நண்பகல் மகேசுவர பூஜையும் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு விநாயகப் பெருமான் வீதி உலாவருதலும் நடைபெறும். (1-224)

## கண்காணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகளும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை வரவுள்ளனர் என உதவித் தேர்தல் ஆணையாளர் பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்ற வேளை, இவர்கள் மாவட்டம் ஒன்றுக்கு இருவர் என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபடுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியமும், ஐ.நாவும் இந்தத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்மஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 வயது முதல் 36 வயது வரையிலான 23 பேர் இவ்வாறு கிளர்ச்சியில் ஈடுபட்டனர் என ஆஸ்திரேலியப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த நபர்கள் கிறிஸ்மஸ் தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அளவுக்கு அதிகமான அகதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காரணத்தினாலேயே இவ்வாறான கிளர்ச்சிகள் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. (சி)

## தேர்தல் வன்முறைகள் அதிகரித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான வன்முறைகளில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து வன்முறைகளால் இத்தேர்தல் பாதிக்கப்படலாம் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடமிருந்து எதிர்பாராத கடும் சவாலை சந்திக்கிறார்.

இதன் காரணமாக ஜனவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் இருவரினதும் ஆதரவாளர்கள் மத்தியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

**மிகவும் மோசமான நிலை உருவாகின்றது**

இரு வேட்பாளர்களினதும் ஆதரவாளர்கள் மத்தியிலான வன்முறைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தலின் முக்கிய அம்சமாக வன்முறைகள் அமையலாம் எனக் கண்காணிப்பு அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

அதிகளவு தேர்தல் வன்முறைகளை நோக்கித் தேர்தல் பிரசாரம் செல்வது மிகவும் மோசமான விடயம் என 'கபே' என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

சாதாரண மக்கள் வாக்களிப்பதன் மூலம் காயங்களுக்கு உள்ளாக விரும்பவில்லை. நாம் ஏன் மரணத்தையும், காயங்களையும் சந்திக்கவேண்டும் என அவர்கள் சிந்திக்கக்கூடும் என்றும் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு சிந்தித்தால் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் விடயத்தில் அவர்களுடைய விருப்பம் இறுதி முடிவுகளில் பிரதிபலிக்காது என்றும் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டினார்.

**அதிக அளவு வன்முறைகளுடன் சம்வங்கள்**

வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு சம்பவமும் அதிகளவு வன்முறை மிகுந்ததாக மாறுகின்றது என்றும் 'கபே' அமைப்பு தெரிவிக்கின்றது.

ஜனவரி 12, 13 ஆம் திகதி இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பும், மோசடியும், முறைகேடு மிகுந்ததாகக் காணப்பட்டதாகக் கடந்தவாரம் அறிக்கையொன்றை வெளியிட்ட 'கபே' அமைப்பு, தேர்தல் தினமன்று வாக்களிப்பு நீதியாகவும், நேர்மையாகவும் நடக்கும் என்பதற்கான சாதக அறிகுறியாக இது அமையவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அரசு தேர்தல் வன்முறைகளைக் கண்டித்துள்ளதுடன், குற்றவாளிகளுக்கு எதிராகத் துரிதநடவடிக்கையை எடுக்கப்போவதாகவும் உறுதியளித்துள்ளது.

எனினும், தேர்தல் கண்காணிப்பாளர்களோ வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசு சிறிதளவு கூட நடவடிக்கை எடுக்கவில்லை என்கின்றனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களைச் சிறிய சம்பவங்கள் எனத் தெரிவித்து அவை தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்குப் பொலிஸார் மறுக்கின்றனர் என்று மற்றுமொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்' தெரிவிக்கின்றது. இத்தகைய விடயங்கள் சம்பந்தமான விசாரணைகள் வேகமாக முன்னெடுக்கப் படுவதில்லை என்றும் அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் முன்னணித் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கின்றது.

அதிகரித்துவரும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளோ அல்லது அதிகாரிகளோ நடவடிக்கை எடுத்தமைக்கான அறிகுறிகள் எதுவுமில்லை என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது. (அ-சி)


**தோட்டப் பராமரிப்பாளர் தேவை**

நல்ல தேகாரோக்கியமுள்ள
(வயது 25 - 45)
தோட்டப் பராமரிப்பாளர் உடன் தேவை
முன் அனுபவம் விரும்பத்தக்கது
சுய விவரக் கோவையுடன் 22.01.2010
வெள்ளி பி.ப. 2 மணி - 4.30 மணி
வரை நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
TILKO JAFFNA CITY
HOTEL (PVT) LTD.,
70/06 K.K.S.ROAD, JAFFNA
T.P. 021 222 5969


**விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வு**

இன்று (21.01.2010) வியாழக்கிழமை யாழ்.மாவட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறவிருந்த செயலமர்வு வேம்படி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

வே.தி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.


**தமிழ் மொழியும் இலக்கியமும்**

தரம் 8, 9, 10, 11 ஆம் வகுப்புகளுக்கான
தமிழ்மொழியும் இலக்கியமும் சிறப்பாக
கற்பிக்கப்படும்.
ஆசிரியர் Mr.V.A.YOHAN
தொடர்பு:- 077 8736870

**-விற்பனையாகிறது-**
**(SPEED MARKETING)**

தரம்-9-2010 புதியப்படம்
★ விஞ்ஞானம்-2 வகை
★ கணிதம்-
★ தமிழ்-
★ வரலாறு-2 வகை
★ வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும்
★ புவியியல்- விற்பனையாகின்றது
அன்னை புத்தகசாலை யாழ்ப்பாணம்.
222 9881
குறிப்பு: மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்.

**தேவை**

விசா வழங்கும் அலுவலகம் ஒன்று இயங்குவதற்கு 500-750 சதுர அடி பரப்பளவுள்ள இடம் வாடகைக்குத் தேவை.மின் மற்றும் தண்ணீர் வசதி கொண்டதும், நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கு உட்பட்ட இடம் எதிர் பார்க்கப்படுகின்றது.
தொடர்பு கொள்ளவும்:
Mr.Jayakumar - 0718724194

**Commerce A/L 2012**
(English medium)
Begins on
Jan 23 at 7 a.m
ஜனவரி 23 காலை 7 மணி
DMI Jaffna

**உடனடி வேலை வாய்ப்பு**

பருத்தித்துறையில் இயங்கும் கணனிக் கல்வி நிறுவனத்திற்கு
(Computer Center)
Computer Mathematics, Computer Programming in VB and Pascal Accounting Packages and Computer Hardware
கற்பிக்கக்கூடிய விரிவுரையாளர் தேவை.
Jeyantha Computer Park
Thumpalai Road, Sivankovilady
Point Pedro
Phone: 021 742 9015, 021 742 9016
Mobile: 077 748 2339
Email: tsenthan @ yaoo.com

Economics
AL - 2012
பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பம் 22-01-10 வெள்ளி 4.00
S.வரதராஜன் B.A(Hons)
No #215, old Park Road, Jaffna (கச்சேரிக்கு அருகாமையில்) ☎ 021-7451755

**பிரத்தியேக வகுப்புக்கள்**
க.பொ.(உ.த) கணக்கீடு
யாழ்.நகரிலும்,
சாவகச்சேரியிலும்
T.சுதர்சன் B.B.A
தொடர்புகளுக்கு:- 0770708598
(94010)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி[illegible] கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org